# திருநெறிய பண்ணிசைப் பாடல்கள்



ஆசிரியர் திருச்சிற்றம்பலம் சுந்தரமூர்த்தி
அவர்களின்


**90 வது ஆண்டு அகவை நிறைவின் வெளியீடு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநெறிய பண்ணிசைப் பாடல்கள்

தொகுப்பு:

திருச்சிற்றம்பலம் சுந்தரமூர்த்தி
( ஓய்வு பெற்ற ஆசிரியர், மகாஜனாக் கல்லூரி, தெல்லிப்பளை )

பிரமாதி வருடம் புரட்டாதி மாதம்
செப்டெம்பர்
1999

168

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**சைவத்திரு. தி. சுந்தரமூர்த்தி திருவாட்டி தையல்நாயகி**

பூ மஞ்சள் குங்குமமும் பொலிந்தி லங்கும்
புகழ்தெல்லி யூரினிலே தொண்ணூ றாண்டு
சேமமுடன் வாழ்ந்திடுதம் பதிய ரான
சுந்தரமூர்த் திதையல் நாய கியாள்
பூமகிழ அறுபத்து ஐந்து ஆண்டு
பொங்கிமகிழ் இல்லறத்தை புரிந்தார் வாழ்வில்
நாமகிழ மக்கள் பேரர் பூட்ட ரோடு
நானிலத்தில் குருநாதர் அருளால் வாழி.

சாகித்தியசாகரம்
பிரம்மஸ்ரீ. ந. வீரமணி ஐயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் ஆதீனகர்த்தா மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் அவர்களின்

# ஆசியுரை

சூரியன் இன்றேல் பகலில்லை. சந்திரன் இன்றேல் நிலா இல்லை. சூரிய சந்திரர்களை தமது வல இடக்கண்களாகக் கொண்டு எப்போ சிவன் தோன்றினாரோ அன்றே சைவமும் தமிழும் தோன்றிற்று. தமிழ் அருமையானதோர் சிவபாஷை. அதனை 'ஆராய வேண்டின் சிவவழிபாடு மூலம் பெற்ற சிவனருள் வேண்டும். சிவ வழிபாட்டை அனுசரிக்க அக்னி வழிபாடு அவசியமாகிறது. சிவனது நெற்றிக்கண். எனவே ஒளிதரு நெருப்பே பிரபஞ்சத்தின் மாட்சிமைகளுக்கு உதவுமென்ற கொள்கை ஜகத்சிருஷ்டியோடு அக்னி ஆரம்பமாயிற்று அன்றிலிருந்து இன்றுவரை அக்னி வழிபாடும், அதனூடே இறைவனை நினைந்து கொள்ளவும், அக்னி சார்போடிணைந்த கிரியைகள் மூலம் கடவுட்தன்மையை உணரவும், உணர்ந்ததுபோல வாழ்வின் வளங்களை வகுக்கவும், மனிதன் பழகிவிட்டான். அக்னி வழிபாடு பல ரூபங்களில் பரவலாயிற்று தொல்காப்பியம் எழுதப் படுவதற்கு முன்னதாகவே முத்தி வணக்கமும் ஒருவகை வழிபாடாயிற்று. கொடிநிலை, கந்தழி, வள்ளி இவ்வழிபாடு பொதிய மலையிலிருந்து இமயம்வரை பரவியிருந்ததென்பதனை சேரமான் பெருஞ்சோற்றுதியஞ் சேரலாதனை முரஞ்சியூர் முடிநாகராயர் பாடிய புறப்பாட்டில் வருகிறது.

"சிறு தலை நவ்விப் பெருங்கண் மாப்பிணை
யந்தியத்தண ரருங்கடனிறுக்கு
முத்தீ விளக்கிற் றுஞ்சும்
பொற்கோட்டிமயமும் பொதியமும் போன்றே"

(புறம் – 2ம் செய்யுள்)

சிவனை அறிவதற்கு ஞானம் வேண்டும். ஞானம் கைகூட சரியை கிரியை, யோகம் வழிபாடுதான் துணைதரும், சரியை, கிரியை, யோகம் செயற்பட வேண்டும் என்பதற்கே இறைவன் வேத சிவாகமங்களை அருளினார். இவையே உண்மையான சைவநெறி மார்க்கங்களை உணர்த்தக் கூடியவை.

வேத சிவாகமங்களை உணர்ந்து கொள்வதற்கு உதவுவதே இதிகாச புராணங்களும் தேவார திருவாசகங்களும் ஆகும். ஆதியில் இவையெல்லாம் செவிவழி கற்ற கல்வி ஆகும். இது படிப்படியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்கல்வி ஆகி, மெல்ல மெல்ல மின்னியல் கல்வியாகவும் பரிணாமம் பெறப் போகின்றது. குரு சிஷ்ய முறையில் வாழ்வின் மேம்பாட்டிற்கும் புனிதத் தன்மைக்கும் தொடர்ந்து வந்த வழமை அதுவும் வர்ணாச்சிரமதர்ம வாழ்விற்குள் பெருகிய முறை காலம் செல்லச் செல்லப் பள்ளியிற் பயிலும் வழமை முன்னேற்றிற்று. இந்த முன்னேற்றம் வர்ணாச்சிரம தர்மங்களுக்கு ஆப்பும் வைத்து ஈனர்களின் தத்துவங்கள் போதிக்கப்பட்டு, இப்போ சிவசின்னங்களான விபூதி உருத்திராக்ஷம் அணியாமலும் சிவ நெறிக்கும் நேர் எதிரியானவர்களும், சிவனை தூஷிக்கும் மிலேச்சர்களும் சைவசித்தாந்தம் போதிக்கும் அளவுக்கு விரிவு கண்டு விட்டது. குருசேவை என்பன பின்னால் தள்ளப்பட்டு. உபாத்தியாயர் என்றும் ஆசிரியர் என்றும் தடுமாறி இப்போ ''மாஸ்டர்'' என்று கலியுக சாயலுக்குள் அமிழ்ந்து பள்ளிக் கல்வி ஆபாசமாக முன்னேற்றங் காண்கிறது. இதனைப் பழந்தமிழ் சிவச்சார்யர்கள் பார்த்து, எதுவுஞ் செய்ய முடியாதவாறு கவலையோடு கண்ணீர் மல்கி சிவனிடமே விண்ணப்பிக்குஞ் சமாசாரங்களுமுண்டு.

சைவ மணங்கமழ சிவ சிந்தனைகளோடு சிவதர்மங்களை ஆற்றி பிரபஞ்சத்தை சிவமயமாக்கி, நல்வாழ்வு மூலம் சிவனடி சேரும் வாய்ப்பைக் கொண்டிருந்த ஞாலம், வினைப்பயனோ அறியோம், மெல்ல மெல்ல தக்கனது மரபினில் தோற்றங் கொண்ட மாஸ்டர்களாலும், உலோகாயுதங்களை உறுஞ்சி அகமகிழும் நச்சுக் கிருமிகள் போன்ற பறங்கியர்களது வரவாலும், இவற்றைப் பின்பற்றியோரது நெறிகெட்ட வாழ்க்கை வளத்தாலும் இச் சிவபூமி பெருஞ்சாத்தான் வசம் சாயலாயிற்று. சமய நெறிகளும், சமயச் சிந்தனா மார்க்கமும், சிவதர்மங்களும் நவீனமாக்கப்பட்டு நொந்து போயிருந்த போது தான் ஆறுமுக நாவலர் அவதரித்தார். அவரது முயற்சிகளின் பயனாக சைவ மாாக்கங்கள் தழைத்தன. ஆறுமுக நாவலரைப் பின்பற்றி திருமூர்த்திகளான ஆசான்கள் பலர் தோன்றினர். பள்ளியிற் பயில்வது கல்வியெனக் கொள்ளலாகாது. இது ஓர் வரையறைக்குட்பட்ட தொழில் தேடும் தொழிற்சாலைப் படிப்புப் போன்றது, உண்மையான கல்வி எதுவெனில், அறியாமையை அகற்றி, நல்லறிவை வளர்த்து யாம் ஞானக்கண் மூலம் வாழ்வின் வளங்களை வளமாக்குவதே. இதுவும் நாவலரவர்களது கொள்கை இத்தகைய கருத்துக்களை முன்னெடுத்து வாழும் சைவ குருமார்களால்தான் ஏதோ இந்த ஞாலம் தப்பியிருக்கிறது. இத்தகைய மாண்பு மிகு மேன்மைகளை தன்னகத்தே கொண்டுள்ள குருசிரேஷ்டர்களுள் ஒருவர்தான் தெல்லிப்பழை யாமா வளவு தந்த ஸ்ரீ சுந்தரமூர்த்தி ஆவார். கடந்த தொண்ணூறு ஆண்டுகளாக அவர் சிவமயமான சூழலில் வாழ்ந்து சிவ சிந்தனைகளை வளர்த்தும் சிவ தர்மங்களைப் புரிந்தும் சிவனருள் பெற்று வரும் அறிவாளர். இவரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரம்பரை அத்தகையதே. இவர்கள் போன்றோர் இருப்பதால் தான் அற்ப சொற்ப மழையும் வர்ஷிக்கிறது. மிலேச்சர்களது பெருந் தொல்லைகளும் அகல்கிறது. இறைவன் கூட இவர்களது செய்ற்பாடுகளை ஏற்று அவர்கள் விரும்பிய வரங்களையும் வர்ஷிப்பதும் ஓர் தவப்பயனே. சுந்தரமூர்த்தி அவர்கள் கிருஹஸ்தாச்சிரம தர்மத்தைக் கூட அறுபத்தைந்து வருஷ காலமாக நடாத்த திருவருள் பெற்றுள்ள பேற்றை என்னென்று கூறுவது. இவர்கள் சிவ நெறியாளர்கள், சிவமயமானவர்கள் சிவபுண்ணியச் செல்வர்கள்.

'இயல் உண்மை அறிவு இன்ப வடிவாகி நடிக்கும் மெய்ப் பொருளாம் சிவ மொன்றே என்றறிந்தேன்' என்று மனப்பாடத்தோடு வாழும் முறையை நாமனைவரும் பின்பற்றினால் இடர்கள் ஏதுமின்றி ஒருவித குறையுமின்றி நன்றாகவே நாம் வாழலாம் என்பது உண்மை.

மாவைக் கந்தனை என்றுமே மறவாத ஸ்ரீ சுந்தரமூர்த்தி தம்பதியினருக்கு மாவைக்கந்தன் நிறைந்த திருவருட் செல்வங்களை வாரி வழங்கி அவர்களை இரட்சித்து நீடூழி வாழவைக்க வேண்டும் எனப் பிரார்த்தித்து யானும் அதன் சார்பில் ஆசிர்வதிக்கிறேன். நீவிர் நீடூழி வாழ்வீர்களாக.

மஹாராஜஸ்ரீ
கு. து. ஷண்முகநாதக் குருக்கள்

மாவையாதீனம்
02-09-99



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம்

# ஆசியுரை

பெருமதிப்பிற்குரிய திருச்சிற்றம்பலம் சுந்தரமூர்த்தி ஆசிரியர் அவர்கள் சைவ பரம்பரையில் உதித்தவர். நல்லாசிரியராகப் பல்லாண்டு காலம் சேவை புரிந்து இளைப்பாறியவர். தமிழ் மொழியில் மிகுந்த பாண்டித்தியம் பெற்றவர். இறைபக்தி மிக்கவர். தீட்சைகள் பெற்றுச் சைவ ஆசாரங்களை இன்றுவரை பேணிப்பாதுகாத்து வருபவர். குருநாதசுவாமி அவரது குல தெய்வம். எமது ஆலயத்துடனும் பாலர் ஞானோதய சபையுடனும் நெருங்கிய தொடர்பு உடையவர். திருப்பணி வேலைகள் நடைபெற்ற காலத்தில் முன்னின்று உழைத்தவர். எதிர்காலத்தை முன்னிட்டுப் பல ஆலோசனைகளை நல்கியவர். எவருக்கும் தீங்கு நினைக்காத சுபாபம் உடையவர். சிறியேனுக்கு ஆசாரி அபிஷேகம் நடைபெற்ற போது அஞ்ஞான்று விளங்கிய பெரியார்களுடன் தாமும் ஒருவராக முன்னின்று நிறைவேற்றி வைத்த பெருமைக்குரியவர்.

பெரியார் சுந்தரமூர்த்தி அவர்களுடைய பிள்ளைகள் அனைவரும் காசிவிநாயகர் ஆலய வளர்ச்சிக்கு ஆதரவு நல்கி வருபவர்கள். இவரது மனைவியார் சுகதேகத்துடன் விளங்கிய காலத்தில் தினமும் காசிவிநாயகரை வழிபடத் தவறமாட்டார். ஆசிரியரின் மகள் கலாதேவி பொன்னம்பலம், பேரன் பரமநாதன் சேயோன் ஆகியோர் ஆலயவளர்ச்சிக்கு அருந்துணை புரிந்து வருகின்றார்கள். திருமுறைகளில் ஈடுபாடுகொண்ட இப்பெருந்தகை பன்னிரு திருமுறைகளையும் தொகுத்து வெளியிடுவது வரவேற்கத்தக்கது. இத்தொண்டு சிறக்க ஆசி வழங்குகின்றேன்.

சி. கணேசலிங்கக் குருக்கள்
*பிரதம குரு*

*காசிவிநாயகர் தேவஸ்தானம்*
*தெல்லிப்பளை.*
*16-09-99*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
இலக்கிய கலாநிதி
பண்டிதர் மு. கந்தையா B. A. அவர்கள்
வழங்கிய

# ஆசியுரை

# தொண்ணூறும் பின்னாக முன்னோக்கும் முது நண்பர்

"யாண்டு பலவாக நரையில வாகுதல்" மனித உயர் விழுமியங்களில் ஒன்றாகப் பேசும் புறநானூறு. அநேக வித அனர்த்தங்களினிடையில் ஏனோ தானோ என மக்களினம் ஒருவாறு உயிர்த்து வரும் இன்றைய சூழ்நிலையிலும் அவ் விழுமம் செழும விளங்கும் அன்பர் ஒருவரைக் கொண்டாடும் வாய்ப்புப் பெற்றிருக்கும் நாம் உண்மையிற் பாக்கியசாலிகளே.

வரலாற்றுப் புகழ்பெற்ற சைவ இராஜதானியாம் மாவிட்டபுரத்துக் கந்தசுவாமியார் அருளாட்சியில் சைவகலாசார விளக்கம் மிக்கொளிர்ந்து அவர் தொண்டு தொழும்புகளாகிய உபயங்களிற் சிரத்தை அன்புற்று மிளிர்ந்த தெல்லியூர்ச் சைவமரபின் இன்றைய 'வாரிசு' நண்பர் சுந்தரமூர்த்தி.

உத்தமமான சைவத்தமிழ்ப் பண்பாட்டரவணைப்பில் கற்றுத் தேர்ந்த நல்லாசிரியரிடம் பெற்ற கல்வி கேள்விகளிற் சிறந்து தகுதிபெற்ற தமிழாசிரியனாய் மாட்சிமை மிக்க மனையறவாழ்விற் பாரிய பொறுப்புக்களைத் தாங்கியிருக்கும் நிலையிலும் தமிழ் சைவத் தொண்டுகளையும் ஏன்? சங்கடந் தரும் சமூகத் தொண்டுகளையுங் கூட அன்றாட வாழ்க்கைக்குரிய அவசிய அனுசரணைகளின் முக்கிய அம்சங்களாக அரவணைத்துக் கொண்டு வாழ்ந்தமை அவர் சார்பிலான புதிராகும்.

கல்வித் தொண்டு என்ற நிலையில் தெல்லிப்பழை சைவப் பிரகாச வித்தியாசாலை, மகாஜனாக் கல்லூரி என்பவற்றில் அவர் நிகழ்த்தியுள்ள அருந் தொண்டுகளும், சமயத் தொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரீதியில் அவர் குலதெய்வமான குருநாதசுவாமி கோயில், தெல்லி-காசிவிநாயகர் கோயில், துர்க்கா பரமேஸ்வரி கோயில், மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் என்பனவற்றில் அவர் புரிந்துள்ள தொண்டு தொழும்புகளும், சமூகத் தொண்டின் பேரில் தெல்லி-கூட்டுறவுப் பண்டகசாலை, மத்தி ஐக்கிய நாணய சங்கம், கூட்டுறவு வைத்தியசாலை, இணக்க சபை என்பவற்றில் அவராலான அரும்பெருங் கைங்கரியங்களும் மற்றும் தெல்லி - இந்து வாலிபர் சங்கம், இந்து சமய விருத்திச் சங்கச் சேவைகளும் மகத்தானவை.

தெல்லிப்பழை துர்க்கா பரமேஸ்வரி கோயில் தொண்டர்க்கு முதுதொண்டராய் முன்னின்று இவர் செய்துவந்த சுவாமி சேவைகள் பல. தேவஸ்தானத் தலைவி துர்க்கா துரந்தரியின் திருப்திக்கிணங்க அங்கு தொடர் நிகழ்வுகளாக் இவர் பொறுப்பேற்று நடத்திவந்த திருமுறை முற்றோதல், புராணபடனங்கள் அத்துறையில் பயில்வார்க்கு முன்மாதிரியானவை.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் திருவிழாக் காலத்தில் கார்த்திகை விழா, தேர்விழா, தீர்த்த விழாக் காலங்களில் பெருமளவில் திரளும் அடியார்களின் தாகசாந்திப் பொருட்டு மேற்கு வீதியில் இவர் தந்தையார் நடாத்திவந்த தண்ணீர்ப்பந்தல் தருமங்களில் இளமை தொட்டே இவர் ஈடுபாடுற்று கிரமமாகத் தொண்டாற்றி வந்தமையும் இவர் சிறப்பாகும்.

இயல்பான தமது தமிழ் சைவ உணர்வு இவ்விதத் துறைகளிலெல்லாம் ஈடுபட்டுழைத்தற்கு வேண்டும் முதிர்பற்றாக விளைதற் கேற்புடைத்தாம் வண்ணம் 1960 களில் மகாஜனக் கல்லூரியில் நடைபெற்ற பெரியபுராண வகுப்பிலும் சிவஞானசித்தியார் வகுப்பிலும் இவர் ஆர்வங் குன்றாது ஈடுபட்டு வந்தமையும் குறிப்பிடத்தகும் விசேடமாகும்.

ஆசிரியர் சுந்தரமூர்த்தியின் இத்தகைய விசேட பொதுநலப் பணிகளினால் பாடசாலை மட்டத்திலும், பொதுமக்கள் மட்டத்திலும் பயன்பெற்றுயர்ந்தோர் வெகுபலர். ஊரார் பிள்ளையை ஊட்டிவளர்த்தால் தன்பிள்ளை தானே வளரும் என்பதற்குப் பொருந்த இவர் சற்புத்திர, புத்திரிகள் சிறந்த புத்திவிவேகமும் கல்விச் சிறப்பும், ஆக்க ஊக்கத்திறன்களும், அதில் பேறுகளும் மிக்கோராய் செழிப்புற்றிருத்தல் கண்கூடு.

அறிவறிந்த புத்திரபுத்திரிகளாம் இவர்கள், இவரது 85வது நிறைவில் இவர்தம் மனைமங்கல வாழ்வின் அறுபதாண்டுப் பூர்த்தியும் பொருந்தக்கண்டு பெருவிழாவெடுத்து பெற்றோரிருவரையும் பொற்றவிசேற்றிப் பூசித்து வணங்கி ஆசிபெறக் கண்டகாட்சி இன்றும் நெஞ்சை விட்டகலாத மங்கல நிகழ்வாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிர்கண்டசுவை தெவிட்டாது இப்போது 90 ஆவது வயது நிறைவிலும் பெற்றோரைத் தம்பதிகளாக இருத்திப் பூசிக்கும் முயல்வில் முனைந்து நிற்கின்றனர்.

இம்மங்கல நிகழ்வின் ஞாபகமாக வெளியிடப் பெறுகின்ற "திருநெறிய பண்ணிசைப் பாடல்கள்" என்னும் இத்திருநூல் பன்னிரு திருமுறைகளிலும் தமிழிலுள்ள சைவ புராணங்களிலு மிருந்து பதிகங்களாகவும், தனியன்களாகவும் தெரிந்தெடுக் கப்பட்ட தெய்வீகப் பாக்கள் இந்நூலில் அடங்குகின்றன. சமகால நோக்கில், இந்நூற்றொகுப்பில் இவர்கள் ஈடுபட்ட விவேகம் பெரிதும் பாராட்டத்தகும்.

சைவாலயங்களின் சார்பிலும் மற்றும் சைவத்தாபனங்களின் சார்பிலும் சைவத்தின் புறமுகத்தோற்றம் வெகுவாக மெருகூட் டப்பட்டு வரும் அதேவேளை அகமுகம் வெகுவாக மாசடைந்து வருதல் பகிரங்க இரகசியமாகும்.

உண்மைச்சமயி ஒருவன் தன் சமயப் பெயர் விளக்கம் தெரிந்தவனாய், தான் வழிபடுவதற்குரிய தெய்வம், வழிபட வேண்டிய விதம், வழிபாட்டுநோக்கம், வழிபாட்டுப்பலன் என் பன பற்றிய திட்டவட்டமான தெளிவுள்ளவனாய் இருக்க வேண்டுதலை மறுப்பான் யாருமிலர்.

அதற்கெதிர், இன்றைய சைவசமூகத்தில் சைவம் என்றால் என்ன? அதில் வழிபடத்தகுந்த கடவுளர்யார்? வழிபடுவது எதற்காக? எப்படி? என்பனபற்றிய விளக்கங்கள் பெரும்பாலும் இல்லை. அவற்றுக்குச் சைவ உயர்மட்டத்தில் பெரும்பஞ்சம் இருத்தலும் கண்கூடு. இதனால் சைவத்தில் அயற்செல்வாக்கு கள் தாவிநிற்றல் சமகால நிகழ்வுகளாற் தெரியவருகிறது. இந் நிலையில், இந்த மந்தநிலை தெளிந்து உண்மைவிளக்கம் ஏற் படுதல் அவசியமென்பதை அறிவறிந்தார் யாவரும் ஒப்புவர்.

இதற்குரிய சாதனங்கள் மூன்று. சிவாகமம், சைவசித்தாந் தம், சைவத்திருமுறைகள் என அவை மூன்று. இவற்றுள் இன் றைய தேவைகளுக்குரிய பக்திஞான விளக்கங்களை இலகுவிற் பெறத்தருவனவாயுள்ளவை சைவத்திருமுறைகள். சைவத்திரு முறைகள் ஓதுவதிலும் நீரோட்ட மயமான உள்ளோட்டமயமா யிருப்பது "சைவம்". பெயர்ப்பொருள் விளக்கமாகிய ஆன்ம சிவதத்துவம். இச் சம்பந்தம் பற்றிய உணர்வு நமது வழிபாட் டுக் குரியவர் சிவனே என்ற உணர்வழுத்தத்தை ஏற்படுத்தும் சிவனையே முழுமுதல்வனாகக் கொண்டு வினைத்துயர் நீக்க வேண்டிய உண்மையன்பினால் வழிபடும் வழிபாடே சாதாரண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகப் பேறுகளையும் நிறையத்தரும் என்று அடிக்கடி நினைவுறுத்திச் சொல்வன திருமுறைகள். இது வழிபாட்டு நோக்கத்தைச் செவ்வையாக உணர வைக்கும்.

வழிபாட்டின்போது மனம் தன் போக்கில் அலைவிடாது தடுக்கும் பொருட்டு சிவன் திருநாமங்களையும், அவர் மகிமைகளையும் அவர் அருட்செயல்களையும் சொல்லிச் சொல்லி வழிபடும் வாய்ப்பைத் திருமுறைகள் தாராளமாக வழங்குகின்றன. இதன் மூலம் வழிபாட்டுச் சீர்மை நேர்படுவதற்கான வாய்ப்புண்டு.

இனி எவ்வழிபாடும் உரிய பலனளித்தற்கு இன்றியமையாத மெய்யன்பு மனித உணர்வில் ஏற்படக்கூடும் உருக்கங்கள் பல பல. அவற்றுள் உளப்பூர்வமாகச் சிவனைப் போற்றுங்கையில் எழக்கூடும் உருக்கமே மெய்யன்பு. திருமுறைகளைச் சொல்லச் சொல்ல மெய்யன்பு தானாகவே உருத்துவருதல் அனுபவ சித்தம் விசிறியை அசைக்க அசைக்கப் பவனம் இதமான மென்காற்றாய் அசைந்து வரக்காணும் அநுபவம் போன்ற ஒரு அநுபவம் அதுவாகும்.

இவை போன்ற பலவகை ஏதுக்களினால் சைவ உண்மை விளக்கத்துக்கும் உண்மையான ஆன்ம இலாபத்துக்கும் என்றென்றைக்கும் இன்றியமையாதனவாயிருப்பன திருமுறைகள் என்ற உண்மை நிறுவப்படும்.

சைவ சீலரான தம் அருமைத் தந்தையாரின் 90 வது ஆண்டு நிறைவு ஞாபகமாக (இத்தகைய அருமை வாய்ந்த) திருநெறிய பண்ணி சைப் பாடல்கள்) வெளியிடும் செயல் பெரிதும் பாராட்டத்தகும் என முன்குறிப்பிட்டதன் தார்ப்பரியம் இவ்வாற்றால் விளங்கிக் கொள்ளத்தகும்.

இவ் வித நற்பணியில் ஈடுபட்டிருக்கும் இவர்களும் இவர்கள் போற்றுதற்குரிய சுந்தரமூர்த்தி தம்பதிகளும் இந்நூலும் உயர் நன்மதிப்புற்று விளங்கப் பிரார்த்திக்கின்றோம்.

மு. கந்தையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# ஆசியுரை

## திருநெறிய பண்ணிசைப் பாடல்கள் வெளியீடு

*''ஆசையறாய் பாசம்விடாய் ஆனசிவபூசை பண்ணாய்*
*நேசமுடன் ஐந்தெழுத்தை நீ நினையாய் – சீசீ*
*சினமே தவிராய் திருமுறைகள் ஓதாய்*
*மனமே உனக் கென்ன வாய்''*

என்பது அருளாளர் நல்வாக்காகும் இதனை அன்றும் இன்றும் பின்பற்றி வாழ்பவர்கள் ஒரு சிலராவது நம் மத்தியிலிருப்பது தமிழ்மக்கள் செய்த புண்ணியப் பயனாகும். தெல்லிப்பழையில் சைவ கலாச்சாரத்தையும் திருக்கோயில் வழிபாட்டையும் திருமுறைப் பாரயணத்தையும் இன்றைக்கும் போற்றி வாழுகின்ற ஒரு திருக்குடும்பமாக விளங்குவது ஆசிரியர் உயர்திரு. சுந்தரமூர்த்தி அவர்களுடைய குடும்பமாகும். தொண்ணூறு அகவையில் வாழ்ந்து கொண்டிருக்கும் பேறு பெற்றவர் எங்கள் ஆசிரியர். எங்களுக்கு எல்லாம் முன்மாதிரியாகவும் பேராசானாகவும் தெல்லிப்பழையில் வாழ்ந்து வழிகாட்டியவர் இப்பெரியார் அறிவறிந்த மக்களைப் பெற்று பெருமை அடைந்தவரும் நன்மனையாளோடு இன்றும் வாழ்ந்து வருபவரும் இவர் என்பதை பெருமையோடு வாழ்த்துகின்றோம். ஐயா அவர்களின் உயர்ந்த உள்ளத்தில் உதித்த எண்ணமே இத் திருமுறைப் பாமாலையாகும்.

நாளும் பொழுதும் நாம் ஓதி உயர்வடையக் கூடியதானசக்தி திருமுறைகளுக்கு உண்டு. இவற்றில் ஒரு சிலவற்றை தெரிந்தெடுத்து பாராயண நூலாக வெளியிடுகிறார் இப் பெரியார். இறையருளை நம்பி வாழ்பவர்களுக்கு இது பெரிய வரப் பிரசாதமாகும். ''நிறையுடையார் துயர்களையாய் நெடுங்களம் மேயவனே'' என்று ஞானக் குழந்தையினால் பாடப்படுகின்ற அருள் வாக்குகள் போன்றவை எம்மை ஆன்மீக வாழ்க்கைக்கு இட்டுச்செல்கிறது. எம்மைத் தூக்கிவிடத்தக்க அற்புத சக்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரார்த்தனைக்குத்தான் உண்டு. உள்ளச் சுமையை இறக்கமுடியாமலும், சுமக்கமுடியாமலும் திணறிக் கொண்டிருக்கிறோம். உலகம் மாறிவிட்டது என்று ஒரு சிலர் பேசிக்கொள்கிறார்கள். ஆனால் உள்ளம் மாறிவிட்டது என்று நாங்கள் கருதவேண்டியிருக்கிறது. எமது சிந்தனை, செயல், வாக்கு மூன்றையும் திருவருளை நோக்கித் திருப்பவேண்டும். அப்பொழுதான் எமது சுமையை இறைவன் ஏற்றுக்கொள்வான்.

"கிடைக்கத் தகுமோ நற்கேண்மையார்க் கல்லால்
எடுத்துச் சுமப்பானை இன்று"

என்பது திருவருட் பயன் இவற்றை எல்லாம் கற்றுத் தெளிந்து நின்றவர்கள் பெரியார் சுந்தரமூர்த்தி ஆசிரியர் அவர்கள். எனது சிறுபிள்ளைப் பராயம் தொடக்கம் அவர்கள் குடும்பத்தை நன்கு அறிவேன். தூய சைவநெறியில் தோய்ந்தவர்கள் இவர்கள். தெல்லிப்பழை ஐயருடைய பாடசாலையையும், அமரர் துரையப்பாபிள்ளை அவர்களின் மகாஜனாக் கல்லூரியையும் ஆசிரியப் பணியினால் அணிசெய்த பெருமை இவருக்கு உண்டு. இதன் பயனை இவருடைய வளமார்ந்த வாழ்க்கையே எடுத்துக்காட்டுகிறது. இன்று தொண்ணூறு அகவை காணும் இப் பெரியாரின் தூய்மையான வாழ்வு எம்மவர்க்கெல்லாம் வழிகாட்டட்டும்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படவேண்டிய மகிமை பெற்ற இப்பெரியாரை வணங்கி வாழ்த்தி அமைகின்றேன்.

கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி,
தலைவர்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

யாழ்ப்பாண மாநகராட்சிமன்ற
சைவவிவகாரக் குழுவின் தலைவரும்,
சுகாதார வைத்திய அதிகாரியுமான

# வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரன் அவர்களது வாழ்த்துச் செய்தி

தெல்லிப்பழை கிழக்கைச் சேர்ந்த திருவாளர் திருச்சிற்றம்பலம் சுந்தரமூர்த்தி அவர்கள் தமது 90 ஆவது ஆண்டு பிறந்தநாள் பரிசாக எமக்களித்திடும் ''திருநெறிய பண்ணிசைப் பாடல்கள்'' நூலுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேரு வகையடைகிறேன்.

சைவமரபிலே தோன்றி உண்மைச் சைவனாக வாழ்ந்து கொண்டிருக்கும் திரு. சுந்தரமூர்த்தி அவர்கள் மேற்படி நூலைத் தொகுத்து வெளியிட முற்றிலும் தகுதியானவர் என்பதனை அனைவரும் ஏற்றுக்கொள்வர்.

அந்நியர் ஆட்சிக்காலத்தில் பல்வேறு விதமான சோதனைக் குட்பட்ட எமது பழம்பெரும் சமயத்தினை மறுமலர்ச்சிப் பாதை யிலே முன்னெடுத்த ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுகநாவலரின் அடியொற்றி ஏறத்தாள 70 ஆண்டுகளுக்கு முன்னரே திருமுறை ஓதல், புராண படனம் சிவாலயத் திருத்தொண்டுகளில் ஈடுபட்டவர். இளமையிலிருந்தே பல சமய, சமூக அமைப்புகளின் செயலாள ராக, பொருளாளராகப் பணிபுரிந்து, பொதுப் பணிகளில் ஈடு படுவோர் எவ்வாறு தொண்டுபுரிய வேண்டுமென வாழ்ந்து காட்டியவர். பொருளாளராகப் பணிபுரிந்த காலத்தில் ''பாடு, பரவு, பணிசெய்'' என்ற தாரகமந்திரத்தை தெல்லிப்பழை இந்து இளைஞர் சமூகத்துக்கு ஆக்கிக்கொடுத்து, அன்றைய இளைஞர்களை நெறிப்படுத்திய செம்மல். முதுமையின் மத்தி யிலும் தளராத துடிப்போடு எம்மனைவருக்கும் பயன்படு விதத் திலும் தமது அனுபவத்தை எம்முடன் பகிர்ந்துகொள்ளும் விதமாகவும் அவரது ஆக்கத்தினை அனைவரும் பெற்றுப்படித்து பயன்பெறுதலே எமது தலையான கடமையாகும்.

திரு. சுந்தரமூர்த்தி அவர்களின் சிவத்தொண்டு தடையின்றி மேலும் தொடரும் விதத்தில் அவருக்கு நீண்ட ஆயுளையும், நோயற்ற வாழ்வையும் நல்கவேண்டுமென நல்லைக்கந்தனின் தாள் பணிந்து உளமார வாழ்த்துகின்றேன்.

15-09-99



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# பாராட்டுரை

அழகான எங்களூராம் தெல்லிப்பழை திருவும் கல்வியும் சீரும் தழைத்தோங்கும் சிறப்புடையதாயினும், அது மேலும் உயர்வு பெற்றது அங்கு வாழும் 'ஆன்று அறிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர்' பலரால் ஆகும். எனது மதிப்பார்ந்த ஆசிரியர் திரு. தி. சுந்தரமூர்த்தி அவர்கள் அத்தகு சான்றோரில் ஒருவர்.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியைப் பற்றி நினைக்கின்ற போதெல்லாம் அம்பனைக்கு முன்னால் அடிக்கும் வயற் காற்றும் அந்தக் காற்றில் கொம்புலுப்பிப் பூக்களைச் சொரியும் குடலாகை மரங்களும் மட்டுமல்ல, அங்கு எம்மைக் கற்பித்த அருமையான ஆசான்களும் நினைவில் வருவர். அவர்களில் ஒருவர் உயர்திரு தி. சுந்தரமூர்த்தி அவர்கள்.

கல்வி, கலை, இலக்கியம் விளையாட்டு என்று சகல துறைகளிலும் பட்டணத்துக்குச் சவால் விட்ட; 'பட்டிக்காட்டு'க் கல்லூரியில் எனக்கு அத்திவாரம் இட்டவர் ஆசிரியர் சுந்தரமூர்த்தி. தனது ஒழுங்கும், ஒழுக்கமும் நிறைந்த வாழ்வு முறையினால் தொண்ணூறு ஆண்டுகளை இம் மாநிலத்தில் நல்ல முறையில் வாழ்ந்து நிறைவு பெறும் இத்தருணத்தில் திருநெறிய் பண்ணிசை நூல் ஒன்றை வெளியிடுகிறார். தொண்டுகள் எல்லாவற்றிலும் சிறந்தது சமயத்தொண்டு என்பதைத் தொண்ணூறு வயதிலும் மறவாது துடிப்புடன் செயலாற்றுகிறார்.

'முதுமை அடைதல்' பற்றி அண்மையில் வெளிவந்த ஆய்வு முடிவு ஒன்று, உணவில் கலோரி அளவைக் குறைப்பதால் நோயற்று நீண்டகாலம் வாழமுடியும் என்று தெரிவிக்கிறது. விரதாதிகளால் இந்த நிலையைப் பெற்ற ஆசிரியர் அவர்கள், தமது இல்வாழ்வில் அறுபத்தைந்து ஆண்டுகளை இன்றே நிறைவு செய்கிறார். அதை ஒட்டி வெளிவரும் இந்தப் பண்ணிசை நூல் சமூகத்திற்கு மிக்க பயனுள்ளதாய் விளங்கும் என்பதில் ஐயமில்லை.

இந்நூலைப் பெற்றுக் கொள்ளும் மாணவர்கள் தேவாரங்களைப் பிழை இன்றிப் பாடவும், பண் அறிந்து ஓதவும் பயின்று கொண்டால், ஆசிரியர் தன் பணியால் நிறைவு பெறுவர்.

**கோகிலா மகேந்திரன்**
*பிரதிக் கல்விப் பணிப்பாளர்,*
*வலிகாமம் வலயம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# முன்னுரை

எம் தந்தையாரின் தொண்ணூறாவது நிறைவு நாளில் "திருநெறிய பண்ணிசைப் பாடல்கள்" தொகுதியை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறோம். தந்தையார் தம் வாழ்நாளில் போற்றிப் பேணிப் பாராயணம் செய்து அநுபவித்த அருமருந்தன்ன பொக்கிஷத் தொகுப்பு இதுவாகும். தொகுத்து அச்சிட்டது எல்லாம் அவர் பொறுப்பே. தம் குலதெய்வமான குருநாதசுவாமி கோயிலில் தந்தையார் காலத்தில் 1932ஆம் ஆண்டில் நடைபெற்ற பன்னிரு திருமுறை முற்றோதல் பாராயணத்தில் பங்குபற்றியது முதல் தொடர்ந்து இன்றுவரை அதில் ஆர்வத்துடனும், ஊக்கத்துடனும் ஈடுபட்ட அனுபவப்பேறுடையவர். 1960 களில் வீட்டில் பன்னிருதிருமுறை முற்றோதல் மூன்று வருடங்கள் தொடர்ந்து பாராயணம் செய்து நிறைவுநாட்களில் லிங்கதாரிகளை அழைத்து சிவபூசை, மகேசுரபூசை செய்த புண்ணிய சீலர். இப்பாராயணத்தில் குடும்ப அங்கத்தவர் அனைவரையும் ஈடுபடுத்தி வழிப்படுத்தியவர்.

அது போலவே இளம்பராயத்தில் இருந்து குருநாதர்சுவாமி கோயிலில் நடைபெற்ற திருவாதவூரடிகள் புராணம், கந்தபுராண படிப்புகளில் மூலம் வாசித்து, பிரித்துக் கொடுத்துப் பங்குபற்றி அனுபவம் பெற்றவர். தம் வாழ்நாள் முழுவதும் சந்தர்ப்பம் கிடைக்கும்போது எல்லாம் புராணப்படிப்பில் ஈடுபட்டு வந்துள்ளார்கள். குருநாதசுவாமிகோயிலில் தொடர்ந்து 1978 இருந்து ஆறுவருடங்கள் தன் தனி உபயமாக கந்தபுராணபடனம் செய்வித்தார். புராணபடன முடிவில் திருக்கலியாண உற்சவத்தை சிறப்பாக நடத்தி மகேசுரபூசை வழிபாடுகளுடன் நிறைவு செய்தவர். 1960 களில் நோய்வாய்ப்பட்டு படுக்கையில் இருந்தபோது நாங்கள் கந்தபுராண வசனம் வாசித்தது இன்றும் ஞாபகத்தில் உள்ளது. பின்னர் கந்தபுராணப்படிப்பு நாம் வீட்டில் முறையாகச் செய்ய வழிப்படுத்தியவர்.

குருநாதர் சுவாமிகோயில் பழநி ஆண்டவருக்கு வைகாசி விசாகப்பொங்கல் உபயகாரராக தந்தைக்குப்பின் பொறுப்பேற்று 1988 ஆம் ஆண்டுவரை (மூத்த மகன் வெற்றிவேலாயுதத்திடம் ஒப்படைக்கும்வரை) 65 வருடங்கள் தொடர்ந்து நடத்திய பத்திமை உடையவர். விசாகப் பொங்கலுக்கு ஒருவாரம்முன்பே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதிகள் கிணறுகள் துப்பரவு செய்யும் திருப்பணிகள் தொடங்கி விடும். பொங்கல் அன்று அபிடேகம் பொங்கல் திருவுலா நிறை வுற்றதும், அடுத்தநாள் பூசைக்குரிய இடமாக அவ்விடத்தைத் தயார் செய்து விட்டே வீடு திரும்புவார். தம் குலதெய்வத்தின் உற்சவங்களின்போது தொண்டாற்றி வழிபட்ட அனுபவமும் பின்னர் தெல்லிப்பளை மற்றைய ஆலயங்களில் மகோற்சவங்கள் தொடங்கிய காலத்தில் ஆலயத்தொண்டுகளை நெறிப்படுத்தக் கூடிய பக்குவத்தை வழங்கியது.

1992ஆம் ஆண்டு வைகாசியில் ம்மிடத்தைவிட்டு வெளியேறிய பொழுது, நமக்குக் கைகொடுத்து உதவிய மருந்து திருமுறைகளும், கவசங்களும் மிருத்தியுஞ்சய செபமுமே ஆகும். இடர்களை பதிகம் திருநீலகண்ட பதிகம், கோளறுபதிகம், பஞ்சாக்ரபதிகம், போற் றித்திருத்தாண்டகம் மறுமாற்றுத் திருத்தாண்டகம் போன்றவற் றின் பாராயணம் எம்மைக் காப்பாற்றியது. வடமராட்சியில் சுட்டி விளக்கில் திருமுறைப் பாராயணம் செய்தபொழுது அயல வர்களும் அமைதியுடன்பங்கு பற்றியமை நினைவுகூறத்தக்கது. இடம்பெயர்ந்த பொழுதும் அல்லற்பட்டு அவதியுறாமல் மீண்டும் நம்மிடத்துக்கே கொண்டு வந்து சேர்த்தது திருமுறைகளேயாகும்.

1969 ஆம் ஆண்டு புரட்டாதித் திங்கள் உத்தராட நட்சத் திரத்தன்று காலையில் வீட்டில் சிவபூசை செய்வித்தும், சுற்றி யுள்ள கோயில்களில் விஷேடபூசைகள் செய்வித்தும் மாலையில் மகாஜனாக் கல்லூரி ஆசிரியர்கள் உற்றார் உறவினர் நண்பர் களையும் அழைத்து தேநீர் விருந்துபசாரம் செய்தும் எம் தந்தை யின் அறுபது ஆண்டு பூர்த்தியைக் கொண்டாடினோம். 1989இல் 80ஆவது ஆண்டு நிறைவையும் சிறப்பாகக் கொண்டாடி னோம். அம்மாவினது 80ஆவது ஆண்டு நிறைவிலும் வீட்டில் சிவாச்சரியார்களை அழைத்து சூரியப்பொங்கல் சிவபூசை வழிபாடு கள் செய்து வழிபட்டு மகிழ்ந்தோம். 1994 இல் இடம் பெயர்ந்த நிலையிலும் 'திருமண மணிவிழா' வினைச் சிறப்பாகக் கொண்டாடி மகிழ்ந்தோம் இரண்டாவது மகள் திருமதி சயதேவி செல்வராஜன் வெளிநாட்டிலிருந்து வந்து இவ்விழாவை முன்நின்று நடத்தி னார்கள். சஷ்டியப்த பூர்த்தியையொட்டி துர்க்கையம்பாள் ஆலயத்தில் மாவை ஆதீன கர்த்தா மகாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் தலைமையில் ஒன்பது சிவாச்சாரியார் களால் சுமங்கலிப்பூசை, மிருத்தியுஞ்சய ஓமம் முதலிய பல வழி பாடுகள், பூசைகள் நடைபெற்று ஆசாரியர்களுக்கு தானம், தட்சணை வழங்கி அவர்களின் ஆசீர்வாதத்தையும் பெற்றனர். அவர்களுக்கு சமராதனை நடப்பதற்கும் மேற்படி கோயில் குருக்களிடம் ஒழுங்குகள் செய்யப்பட்டது. அடியார்களுக்கும் அனா தைகளுக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. இப் பொழுது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

90 ஆவது ஆண்டு பிறந்த நாளையும் கொண்டாடகிடைத்த பேறு நாம் செய்த தவப்பேறாகும். தொடர்ந்தும் நூற்றாண்டு வரை வாழ்ந்து அவர்களுடன் நாம் இருக்கும் பேற்றை எல்லாம் வல்ல இறைவன் அருளவேண்டுமெனப் பிரார்த்திக்கின்றோம். வெளியூரில் உள்ள கடைசி மகள் லோகபாலினி ஸ்ரீரங்கநாதன் தம்பதிகள் தம் பிள்ளைகளுடன் சென்றமாதம் வந்து பெற்றோரை வணங்கி ஆசி பெற்றுள்ளார்கள்.

சீரும் சிறப்பும் மிக்க குருநாதசுவாமி கோயில் இன்று பாலஸ்தாபனம் செய்யப்பெற்ற நிலையில் இருக்கிறது. திருப்பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடந்து நித்திய நைமித்திய வழிபாடுகள் முன்போல நடைபெற வேண்டும் என்பதே அவரது இன்றைய பேரவா. இம் மலரால் வரும் அன்பளிப்புகள் திருப்பணிக்கே அர்ப்பணமாகும்.

யாமா வளவு
காசிப்பிள்ளையார் கோவிலடி
தெல்லிப்பழை
20.9.99.

கலாதேவி பொன்னம்பலம்,
குடும்பத்தவர் சார்பில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பதிப்புரை

சிவகுருநாதனின் திருவருளால் எனது பிறந்தநாள் கொண்டாட்டங்கள் பல பலப்பல பான்மையில் நிகழ்ந்து வந்தன. சிவ பூசை, ஆலய வழிபாடுகள் முன் கூட்டியே பன்னிரு திருமுறைகள் முறைப்படி படித்து பிறந்த தினத்தில் நிறைவு நாளை சிவலிங்க தாரிகளின் ஆராதனை நடத்தல், திருக்கோயில்களில் விசேட அபிடேகம், பூசை முதலியனவும் குருமாரைக் கொண்டு சூரிய பொங்கல், விசேட ஓமங்கள் செய்தல், சிவாச்சாரியர்களைக் கொண்டு நவக்கிரம ஓமம், வஸ்திர தண்டுல, சொர்ணதானங்கள் போன்ற பல்வேறு வகைகளில் நிகழ்த்த வாய்ப்புக் கிடைத்தவ. இம்முறை பன்னிரு திருமுறைகளிலும் சாதாரண மக்களுக்கும் பயன் தரும் வகையில் தெரிவு செய்து ஒரு நூல் வெளியிட வேண்டுமென எனது உள்ளத்தில் உதித்தது. அதன் பிரகாரம் "திருநெறிய பண்ணிசைப் பாடல்கள்" என்னும் இந்நூலை தொகுத்து வெளியிட ஆவல் எழுந்தது. அதன்பிரகாரம் தெய்வ அருளுடையார்களது திருவாக்கிலிருந்து தோன்றிய பாடல்களில் எனது மனதுக்குகந்த பாடல்களைத் தெரிந்தெடுத்து அவற்றை ஒரு நூலாக்க விரும்பினேன். அவ்விருப்பத்தை திருமகள் அச்சகத்துப் பொறுப்பாளரை சந்தித்து எனது அவாவைத் தெரிவித்தேன். அவர்கள் "இந்தக் காலத்தில் தேவாரம் படிக்க ஆர்வமுள்ளவர் இல்லை. தவிர தேவாரங்கள் அச்சிடும் பொழுது பிழையின்றியிருக்க வேண்டும். ஒப்பு நோக்குவோர் குறைவு." என்று கூறி என்னை இதில் ஈடுபடாது பின்னிற்கச் செய்தனர். எனினும் திருவருள் என்னைத் தூண்டியபடி இருந்தது. அதனால் மஹாத்மா அச்சகத்தை நாடினேன். ஒரு சைவ அன்பரின் துணையையும் நாடினேன். அதுவும் கைகூடவில்லை எனினும் குருநாதன் விடாப்பிடியாக என்னைத் தூண்டியபடியிருந்தார். எனவே பன்னிரு திருமுறைகளையும் தேடி அவற்றில் எனக்குப் பிடித்த பாடல்களைத் தெரிந்து எழுதி மஹாத்மா அச்சகம் சென்ற பொழுது அவர் மனமுவந்து இத்திருத் தொண்டை ஏற்றனர். அவர்கள் முதலில் ஒப்பு நோக்கிய பின் என் வீட்டிற்கு அனுப்புவார்கள். நானும் எனது மகளும் ஒப்பு நோக்கியபின் திரும்ப அனுப்புவோம். அவர்கள் இன் முகத்துடன் ஏற்று எங்கள் இசைவுப்படி அழுத்தம் செய்து வந்தனர். திருவிளையாடற் புராணம், கந்த புராணம், பெரியபுராணம், திருச்செந்தூர்ப் புராணம், அருணாசலப் புராணம், கதிர்காமப் புராணம், நகுலகிரிப் புராணம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாதவூரடிகள் புராணங்களிலும் சில செய்யுட்களும், சகல கலாவல்லிமாலையும், விநாயர், சிவன், சக்தி, கந்தன் கவசங் களும் நித்திய பாராயணத்துக்கு உதவும் வகையில் சேர்க்கப் பெற்றன. எங்களது குல தெய்வமாகிய குருநாத சுவாமி பேரில் பாடப் பெற்ற திருவூஞ்சல் பாடல்களும் இடம் பெறுகின்றன.

இந் நூலுக்கு அலங்காரமாக எமது உருவப்படங்களும், மகா வித்துவான் சாகித்திய சாகரம் பிரம்மஸ்ரீ ந. வீரமணிஐயர் அவர் களின் ஆசி வாழ்த்தும், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் ஆதீனகர்த்தாவும் பிரதம குருவுமாகிய மகாராஜஸ்ரீ சு. து. சண் முகநாதக்குருக்கள், காசிவிநாயகதேவஸ்தானகுரு சிவஸ்ரீ சி. கணே சலிங்கக் குருக்கள் அவர்களின் ஆசியுரைகளும், இலக்கியகலாநிதி பண்டிதர் மு. கந்தையா, கலாநிதி துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி மாநகரசபை இந்து விவாகர சபைத் தலைவரும், வைத்திய கலாநிதியுமாகிய திரு. இ. தெய்வேந்திரத் தின் பாராட்டு உரைகளும் இடம் பெறுகின்றன. இவர்கள் யாவருக்கும் எமது உளங்கனிந்த நன்றி உரித்தாகுக.

மேலும் எமது விருப்பத்திற்கு இசைவாக, மனம் கோணாது பூரிப்புடன் அச்சு வேலைகளைத் துரிதமாகவும் திருத்தமாகவும் அச்சிட்டு உதவிய மஹாத்மா அச்சகத்தாருக்கும் நாம் மிகவும் கடமைப்பட்டுள்ளோம். அவர்களுக்கும் உளம் கனிந்த நன்றியைச் செலுத்துகின்றோம். பிரதானமாக அச்சக அதிபரையும், அவரின் உதவியாளரான நகுலேஸ்வரனையும் மறக்கவே முடியாது.

எல்லாவற்றிற்கும் மேலாக உள்ளிருந்து வழிநடத்தும் சிவ குருநாதனின் திருவருளை நினைந்து நினைந்து மனம் கசிகின்றது.

## குறிப்பு:


90-வது பிறந்த தினத்தையொட்டி போர் அனர்த்தம் காரண மாக ஆலயங்களின் சீரழிவுகளை நிவர்த்தி செய்யும் திருப்பணி வேலைகளுக்கு பொருளுதவி செய்வது எமது நோக்கமாகும். அந் நோக்கத்தினால் தெல்லிப்பழை காசிவிநாயகர் ஆலயம், மாவிட்ட புரம் கந்தசுவாமி கோயில், கீரிமலை சிவன் ஆலயங்களுக்குச் சிறு சிறுத் தொகை அன்பளித்துள்ளேன். எமது குலதெய்வமாகிய குருநாதர் ஆலயம் பாலஸ்தாபனம் செய்து, மூலஸ்தானம், அர்த்தமண்டபம், எழுந்தருளி மண்டபம் விநாயகர் ஆலயம், சிங் காரவேலவரின் ஆலயம் ஓரளவில் கட்டப்பட்டுள்ளன. மிகுதிவேலை களுக்கு இத்திரு நெறிய பண்ணிசைப் பாடல்கள்" விநியோகம் மூலம் கிடைக்கும் நன்கொடைகள் உபயோகப்படுத்தப்படும். இந் நூல் விற்பனைக்கல்ல பெறுபவர்களின் நன்கொடை ஷெ ஆலய திருப்பணிக்கே உதவப்பெறும் என்பதையும் உறுதியாகக் கூற விரும்புகின்றேன்.

— சுபம் —

திரு. சுந்தரமூர்த்தி
தெல்லிப்பளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| பொருள் | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | காப்பு | | 1 |
| | திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் அருளியது | | |
| 2. | திருப்பிரமபுரம் | "தோடுடைய செவியன்" | 3 |
| 3. | திருநெடுங்களம் | "இடர்களைப் பதிகம்" | 6 |
| 4. | | "திருநீலகண்டப் பதிகம்" | 9 |
| 5. | திருவாரூர் | "திருவிருக்குக்குறள்" | 12 |
| 6. | திருஆலவாய் | "திருநீற்றுப் பதிகம்" | 13 |
| 7. | | கோளறு பதிகம் | 15 |
| 8. | திருக்கேதீச்சரப் பதிகம் | | 18 |
| 9. | திருக்கோணாமலைப் பதிகம் | | 21 |
| 10. | | பஞ்சாக்கரப் பதிகம் | 24 |
| 11. | | நமச்சிவாயப் பதிகம் | 26 |
| 12. | ஷை சுவாமிகள் பாடிய சில தேவாரங்கள் | | 28 |
| | திருநாவுக்கரசு சுவாமிகள் அருளியவை | | |
| 13. | திருவதிகை வீரட்டானம் | "கூற்றாயினவாறு" | 30 |
| 14. | திருக்கெடிலப்புனல் | | 33 |
| 15. | | "திருஅங்கமாலை" | 36 |
| 16. | | "நமச்சிவாயப் பதிகம்" | 38 |
| 17. | திருஒற்றியூர் | திருநேரிசை | 40 |
| 18. | | தனித்திரு விருத்தம் | 41 |
| 19. | திருக்கச்சியேகம்பம் | "மனத்துள்வைத்த திருப்பதிகம்" | 42 |
| 20. | திருப்பாதிரிப்புலியூர் | திருவிருத்தம் | 44 |
| 21. | திருத்தூங்கானை மாடம் | திருவிருத்தம் | 46 |
| 22. | திருமறைக்காடு | திருக்குறுந்தொகை | 47 |
| 23. | திருப்பாண்டிக்கொடுமுடி | திருக்குறுந்தொகை | 49 |
| 24. | பொது | தனிக்குறுந்தொகை | 50 |
| 25. | கோயில் | பெரிய திருத்தாண்டகம் | 52 |
| 26. | பொது மறு மாற்றுத் திருத்தாண்டகம் | | 55 |
| 27. | திருப்பூவணம் | திருத்தாண்டகம் | 58 |
| 28. | திருஆரூர் | திருத்தாண்டகம் | 59 |
| 29. | | போற்றித் திருத்தாண்டகம் | 60 |
| 30. | பொது | தனித்திருத்தாண்டகம் | 63 |
| 31. | திருப்புகலூர் | திருத்தாண்டகம் | 64 |
| | சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்தவை | | |
| 32. | திருவெண்ணெய் நல்லூர் | "பித்தா பிறைசூடி" | 66 |
| 33. | திருப்பாண்டிக்கொடுமுடி | நமச்சிவாயப் பதிகம் | 68 |
| 34. | திருவாரூர் | திருத்தொண்டத்தொகை | 71 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35. திருக்கேதீச்சரப் பதிகம் 74
36. திருநெடித்தான் மலை 76
37. ஷி சுவாமிகள் அருளியவை சில 79

மாணிக்கவாசக சுவாமிகள் அருளியவை

38. திருப்பெருந்துறை சிவபுராணம் 82
39. திருவண்ணாமலை திருவெம்பாவை 86
40. தில்லை திருப்பொற்சுண்ணம் 93
41. திருப்பெருந்துறை திருப்பள்ளியெழுச்சி 99
42. திருத்தோணிபுரம் ''பிடித்த பத்து'' 102
43. திருப்பெருந்துறை ''அருட்பத்து'' 105
44. அச்சோப் பதிகம் 108
45. தனிப்பாடல்கள் 110
46. திருக்கோவையார் 115

திருவிசைப்பா திருப்பல்லாண்டு

47. திருவிசைப்பாக்கள் 116
48. திருப்பல்லாண்டு 119
49. திருமந்திரம் 122
50. "பதினோராந் திருமுறை'' திருமுகப்பாசுரம் 125
51. 12-ம் திருமுறை பெரியபுராணம் 128
52. ''விநாயகர்'' ''திருவிளையாடல்'' ''கந்தபுராணம்"
"திருச்செந்தூர்" அருணாசலம் புராணங்கள்
"கதிர்காமம்" திருவாதவூரடிகள், நகுலகிரிப்
புராணங்கள் 132
53. திருப்புகழ் 138
54. அருணகிரிநாதர் அருளிய :''கந்தரநுபூதி" 141
55. ,, ,, ''கந்தரலங்காரம்" 142
56. குமரகுருபர சுவாமிகள் அருளிய
சகலகலா வல்லிமாலை 144
57. விநாயகர் கவசம் 147
58. விடயமுனி அருளிய சிவகவசம் 150
59. சக்தி கவசம் 153
60. கந்தசஷ்டி கவசம் 155
61. தெல்லிப்பழை குருநாதசுவாமிகோயில் திருவூஞ்சல்
பாக்கள் 177
62. யாழ்ப்பாண தெல்லியூர் குருநாத சுவாமி திருவூஞ்சல் 180
63. திருத்தில்லையில் திருப்பொன்னூசல் 184

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

௨

சிவமயம்

# காப்பு

திருச்சிற்றம்பலம்

மங்கலத்து நாயகனே மண்ணாளும் முதலிறைவா
பொங்குதள வயிற்றானே பொற்புடைய ரத்தினனே
சங்கரனார்த ருமதலாய் சங்கடத்தைச் சங்கரிக்கும்
எங்கள்குல குடிவிளக்கே எழில்மணியே கணபதியே. (1)

அப்பமுடன் பொரிகடலை அவலுடனே அருங்கதலி
ஒப்பில்லா மோதகமும் ஒருமனதாய் ஒப்பித்து
எப்பொழுதும் வணங்கிடுவேன் எனையாள வேண்டுமென
அப்பனுக்கு முந்திவரும் அருங்கனியே கணபதியே. (2)

இன்றெடுத்த இப்பணியும் இனித்தொடரும் எப்பணியும்
நன்மணியே சண்முகனார் தன்னுடனே நீ எழுந்து
என்பணியை உன்பணியாய் எடுத்தாண்டு எமைக்காக்க
பொங்குவயிற்றுக் கணபதியே போற்றியெனப்
-போற்றுகின்றேன். (3)

சீராரும் சதுர்மறையும் தில்லைவா ழந்தணரும்
பாராரும் புலிமுனியும் பதஞ்சலியும் தொழுதேத்த
வாராருங் கடல்புடைசூழ் வையமெலா மீடேற
ஏராரு மணிமன்று ளெடுத்த திருவடி போற்றி. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செறிதரு முயிர்தொறுந் திகழ்ந்து மன்னிய
மறுவறு மரனிட மரபின் மேவியே
அறுவகை நெறிகளும் பிறவு மாக்கிய
இறைவிதன் மலரடி இறைஞ்சி யேத்துவாம். (5)

அருவமு முருவு மாகி யநாதியாய் பலவா யொன்றாய்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனி யாகிக்
கருணைகூர் முகங்களாறுங் கரங்கள்பன் னிரண்டும்
—கொண்டே
யொருதிரு முருகன் வந்தாங் குதித்தன னுலகமுய்ய (6)

பரமனை மதித்திடாப் பங்க யாசனன்
ஒருதலை கிள்ளியே யொழிந்த வானவர்
குருதியு மகந்தையுங் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம். (7)

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்த முதலாம் திருமுறை

திருப்பிரமபுரம் பண்- நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

தோடுடை யசெவி யன்விடை
யேறியோர் தூவெண் மதிசூடிக்
காடுடை யசுட லைப்பொடி
பூசியென் னுள்ளங் கவர்கள்வன்
ஏடுடை யமல ரான்முனை
நாட்பணிந் தேத்த வருள்செய்த
பீடுடை யபிர மாபுர
மேவிய பெம்மா னிவனன்றே. (1)

முற்றலா மையிள நாகமோ டேன
முளைக் கொம் பவைபூண்டு
வற்றலோ டுகல னாப்பலி
தேர்ந்தென துள்ளங் கவர்கள்வன்
கற்றல் கேட் டலுடை யார் பெரி
யார்கழல் கையாற் றொழுதேத்தப்
பெற்றமூர்ந் தபிர மாபுர
மேவிய பெம்மா னிவனன்றே. (2)

நீர்பரந் ததிமிர் புன்சடை
மேலோர் நிலாவெண் மதிசூடி
ஏர்பரந் தவின வெள்வளை
சோரவென் னுள்ளங் கவர் கள்வன்
ஊர்பரந் தவுல கின்முத
லாகிய வோரூ ரிது வென்னப்
பேர்பரந் தபிர மாபுர
மேவிய பெம்மா னிவனன்றே. (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்மகிழ்ந் தமதி லெய்தது
மன்றிவி ளங்கு தலையோட்டில்
உண்மகிழ்ந் துபலி தேரிய
வந்தென துள்ளங் கவர்கள்வன்
மண்மகிழ்ந் தவர வம்மலர்க்
கொன்றைம லிந்த வரைமார்பிற்
பெண்மகிழ்ந் தபிர மாபுர
மேவிய பெம்மா னிவனன்றே. (04)

ஒருமை பெண் மையுடைய யன்சடை
யன் விடை யூரும் மிவனென்ன
அருமையா கவுரை செய்யவ
மர்ந்தென துள்ளங் கவர்கள்வன்
கருமைபெற் றகடல் கொள்ளமி
தந்ததோர் காலம் மிதுவென்னப்
பெருமைபெற் றபிர மாபுர
மேவிய பெம்மா னிவனன்றே. (05)

மறைகலந் தவொலி பாடலோ
டாடல ராகி மழுவேந்தி
இறைகலந் தவின வெள்வளை
சோரவென் னுள்ளங் கவர்கள்வன்
கறைகலந் தகடி யார்பொழி
னீடுயர் சோலைக் கதிர் சிந்தப்
பிறைகலந் தபிர மாபுர
மேவிய பெம்மா னிவனன்றே. (06)

சடைமுயங் குபுன லன்னன
லன்னெரி வீசிச் சதிர் வெய்த
உடைமுயங் குமர வோடுழி
தந்தென துள்ளங் கவர் கள்வன்
கடல்முயங் குகழி சூழ்குளிர்
கானலம் பொன்னஞ் சிறகன்னம்
பெடைமுயங் குபிர மாபுர
மேவிய பெம்மா னிவனன்றே. (07)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியரிலங் குவரை யுந்திய
தோள்களை வீரம் விளைவித்த
உயரிலங் கையரை யன்வலி
செற்றென துள்ளங் கவர் கள்வன்
துயரிலங் கும்முல கிற்பல
வூழிக டோன்றும் பொழுதெல்லாம்
பெயரிலங் குபிர மாபுர
மேவிய பெம்மா னிவனன்றே. (08)

தாணுதல் செய்திறை காணிய
மாலொடு தண்டா மரையானும்
நீணுதல் செய்தொளி யந்நிமிர்ந்
தானென துள்ளங் கவர் கள்வன்
வாணுதல் செய்மக ளீர்முத
லாகிய வையத் தவரேத்தப்
பேணுதல் செய்பிர மாபுர
மேவிய பெம்மா னிவனன்றே. (09)

புத்தரோ டுபொறி யில்சம
ணும்புறங் கூற நெறிநில்லா
ஒத்தசொல் லவுல கம்பலி
தேர்ந்தென துள்ளங் கவர் கள்வன்
மத்தயா னைமறு கவ்வுரி
போர்த்ததோர் மாயம் மிது வென்னப்
பித்தர் போ லும்பிர மாபுர
மேவிய பெம்மா னிவனன்றே. (10)

அருநெறி யமறை வல்லமு
னியகன் பொய்கை யலர்மேய
பெருநெறி யபிர மாபுர
மேவிய பெம்மா னிவன்றன்னை
ஒருநெறி யமனம் வைத்துணர்
ஞானசம் பந்தன் னுரைசெய்த
திருநெறி யதமிழ் வல்லவர்
தொல்வினை தீர்த லெளிதாமே. (11)

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடர்களை பதிகம்

திருநெடுங்களம்　　　　　　　　　　பண்-பழந்தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

மறையுடையாய் தோலுடையாய்
வார்சடைமேல் வளரும்
பிறையுடையாய் பிஞ்ஞகனே
யென்றுன்னைப்பே சினல்லால்
குறையுடையார் குற்றமோராய்
கொள்கையினா லுயர்ந்த
நிறையுடையா ரிடர்களையாய்
நெடுங்களமே யவனே. (1)

கனைத்தெழுந்த வெண்டிரைசூழ்
கடலிடைநஞ் சுதன்னைத்
தினைத்தனையா மிடற்றில் வைத்த
திருந்தியதே வநின்னை
மனத்தகத்தோர் பாடலாடல்
பேணியிராப் பகலும்
நினைத்தெழுவா ரிடர்களையாய்
நெடுங்களமே யவனே. (2)

நின்னடியே வழிபடுவா
னிமலாநினைக் கருத
என்னடியா னுயிரைவவ்வே
லென்றடற்கூற் றுதைத்த
பொன்னடியே பரவிநாளும்
பூவொடுநீர் சுமக்கும்
நின்னடியா ரிடர்களையாய்
நெடுங்களமே யவனே. (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைபுரிந்த மன்னவன்றன்
மகளையோர்பான் மகிழ்ந்தாய்
அலைபுரிந்த கங்கைதங்கு
மவிர்சடையா ரூரா
தலைபுரிந்த பலிமகிழ்வாய்
தலைவநின்றா ணிழற்கீழ்
நிலைபுரிந்தா ரிடர்களையாய்
நெடுங்களமே யவனே. (4)

பாங்கினல்லார் படிமஞ் செய்வார்
பாரிடமும் பலிசேர்
தூங்கிநல்லார் பாடலோடு
தொழு கழலே வணங்கித்
தாங்கி நில்லா வன்பினோடுந்
தலைவநின்றா ணிழற்கீழ்
நீங்கி நில்லா ரிடர்களையாய்
நெடுங்களமே யவனே. (5)

விருத்தனாகிப் பாலனாகி
வேதமோர்நான் குணர்ந்து
கருத்தனாகிக் கங்கையாளைக்
கமழ் சடைமேற் கரந்தாய்
அருத்தனாய ஆதிதேவ
னடியிணையே பரவும்
நிருத்தகீத ரிடர்களையாய்
நெடுங்களமே யவனே. (6)

கூறுகொண்டாய் மூன்றுமொன்றாக்
கூட்டியோர்வெங் கணையால்
மாறுகொண்டார் புரமெரித்த
மன்னவனே கொடிமேல்
ஏறுகொண்டாய் சாந்தமீதென்
றெம்பெருமா னணிந்த
நீறுகொண்டா ரிடர்களையாய்
நெடுங்களமே யவனே. (7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குன்றினுச்சி மேல் விளங்குங்
கொடிமதில்சூ ழிலங்கை
அன்றிநின்ற வரக்கர் கோனை
யருவரைக்கீ ழடர்த்தாய்
என்றுநல்ல வாய்மொழியா
லேத்தியிராப் பகலும்
நின்றுநைவா ரிடர்களையாய்
நெடுங்களமே யவனே. (8)

வேழவெண்கொம் பொசித்தமாலும்
விளங்கியநான் முகனும்
சூழவெங்கு நேடவாங்கோர்
சோதியுளா கிநின்றாய்
கேழல்வெண்கொம் பணிந்தபெம்மான்
கேடிலாப்பொன் னடியின்
நீழல்வாழ்வா ரிடர்களையாய்
நெடுங்கள மேயவனே. (9)

வெஞ்சொற்றஞ்சொ லாக்கிநின்ற
வேடமிலாச் சமணும்
தஞ்சமில்லாச் சாக்கியருந்
தத்துவமொன் றறியார்
துஞ்சலில்லா வாய்மொழியாற்
றோத்திரநின் னடியே
நெஞ்சில்வைப்பா ரிடர்களையாய்
நெடுங்கள மேயவனே. (10)

நீடவல்ல வார்சடையான்
மேயநெடுங் களத்தைச்
சேடர்வாழு மாமறுகிற்
சிரபுரக்கோ னலத்தால்
நாடவல்ல பனுவன்மாலை
ஞானசம்பந் தன்சொன்ன
பாடல்பத்தும் பாடவல்லார்
பாவம்ப றையுமே. (11)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநீலகண்டப்பதிகம்

முதலாம்திருமுறை பண்- *வியாழக் குறிஞ்சி*

திருச்சிற்றம்பலம்

அவ்வினைக் கிவ்வினை யாமென்று
சொல்லு மஃதறிவீர்
உய்வினை நாடா திருப்பது
முந்தமக் கூனமன்றே
கைவினை செய்தெம் பிரான்கழல்
போற்றுது நாமடியோம்
செய்வினை வந்தெமைத்
தீண்டப்பெ றாதிரு நீலகண்டம். (1)

காவினை யிட்டுங் குளம்பல
தொட்டுங் கனிமனத்தால்
ஏவினை யாலெயில் மூன்றெரித்
தீரென் றிருபொழுதும்
பூவினைக் கொய்து மலரடி
போற்றுது நாமடியோம்
தீவினை வந்தெமைத்
தீண்டப்பெ றாதிரு நீலகண்டம். (2)

முலைத்தட மூழ்கிய போகங்
களுமற் றெவையுமெல்லாம்
விலைத்தலை யாவணங் கொண்டெமை
யாண்ட விரிசடையீர்
இலைத்தலைச் சூலமுந் தண்டு
மழுவு மிவையுடையீர்
சிலைத்தெமைத் தீவினை
தீண்டப்பெ றாதிரு நீலகண்டம். (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணுல காள்கின்ற விச்சா
தரர்களும் வேதியரும்
புண்ணிய ரென்றிரு போதுந்
தொழப்படும் புண்ணியரே
கண்ணிமை யாதன மூன்றுடை
யீருங் கழலடைந்தோம்
திண்ணிய தீவினை
தீண்டப்பெ றாதிரு நீலகண்டம். (4)

மற்றிணை யில்லா மலைதிரண்
டன்னதிண் டோளுடையீர்
கிற்றெமை யாட்கொண்டு கேளா
தொழிவதுந் தன்மை கொல்லோ
சொற்றுணை வாழ்க்கை துறந்துந்
திருவடி யேயடைந்தோம்
செற்றெமைத் தீவினை
தீண்டப்பெ றாதிரு நீலகண்டம். (5)

மறக்கு மனத்தினை மாற்றியெம்
மாவியை வற்புறுத்திப்
பிறப்பில் பெருமான் றிருந்தடிக்
கீழ்ப்பிழை யாதவண்ணம்
பறித்த மலர்கொடு வந்துமை
யேத்தும் பணியடியோம்
சிறப்பிலித் தீவினை
தீண்டப்பெ றாதிரு நீலகண்டம். (6)

× × × × ×

(7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவைக் கழித்திட்டு வாழ்க்கை
கடிந்துங் கழலடிக்கே
உருகி மலர்கொடு வந்துமை
யேத்துது நாமடியோம்
செருவி லரக்கனைச் சீரி
லடர்த்தருள் செய்தவரே
திருவிலித் தீவினை
தீண்டப்பெ றாதிரு நீலகண்டம். (8)

நாற்ற மலர்மிசை நான்முக
னாரணன் வாதுசெய்து
தோற்ற முடைய வடியு
முடியுந் தொடர்வரியீர்
தோற்றினுந் தோற்றுந் தொழுது
வணங்குது நாமடியோம்
சீற்றம தாம்வினை
தீண்டப்பெ றாதிரு நீலகண்டம். (9)

சாக்கியப் பட்டுஞ் சமணுரு
வாகி யுடையொழிந்தும்
பாக்கிய மின்றி யிருதலைப்
போகமும் பற்றும்விட்டார்
பூக்கமழ் கொன்றைப் புரிசடை
யீரடி போற்றுகின்றோம்
தீக்குழித் தீவினை
தீண்டப்பெ றாதிரு நீலகண்டம். (10)

பிறந்த பிறவியிற் பேணியெஞ்
செல்வன் கழலடைவான்
இறந்த பிறவியுண் டாகி
லிமையவர் கோனடிக்கண்
திறம்பயின் ஞானசம் பந்தன
செந்தமிழ் பத்தும் வல்லார்
நிறைந்த வுலகினில் வானவர்
கோனொடுங் கூடுவரே. (11)

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிருக்குக்குறள்

திருவாரூர் பண்: குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

சித்தந் தெளிவீர்காள், அத்த னாரூரைப்
பத்தி மலர்தூவ, முத்தி யாகுமே 1.

பிறவி யறுப்பீர்காள், அறவ னாரூரை
மறவா தேத்துமின், துறவி யாகுமே 2.

துன்பந் துடைப்பீர்காள், அன்ப னணியாரூர்
நன் பொன் மலர்தூவ, இன்ப மாகுமே 3.

உய்ய லுறுவீர்காள், ஐய னாரூரைக்
கையி னாற்றொழ, நையும் வினைதானே 4.

பிண்ட மறுப்பீர்காள், அண்ட னாரூரைக்
கண்டு மலர்தூவ, விண்டு வினை போமே 5.

பாச மறுப்பீர்காள், ஈச னணியாரூர்
வாச மலர்தூவ, நேச மாகுமே 6.

வெய்ய வினைதீர, ஐய னணியாரூர்
செய்ய மலர்தூவ, வைய மமுதாமே 7.

அரக்க னாண்மையை, நெருக்கி னானாரூர்
கரத்தி னாற்றொழத், திருத்த மாகுமே 8.

துள்ளு மிருவர்க்கும், வள்ள லாரூரை
உள்ளு மவர்தம்மேல், விள்ளும் வினைதானே 9.

கடுக்கொள் சீவரை, அடக்கி னானாரூர்
எடுத்து வாழ்த்துவார், விடுப்பர் வேட்கையே 10.

சீரூர் சம்பந்தன்; ஆரூ ரைச்சொன்ன
பாரூர் பாடலார் பேரா ரின்பமே. 11.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநீற்றுப் பதிகம்

## இரண்டாம் திருமுறை

திருவாலவாய் பண் : காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே.

வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருவால வாயான் திருநீறே. (2)

முத்தி தருவது நீது முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திருவால வாயான் திருநீறே. (3)

காண இனியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி அணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருவால வாயான் திருநீறே. (4)

பூச இனியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச இனியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருவால வாயான் திருநீறே. (5)

அருத்தம தாவது நீறு அவலம் அறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வானம் அளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும் வெண்ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருவால வாயான் திருநீறே. (6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எயிலது அட்டது நீறு இருமைக்கு முள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கிய மாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத் தால வாயான் திருநீறே. (7)

இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவம் அறுப்பது நீறு
தராவண மாவது நீறு தத்துவ மாவது நீறு
அராவணங் குந்திரு மேனி ஆலவாயான் திருநீறே. (8)

மாலொ டயனறி யாத வண்ணமு முள்ளது நீறு
மேலுறை தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பொடி நீறு
ஏல வுடம்பிடர் தீர்க்கும் இன்பந் தருவது நீறு
ஆலம துண்ட மிடற்றெம் ஆல வாயான் திருநீறே. (9)

குண்டிகைக் கையர்களோடு சாக்கியர் கூட்டமுங் கூட
கண்திகைப் பிப்பது நீறு கருத இனியது நீறு
எண்திசைப் பட்ட பொருளா ரேத்துந் தகையது நீறு
அண்டத்தவர் பணிந்தேத்தும் ஆலவாயான் திருநீறே. (10)

ஆற்ற லடல்விடை யேறும் ஆலவாயான் திருநீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்னன் உடலுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே. (11)

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோளறு பதிகம்

பண் : பியந்தகாந்தாரம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிக நல்ல வீணை தடவி
மாசறுதிங்கள் கங்கை முடிமேலணிந் தென்
உளமே புகுந்த வதனால்
ஞாயிறுதிங்கள் செவ்வாய் புதன்வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. (1)

என்பொடு கொம் பொடாமை யிவைமார் பிலங்க
எருதேறி ஏழை யுடனே
பொன் பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதொடொன் றொடேழு பதினெட்டொ டாறும்
உடனாய நாள்கள வைதாம்
அன் பொடு நல்லநல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. (2)

உருவளர் பவளமேனி ஒளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றை திங்கள் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலையதூர்தி செயமாது பூமி
திசைதெய் வமான பலவும்
அரு நெறி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிநுதல் மங்கையோடு வடவா லிருந்து
மறையோ துமெங்கள் பரமன்
நதியொடு கொன்றை மாலை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலனங்கி நமனோடு தூதர்
கொடுநோய் களான பலவும்
அதிகுணம் நல்லநல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. (4)

நஞ்சணி கண்டனெந்தை மடவாள் தனோடும்
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமேல ணிந்தென்
உளமே புகுந்த வதனால்
வெஞ்சின வவுணரோடு முருமிடியு மின்னு
மிகையான பூத மவையும்
அஞ்சிடு நல்லநல்ல அவை நல்ல நல்ல
அடியா ர்வர்க்கு மிகவே. (5)

வாள்வரி யதளதாடை வரிகோ வணத்தர்
மடவாள் தனோடு முடனாய்
நாண்மலர் வன்னிகொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
கோளரி யுழுவை யோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்லநல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. (6)

செப்பிள முலைநன் மங்கை யொருபாக மாக
விடையேறு செல்வ னடைவார்
ஒப்பிள மதியுமப்பு முடிமேல ணிந்தென்
உளமே புகுந்த வதனால்
வெப்பொடு குளிரும்வாத மிகையான பித்தும்
வினை யா னவந்து நலியா
அப்படி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. (7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேள்பட விழிசெய்தன்று விடைமே லிருந்து
மடவாள் தனோடு முடனாய்
வாண்ம திவன்னி கொன்றை மலர்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழிலங்கை அரையன் றனோடும்
இடரா னவந்து நலியா
ஆழ்கடல் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. (8)

பலபல வேடமாகும் பரனாரி பாகன்
பசுவேறு மெங்கள் பரமன்
சலமக ளோடெருக்கு முடிமேல ணிந்தென்
உளமே புகுந்த வதனால்
மலர்மிசை யோனுமாலு மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேருநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. (9)

கொத்தலர் குழலியோடு விசயற்கு நல்கு
குணமா யவேட விகிர்தன்
மத்தமு மதியுநாக முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
புத்தரொடமணைவாதி லழிவிக்கு மண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. (10)

தேனமர் பொழில்கொள் ஆலை விளைசெந்நெல் துன்னி
வளர்செம் பொனெங்கு நிகழ
நான்முக னாதியாய பிரமா புரத்து
மறை ஞான ஞான முனிவன்
தானுறு கோளும்நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ண முரைசெய்
ஆனசொல் மாலையோதும் அடியார்கள் வானில்
அரசாள் வர் ஆணை நமதே. (11)

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கேதீச்சரப்பதிகம்
## இரண்டாம் திருமுறை

பண்- நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

விருது குன்றமா மேருவி
னாணர வாவன லெரியம்பாற்
பொருது மூவெயில் செற்றவன்
பற்றிநின் றுறைபதி யெந்நாளும்
கருது கின்றவூர் கனைகடற்
கடிகமழ் பொழிலணிமா தோட்டம்
கருத நின்றகே தீச்சரங்
கைதொழக் கடுவினை யடையாவே. (1)

பாடல் வீணையர் பலபல
சரிதைய ரெருதுகைத் தருநட்டம்
ஆடல் பேணுவ ரமரர்கள்
வேண்டநஞ் சுண்டிருள் கண்டத்தர்
ஈட மாவது விருங்கடற்
கரையினி லெழிறிகழ் மாதோட்டங்
கேடி லாதகே தீச்சரந்
தொழுதெழக் கெடுமிடர் வினைதானே. (2)

பெண்ணொர் பாகத்தர் பிறைதவழ்
சடையின ரறைகழல் சிலம்பார்க்கச்
சுண்ண மாதரித் தாடுவர்
பாடுவ ரகந்தொறு மிடுபிச்சைக்
குண்ண லாவதோ ரிச்சையி
னுழல்பவ ருயர்தரு மாதோட்டத்
தண்ண னண்ணுகே தீச்சர
மடைபவர்க் கருவினை யடையாவே. (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொடிகொண் மேனியர் புலியத
    ளரையினர் விரிதரு கரத்தேந்தும்
வடிகொண் மூவிலை வேலினர்
    நூலினர் மறிகடன் மாதோட்டத்
தடிக ளாதரித் திருந்தகே
    தீச்சரம் பரிந்தசிந் தையராகி
முடிகள் சாய்த்தடி பேணவல்
    லார்தம்மேன் மொய்த்தெழும் வினைபோமே (4)

நல்ல ராற்றவு ஞானநன்
    குடையர்தம் மடைந்தவர்க் கருளிய
வல்லர் பார்மிசை வான்பிறப்
    பிறப்பிலர் மலிகடன் மாதோட்டத்
தெல்லை யில்புக ழெந்தைகே
    தீச்சர மிராப்பக லினைந்தேத்தி
அல்ல லாசறுத் தரனடி
    யிணைதொழு மன்பரா மடியாரே. (5)

பேழை வார்சடைப் பெருந்திரு
    மகடனைப் பொருந்தவைத் தொருபாகம்
மாழை யங்கையற் கண்ணிபா
    லருளிய பொருளினர் குடிவாழ்க்கை
வாழை யம்பொழின் மந்திகள்
    களிப்புற மருவியமா தோட்டக்
கேழல் வெண்மருப் பணிந்தநீண்
    மார்பர்கே தீச்சரம் பிரியாரே. (6)

பண்டு நால்வருக் கறமுரைத்
    தருளிப் பல்லுலகினி லுயிர் வாழ்க்கை
கண்ட நாதனார் கடலிடங்
    கைதொழக் காதலித் துறைகோயில்
வண்டு பண்செயு மாமலர்ப்
    பொழின்மஞ்ஞை நடமிடு மாத்தோட்டந்
தொண்டர் நாடொறுந் துதிசெய
    வருள்செய்கே தீச்சர மதுதானே. (7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னி லங்கையர் குலபதி
மலைநலித் தெடுத்தவன் முடிதிண்டோன்
தன்ன லங்கெட வடர்த்தவற்
கருள்செய்த தலைவனார் கடல்வாயப்
பொன்னி லங்கிய முத்துமா
மணிகளும் பொருந்திய மாதோட்டத்
துன்னி யன்பொடு மடியவ
ரிறைஞ்சுகே தீச்சரத் துள்ளாரே. (8)

பூவு ளானுமப் பொருகடல்
வண்ணனும் புவியிடந் தெழுந்தோடி
மேவி நாடிநின் னடியிணை
காண்கிலா வித்தக மென்னாகும்
மாவும் பூகமுங் கதலியு
நெருங்குமா தோட்டநன் னகர்மன்னித்
தேவி தன்னொடுந் திருந்துகே
தீச்சரத் திருந்தவெம் பெருமானே. (9)

புத்த ராய்ச்சில புனைதுகி
லுடையவர் புறனுரைச் சமணாதர்
எத்த ராகிநின் றுண்பவ
ரியம்பிய வேழைமை கேளேன்மின்
மத்த யானையை மறுகிட
வுரிசெய்து போர்த்தவர் மாதோட்டத்
தத்தர் மன்னுபா லாவியின்
கரையிற்கே தீச்சர மடைமின்னே. (10)

மாடெ லாமண முரைசெனக்
கடலின தொலிகவர் மாதோட்டத்
தாட லேறுடை யண்ணல்கே
தீச்சரத் தடிகளை யணிகாழி
நாடு ளார்க்கிறை ஞானசம்
பந்தன்சொ னவின்றெழு பாமாலைப்
பாட லாயின பாடுமின்
பக்தர்கள் பரகதி பெறலாமே. (11)

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலைப்பதிகம்

## மூன்றாம் திருமுறை

பண் – புறநீர்மை

திருச்சிற்றம்பலம்

நிரைகழ லரவஞ் சிலம்பொலி யலம்பு
நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர்க் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவு
மளப்பெருங் கனமணி வரன்றிக்
குரைகட லோத நித்திலங் கொழிக்குங்
கோணமா மலையமர்ந் தாரே. (1)

கடிதென வந்த கரிதனை யுரித்து
வவ்வுரி மேனிமேற் போர்ப்பர்
பிடியன நடையாள் பெய்வளை மடந்தை
பிறைநுத லவளொடு முடனாய்க்
கொடிதெனக் கதறுங் குரைகடல் சூழ்ந்து
கொள்ளமு னித்திலஞ் சுமந்து
குடிதனை நெருங்கிப் பெருக்கமாய்த் தோன்றும்
கோணமா மலையமர்ந் தாரே. (2)

பனித்தி ளந்திங்கட் பைந்தலை நாகம்
படர்சடை முடியிடை வைத்தார்
கனித்திளந் துவர்வாய்க் காரிகை பாக
மாகமுன் கலத்தவர் மதின்மேல்
தனித்த பேருருவ விழித்தழ னாகந்
தாங்கிய மேருவெஞ் சிலையாக்
குனித்ததோர் வில்லார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மாமலையமர்ந் தாரே. (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழித்திளங் கங்கை சடையிடை வைத்துப்
பாங்குடை மதனனைப் பொடியா
விழித்தவன் றேவி வேண்டமுன் கொடுத்த
விமலனார்க் கமலமார் பாதர்
தெழித்துமுன் னரற்றுஞ் செழுங்கடற் றரளஞ்
செம்பொனு மிப்பியுஞ் சுமந்து
கொழித்துவன் றிரைகள் கரையினிடைச் சேர்க்குங்
கோணமா மலையமர்ந் தாரே. (4)

தாயினுநல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினு மனத்து மருவிநின்ற கலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர்பா னீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே. (5)

பரிந்துநன் மனத்தால் வழிபடு மாணி
தன்னுயிர் மேல்வருங் கூற்றைத்
திரிந்திடா வண்ணமு தைத்தவற் கருளுஞ்
செம்மையார் நம்மையா ளுடையார்
விரிந்துயர் மௌவன் மாதவி புன்னை
வேங்கைவண் செருந்தி செண் பகத்தின்
குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில்சூழ்
கோணமா மலையமர்ந் தாரே. (6)

எடுத்தவன் றருக்கை யிழித்தவர் விரலா
லேத்திட வாத்தமாம் பேறு
தொடுத்தவர் செல்வந் தோன்றிய பிறப்பு
மிறப்பறி யாதவர் வேள்வி
தடுத்தவர் வனப்பால் வைத்ததோர் கருணை
தன்னருட் பெருமையும் வாழ்வும்
கொடுத்தவர் விரும்பும் பெரும்புக ழாளர்
கோணமா மலையமர்ந் தாரே. (7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருவரா தொருகை வெண்ட லையேந்தி
யகந்தோறும் பலியுடன் புக்க
பொருவரா யுறையு நீர்மையர் சீர்மைப்
பெருங்கடல் வண்ணனும் பிரமன்
இருவரு மறியா வண்ணமொள் ளெரியா
யுயர்ந்தவர் பெயர்ந்தநன் மாற்கும்
குருவராய் நின்றார் குரைகழல் வணங்கக்
கோணமா மலையமர்ந் தாரே. (8)

நின்றுணுஞ் சமணு மிருந்துணுந் தேரு
நெறியல லாதன புறங்கூற
வென்றுநஞ் சுண்ணும் பரிசின ரொருபால்
மெல்லிய லொடுமுட னாகத்
துன்று மொண் பௌவமவ்வலுஞ் சூழ்ந்து
தாழ்ந்துறுதிரை பல மோதிக்,
குன்று மொண் கானல் வாசம் வந்துலவுங்
கோணமா மலையமர்ந் தாரே. (9)

குற்றமிலாதார் குரைகடல் சூழ்ந்த
கோணமாமலை யமர்ந்தாரைக்
கற்றுணர் கேள்விக்காழியர் பெருமான்
கருத்துடை ஞானசம்பந்தன்
உற்ற செந்தமிழார் மாலையீரைந்து
முரைப்பவர் கேட்பவருயர்ந்தோர்
சுற்றமுமாகித் தொல் வினையடையார்
தோன்றுவர் வானிடைப் பொலிந்தே. (10)

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சாச்சரத் திருப்பதிகம்

## மூன்றாந் திருமுறை.

பண்: காந்தார பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்

துஞ்சலும் துஞ்சலி லாத போழ்தினும்
நெஞ்சகம் நைந்து நினைமின் நாள்தொறும்
வஞ்சகம் அற்றடி வாழ்த்த வந்தகூற்று
அஞ்சவு தைத்தன அஞ்செ ழுத்துமே. (1)

மந்திர நான்மறை யாகி வானவர்
சிந்தையுள் நின்றவர் தம்மை யாள்வன
செந்தழ லோம்பிய செம்மை வேதியர்க்கு
அந்தியுள் மந்திரம் அஞ்செ ழுத்துமே. (2)

ஊனில் உயிர்ப்பை ஒடுக்கி ஒண்சுடர்
ஞான விளக்கினை ஏற்றி நன்புலத்து
ஏனை வழிதிறந்து ஏத்து வார்க்கிடர்
ஆன கெடுப்பன அஞ்செ ழுத்துமே. (3)

நல்லவர் தீயர் எனாது நச்சினர்
செல்லல் கெடச்சிவ முத்தி காட்டுவ
கொல்ல நமன்றமர் கொண்டு போமிடத்து
அல்லல் கெடுப்பன அஞ்செ ழுத்துமே. (4)

கொங்கலர் வன்மதன் வாளி யைந்தகத்து
அங்குள பூதமும் அஞ்ச ஐம்பொழில்
தங்கர வின்படம் அஞ்சுந் தம்முடை
அங்கையில் ஐவிரல் அஞ்செ ழுத்துமே. (5)

தும்மல் இருமல் தொடர்ந்த போழ்தினும்
வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்
இம்மை வினையடர்த்து எய்தும் போழ்தினும்
அம்மையி னுந்துணை அஞ்செ ழுத்துமே. (6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு பிறப்பை அறுத்து மெச்சினர்
பீடை கெடுப்பன பின்னை நாள்தொறும்
மாடு கொடுப்பன மன்னு மாநடம்
ஆடி உகப்பன அஞ்செ ழுத்துமே. (7)

வண்டமரோதி மடந்தை பேணின
பண்டை யிராவணன் பாடி உய்ந்தன
தொண்டர்கள் கொண்டு துதித்த பின்னவர்க்கு
அண்டம் அளிப்பன அஞ்செ ழுத்துமே. (8)

கார்வணன் நான்முகன் காணுதற் கொணாச்
சீர்வணச் சேவடி செவ்வி நாள்தொறும்
பேர்வணம் பேசிப் பிதற்றும் பித்தர்கட்கு
ஆர்வணம் ஆவன அஞ்செ ழுத்துமே. (9)

புத்தர் சமண்கழுக் கையர் பொய்கொளாச்
சித்தத் தவர்கள் தெளிந்து தேறின
வித்தக நீறணி வார்வினைப் பகைக்கு
அத்திரம் ஆவன அஞ்செ ழுத்துமே. (10)

நற்றமிழ் ஞான சம்பந்தன் நான்மறை
கற்றவன் காழியர் மன்னன் உன்னிய
அற்றமில் மாலையீ ரைந்தும் அஞ்செழுத்து
உற்றன வல்லவர் உம்ப ராவரே. (11)

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமச்சிவாயத் திருப்பதிகம்

## மூன்றாந் திருமுறை

பண்: கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே. (1)

நம்பு வாரவர் நாவி நவிற்றினால்
வம்பு நாண்மலர் வார்மது வொப்பது
செம்பொ னார்தில கம்உல குக்கெலாம்
நம்மன் நாமம் நமச்சி வாயவே. (2)

நெக்கு ளார்வ மிகப்பெரு கிந்நினைந்து
அக்கு மாலைகொ டங்கையி லெண்ணுவார்
தக்க வானவ ராத்தகு விப்பது
நக்கன் நாமம் நமச்சி வாயவே. (3)

இயமன் தூதரும் அஞ்சுவ ரின்சொலால்
நயம்வந் தோதவல் லார்தமை நண்ணினால்
நியமந் தான்நினை வார்க்கினி யான்னெற்றி
நயனன் நாமம் நமச்சி வாயவே. (4)

கொல்லா ரேனுங் குணம்பல நன்மைகள்
இல்லா ரேனு மியம்புவ ராயிடின்
எல்லாத் தீங்கையு நீக்குவ ரென்பரால்
நல்லார் நாமம் நமச்சி வாயவே. (5)

மந்த ரம்மன பாவங்கள் மேவிய
பந்த னையவர் தாமும் பகர்வரேல்
சிந்தும் வல்வினை செல்வமு மல்குமால்
நந்தி நாமம் நமச்சி வாயவே. (6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரக மேழ்புக நாடின ராயினும்
உரைசெய் வாயின ராயி னுருத்திரர்
விரவி யேபுகு வித்திடு மென்பரால்
வரதன் நாமம் நமச்சி வாயவே. (7)

இலங்கை மன்ன னெடுத்த அடுக்கல்மேல்
தலங்கொள் கால்விரல் சங்கர னூன்றலும்
மலங்கி வாய்மொழி செய்தவ னுய்வகை
நலங்கொள் நாமம் நமச்சி வாயவே. (8)

போதன் போதன கண்ணனு மண்ணல்தன்
பாதந் தான்முடி நேடிய பண்பராய்
யாதுங் காண்பரி தாகி யலந்தவர்
ஓதும் நாமம் நமச்சி வாயவே. (9)

கஞ்சி மண்டையர் கையிலுண் கையர்கள்
வெஞ்சொல் மிண்டர் விரவில ரென்பரால்
விஞ்சை யண்டர்கள் வேண்ட அமுதுசெய்
நஞ்சுண் கண்டன் நமச்சி வாயவே. (10)

நந்தி நாமம் நமச்சிவா யவெனும்
சந்தை யால்தமிழ் ஞானசம் பந்தன்சொல்
சிந்தை யால்மகிழ்ந் தேத்தவல் லாரெலாம்
பந்த பாசம் அறுக்கல் லார்களே. (11)

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பந்த சுவாமிகள் தேவாரங்கள்

பண்: வியாழக் குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே. (1)

பண்: குறிஞ்சி

கற்றாங் கெரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
முற்றா வெண்டிங்கள் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே. (2)

பண்: தக்கேசி

பூவார் மலர்கொண் டடியார்
தொழுவார் புகழ்வார் வானோர்கள்
மூவார் புரங்கள் எரித்த
அன்று மூவர்க் கருள்செய்தார்
தூமா மழைநின் றதிர
வெருவித் தொறுவின் னிரையோடும்
ஆமாம் பிணைவந் தணையுஞ்சார
லண்ணா மலை யாரே. (3)

பண்: நட்டபாடை

உண்ணாமுலை யுமையாளொடு முடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைமுழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ண மறுமே. (4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்: மேகாரக் குறிஞ்சி

செல்வ மல்கிய செல்வர்ப ராயத்துறைச்
செல்வர் மேற்சிதை யாதன
செல்வன் ஞானசம் பந்தன செந்தமிழ்
செல்வ மாமிவை செப்பவே.

பண்: இந்தளம்

சடையா யெனுமால் சரணீ யெனுமால்
விடையா யெனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவளுள் மெலிவே.

பண்: இந்தளம்

சதுரம் மறைதான் றுதிசெய் துவணங்கும்
மதுரம் பொழில்சூழ் மறைக்காட் டுறைமைந்தா
இதுநன் கிறைவைத் தருள்செய் கவெனக்குன்
கதவந் திருக்காப் புக்கொள்ளுங் கருத்தாலே.

பண்; குறிஞ்சி

வாசி தீரவே, காசு நல்குவீர்
மாசின் மிழலையீர்; ஏச லில்லையே.

இறைவ ராயினீர், மறைகொள் மிழலையீர்
கறைகொள் காசினை, முறைமை நல்குமே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

# திருவதிகை வீரட்டானம்

## நான்காம் திருமுறை

பண்: கொல்லி

திருச்சிற்றம்பலம்

கூற்றாயின வாறு விலக்ககிலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக் கேயிர வும்பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றி னகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேனடி யேனதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே. (1)

நெஞ்சம்உமக் கேயிட மாகவைத்தேன்
நினையாதொரு போதும் இருந்தறியேன்
வஞ்சம்இது வொப்பது கண்டறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
நஞ்சாகிவந் தென்னை நலிவதனை
நணுகாமற் றுரந்து கரந்துமிடீர்
அஞ்சேலுமென் னீரதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே. (2)

பணிந்தாரன பாவங்கள் பாற்றவல்லீர்
படுவெண்டலை யிற்பலி கொண்டுழல்வீர்
துணிந்தேயுமக் காட்செய்து வாழலுற்றாற்
சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்
பிணிந்தார்பொடி கொண்டுமெய் பூசவல்லீர்
பெற்றமேற்றுகந் தீர்சுற்றும் வெண்டலை கொண்டு
அணிந்தீரடி கேளதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே. (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னம் அடி யேனறி யாமையினால்
முனிந்தென்னை நலிந்து முடக்கியிடப்
பின்னையடி யேனுமக் காளும்பட்டேன்
சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்
தன்னையடைந் தார்வினை தீர்ப்பதன்றோ
தலையாயவர் தங்கட னாவதுதான்
அன்னநடை யாரதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே. (4)

காத்தாள்பவர் காவ லிகழ்ந்தமையாற்
கரைநின்றவர் கண்டுகொ ளென்றுசொல்லி
நீத்தாய கயம்புக நூக்கியிட
நிலைக்கொள்ளும் வழித்துறை யொன்றறியேன்
வார்த்தையிது வொப்பது கேட்டறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
ஆர்த்தார்புன லாரதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே. (5)

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்னாமம்என் நாவில் மறந்தறியேன்
உலந்தார்தலை யிற்பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய்
அலந்தேனடி யேனதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே. (6)

உயர்தேன்மனை வாழ்க்கையும் ஒண்பொருளும்
ஒருவர்தலை காவ லிலாமையினால்
வயந்தேயுமக் காட்செய்து வாழலுற்றால்
வலிக்கின்றது சூலை தவிர்த்தருளீர்
பயந்தேயென் வயிற்றி னகம்படியே
பறித்துப்புரட் டியறுத் தீர்த்திடநான்
அயர்ந்தேனடி யேனதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே. (7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலித்தேன்மனை வாழ்க்கை மகிழ்ந்தடியேன்
வஞ்சம்மன மொன்று மிலாமையினால்
சலித்தாலொரு வர்துணை யாருமில்லைச்
சங்கவெண்குழைக் காதுடை யெம்பெருமான்
கலித்தேயென் வயிற்றி னகம்படியே
கலக்கி மலக்கிட்டுக் கவர்ந்துதின்ன
அலுத்தேனடி யேனதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே. (8)

பொன்போல மிளிர்வதோர் மேனியினீர்
புரிபுன்சடை யீர்மெலி யும்பிறையீர்
துன்பேகவ லைபிணி யென்றிவற்றை
நணுகாமற் றுரந்து கரந்துமிடீர்
என்போலிகள் உம்மை இனித்தெளியார்
அடியார்படு வதிது வேயாகில்
அன்பேயமை யும்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே. (9)

போர்த்தா யங்கொ ரானையின் ஈருரிதோல்
புறங்காடரங் காநட மாடவல்லாய்
ஆர்த்தானரக் கன்றனை மால்வரைக்கீழ்
அடர்ந்திட்டருள் செய்த வதுகருதாய்
வேர்த்தும் புரண்டும் விழுந்தும் எழுந்தால்என்
வேதனை யான விலக்கியிடாய்
ஆர்த்தார்புனல் சூழதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே. (10)

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கெடிலப்புனல்

## மூன்றாம் திருமுறை

பண் : காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

சுண்ணவெண் சந்தனச் சாந்துஞ்
சுடர்த்திங்கட் சூளா மணியும்
வண்ண உரிவை யுடையும் வளரும் பவள நிறமும்
அண்ணல் அரண்முர ணேறும் அகலம் வளாய அரவும்
திண்ணன் கெடிலப் புனலும் உடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை அஞ்ச வருவது மில்லை.
(1)

பூண்டதோர் கேழல் எயிறும் பொன்திக ழாமை புரள
நீண்டதிண் தோள்வலஞ்சூழ்ந்து நிலாக்கதிர்
போலவெண் ணூலும்
காண்டகு புள்ளின் சிறகுங் கலந்த கட்டங்கக் கொடியும்
ஈண்டு கெடிலப் புனலும் உடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்றுமில்லை அஞ்ச வருவது மில்லை.
(2)

ஒத்த வடத்திள நாகம் உருத்திர பட்ட மிரண்டும்
முத்து வடங்கண் டிகையும் முளைத்தெழு
மூவிலை வேலும்
சித்த வடமும் அதிகைச் சேணுயர் வீரட்டஞ் சூழ்ந்து
தத்துங் கெடிலப் புனலும் உடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை அஞ்ச வருவது மில்லை.
(3)

மடமான் மறிபொற் கலையும் மழுப்பாம் பொருகையில்
வீணை
குடமால் வரையதிண் தோளும் குனிசிலைக்
கூத்தின் பயில்வும்
இடமால் தழுவிய பாகம் இருநிலனேற்ற சுவடும்
தடமார் கெடிலப் புனலும் உடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியா தொன்று மில்லை அஞ்சவருவது மில்லை.
(4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலபல காமத்த ராகிப் பதைத்தெழு வார்மனத் துள்ளே
கலமலக் கிட்டுத் திரியுங் கணபதி யென்னுங் களிறும்
வலமேந் திரண்டு சுடரும் வான்கயி லாய மலையும்
நலமார் கெடிலப் புனலும் உடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை அஞ்ச வருவது மில்லை.
(5)

கரந்தன கொள்ளி விளக்குங் கறங்கு துடியின் முழக்கும்
பரந்த பதினெண் கணமும் பயின்றறி யாதன பாட்டும்
அரங்கிடை நூலறி வாளர் அறியப் படாததொர்கூத்தும்
நிரந்தர கெடிலப் புனலும் உடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை அஞ்ச வருவதுமில்லை.
(6)

கொலைவரி வேங்கை யதளுங் குலவோ
டிலங்குபொற் றோடும்
விலைபெறு சங்கக் குழையும் விலையில் கபாலக்கலனும்
மலைமகள் கைக்கொண்ட மார்பும் மணியார்ந்
திலங்கு மிடறும்
உலவு கெடிலப் புனலும் உடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை அஞ்ச வருவதுமில்லை.
(7)

ஆடல் புரிந்த நிலையும் அரையில் அசைத்த அரவும்
பாடல் பயின்றபல் பூதம் பல்லா யிரங்கொள் கருவி
நாடற் கரியதொர் கூத்தும் நன்குயர் வீரட்டஞ்சூழ்ந்து
ஓடுங் கெடிலப் புனலும் உடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை அஞ்சவருவதுமில்லை.
(8)

சூழும் அரவத் துகிலுந் துகில்கிழி கோவணக் கீளும்
யாழின் மொழியவள் அஞ்ச அஞ்சா தருவரை போன்ற
வேழம் உரித்த நிலையும் விரிபொழில் வீரட்டஞ் சூழ்ந்து
தாழுங் கெடிலப் புனலும் உடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை அஞ்ச வருவதுமில்லை.
(9)

நரம்பெழு கைகள் பிடித்து நங்கை நடுங்க மலையை
உரங்களெல் லாங்கொண் டெடுத்தான்
ஒன்பதும் ஒன்றும் அலற
வரங்கள் கொடுத்தருள் செய்வான் வளர்பொழில்
வீரட்டஞ் சூழ்ந்து
நிரம்பு கெடிலப் புனலும் உடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை அஞ்ச வருவதுமில்லை.
(10)

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருஅங்கமாலை

## நான்காம் திருமுறை

பண்: சாதாரி

திருச்சிற்றம்பலம்

தலையே நீ வணங்காய்
தலைமாலை தலைக் கணிந்து
தலையாலேபலி தேருந்தலைவனைத்
தலையே நீ வணங்காய் (1)

கண்காள் காண்மின்களோ
கடல் நஞ்சுண்ட கண்டன்றன்னை
எண்டோள்வீசி நின்றாடும் பிரான்றன்னைக்
கண்காள் காண்மின் களோ (2)

செவிகாள் கேண்மின் களோ
சிவன் எம்மிறை செம்பவள
எரிபோல் மேனிப்பி ரான்திற மெப்போதுஞ்
செவிகாள் கேண்மின் களோ (3)

மூக்கே நீ முரலாய்
முது காடுறை முக்கணனை
வாக்கே நோக்கிய மங்கை மணாளனை
மூக்கே நீ முரலாய் (4)

வாயே வாழ்த்து கண்டாய்
மத யானை யுரிபோர்த்துப்
பேய்வாழ் காட்டகத் தாடும்பி ரான்தன்னை
வாயே வாழ்த்து கண்டாய் (5)

நெஞ்சே நீ நினையாய்
நிமிர் புன்சடை நின்மலனை
மஞ்சாடும் மலை மங்கை மணாளனை
நெஞ்சே நீ நினையாய் (6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைகாள் கூப்பித் தொழீர்
கடிமாமலர் தூவிநின்று
பைவாய்ப்பாம்பரை ஆர்த்த பரமனைக்
கைகாள் கூப்பித்தொழீர். (7)

ஆக்கையாற் பயனென்
அரன் கோயில் வலம் வந்து
பூக்கை யால்அட்டிப் போற்றி என்னாதஇவ்
ஆக்கையாற் பயனென். (8)

கால்க ளாற்பயனென்
கறைக் கண்டனுறை கோயில்
கோலக் கோபுரக் கோகர ணஞ்சூழாக்
கால்க ளாற்பயனென். (9)

உற்றார் ஆருளரோ
உயிர் கொண்டு போம்பொழுது
குற்றா லத்துறைக் கூத்தனல்லால்
நமக் குற்றார் ஆருளரோ. (10)

இறுமாந் திருப்பன் கொலோ
ஈசன் பல்கணத் தெண்ணப்பட்டுச்
சிறுமானேந்திதன் சேவடிக் கீழ்ச்சென்றங்
கிறுமாந் திருப்பன் கொலோ. (11)

தேடிக் கண்டு கொண்டேன்
திருமாலொடு நான்முகனுந்
தேடித் தேடொணாத் தேவனை என்னுள்ளே
தேடிக் கண்டுகொண்டேன். (12)

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமச்சிவாயத் திருப்பதிகம்

## நான்காம் திருமுறை

*பண்:* காந்தார பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சி வாயவே. (1)

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கலம் அரன்அஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலம் கோட்ட மில்லது
நாவினுக் கருங்கலம் நமச்சி வாயவே (2)

விண்ணுற அடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகிலவை யொன்று மில்லையாம்
பண்ணிய வுலகினிற் பயின்ற பாவத்தை
நண்ணிநின் றறுப்பது நமச்சி வாயவே (3)

இடுக்கண்பட் டிருக்கினும் இரந்து யாரையும்
விடுக்கிற் பிரானென்று வினவுவோ மல்லோம்
அடுக்கற்கீழ்க் கிடக்கினு மருளி னாமுற்ற
நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சி வாயவே (4)

வெந்தநீ றருங்கலம் விரதி கட்கெலாம்
அந்தணர்க் கருங்கலம் அருமறை ஆறங்கம்
திங்களுக் கருங்கலந் திகழு நீண்முடி
நங்களுக் கருங்கலம் நமச்சி வாயவே. (5)

சலமிலன் சங்கரன் சார்ந்த வர்க்கலால்
நலமில நாடொறு நல்கு வானலன்
குலமில ராகிலுங் குலத்துக் கேற்பதோர்
நல மிகக் கொடுப்பது நமச்சி வாயவே (6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடினாரு லகினில் விழுமிய தொண்டர்கள்
கூடினா ரந்நெறி கூடிச் சென்றலும்
ஓடினே னோடிச்சென் றுருவங் காண்டலும்
நாடினே னாடிற்று நமச்சி வாயவே. (7)

இல்லக விளக்கது இருள்கெ டுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே. (8)

முன்னெறி யாகிய முதல்வன் முக்கணன்
தன்னெறி யேசர ணாதல் திண்ணமே
அன்னெறி யேசென் றங் கடைந்த வர்க்கெலாம்
நன்னெறி யாவது நமச்சி வாயவே. (9)

மாப்பிணை தழுவிய மாதோர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சி வாயப்பத்து
ஏத்தவல் வார்தமக் கிடுக்க ணில்லையே. (10)

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருஒற்றியூர் திருநேரிசை

## நான்காம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

ஓம்பினேன் கூட்டை வாளா
உள்ளத்தோர் கொடுமை வைத்துக்
காம்பிலா மூழை போலக்
கருதிற்றே முகக்கமாட் டேன்
பாம்பின் வாய்த் தேரைபோலப்
பலபல நினைக்கின் றேனை
ஓம்பிநீ உய்யக் கொள்ளாய்
ஒற்றியூருடைய கோவே (1)

மனமெனுந் தோணி பற்றி
மதியெனுங் கோலை யூன்றிச்
சினமெனுஞ் சரக்கை ஏற்றிச்
செறிகடலோடும் போது
மதனெனும் பாறை தாக்கி
மறியும்போதறிய வொண்ணா(து)
உனையுனும் உணர்வை நல்காய்
ஒற்றியூருடைய கோவே (2)

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனித் திருவிருத்தம்

## நான்காம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

பெருங்கடல் மூடிப் பிரளயங்
கொண்டு பிரமனும்போய்
இருங்கடல் மூடி இறக்கும்
இறந்தான் களேபரமும்
கருங்கடல் வண்ணன் களேபர
முங்கொண்டு கங்காளராய்
வருங்கடன் மீளநின் றெம்மிறை
நல்வீணை வாசிக்குமே (1)

வானந் துளங்கிலன் மண்கம்ப
மாகிலென் மால்வரையும்
தானந் துளங்கித் தலைதடு
மாறிலென் தண்கடலும்
மீனம் படிலென் விரிசுடர்
வீழிலென் வேலை நஞ்சுண்
டுனமொன் றில்லா ஒருவனுக்
காட்பட்ட உத்தமர்க்கே (2)

சிவனெனும் நாமந் தனக்கே
யுடையசெம் மேனிஎம்மான்
அவனெனை யாட்கொண் டளித்திடு
மாகில் அவன்றனையான்
பவனெனும் நாமம் பிடித்துத்
திரிந்துபன் னாளழைத்தால்
இவனெனைப் பன்னாள் அழைப்பொழி
யானென் றெதிர்ப்படுமே (3)

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனத்துள் வைத்த திருப்பதிகம்

திருக்கச்சியேகம்பம்

## நான்காம் திருமுறை

பண்: காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

கரவாடும் வன்னெஞ்சர்க் கரியானைக் கரவார்பால்
விரவாடும் பெருமானை விடையேறும் வித்தகனை
அரவாடச் சடைதாழ அங்கையினில் அனலேந்தி
இரவாடும் பெருமானை என்மனத்தே வைத்தேனே
(1)

தேனோக்குங் கிளிமழலை உமைகேள்வன் செழும்பவளம்
தானோக்குந் திருமேனி தழலுருவாஞ் சங்கரனை
வானோக்கும் வளர்மதிசேர் சடையானை வானோர்க்கும்
ஏனோர்க்கும் பெருமானை என்மனத்தே வைத்தேனே
(2)

கைப்போது மலர்தூவிக் காதலித்து வானோர்கள்
முப்போது முடிசாய்த்துத் தொழநின்ற முதல்வனை
அப்போது மலர்தூவி ஐம்புலனும் அகத்தடக்கி
எப்போதும் இனியானை என்மனத்தே வைத்தேனே
(3)

அண்டமாய் ஆதியாய் அருமறையோ டைம்பூதப்
பிண்டமாய் உலகுக்கோர் பெய்பொருளாம் பிஞ்ஞகனைத்
தொண்டர்தாம் மலர்தூவிச் சொன்மாலை புனைகின்ற
இண்டைசேர் சடையானை என்மனத்தே வைத்தேனே
(4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறேறு சடையானை ஆயிரம்பே ரம்மானைப்
பாறேறு படுதலையிற் பலிகொள்ளும் பரம்பரனை
நீறேறு திருமேனி நின்மலனை நெடுந்தூவி
ஏறேறும் பெருமானை என்மனத்தே வைத்தேனே.
(5)

தேசனைத் தேசங்கள் தொழநின்ற திருமாலால்
பூசனைப் பூசனைகள் உகப்பானைப் பூவின்கண்
வாசனை மலைநிலநீர் தீவளிஆ காசமாம்
ஈசனை எம்மானை என்மனத்தே வைத்தேனே. (6)

நல்லானை நல்லான நான்மறையோ டாறங்கம்
வல்லானை வல்லார்கள் மனத்துறையும் மைந்தனைச்
சொல்லானைச் சொல்லார்ந்த பொருளானைத்
துகளேதும்
இல்லானை எம்மானை என்மனத்தே வைத்தேனே.
(7)

விரித்தானை நால்வர்க்கு வெவ்வேறு வேதங்கள்
புரித்தானைப் பதஞ்சந்திப் பொருளுருவாம்
புண்ணியனைத்
தரித்தானைக் கங்கைநீர் தாழ்சடைமேல் மதில்மூன்றும்
எரித்தானை எம்மானை என்மனத்தே வைத்தேனே.
(8)

ஆகம்பத் தரவணையான் அயனறிதற் கரியானைப்
பாகம்பெண் ணாண்பாக மாய்நின்ற பசுபதியை
மாகம்ப மறையோதும் இறையானை மதிற்கச்சி
ஏகம்ப மேயானை என்மனத்தே வைத்தேனே. (9)

அடுத்தானை உரித்தானை அருச்சுனற்குப் பாசுபதம்
கொடுத்தானைக் குலவரையே சிலையாகக் கூரம்பு
தொடுத்தானைப் புரமெரியச் சுனைமல்கு கயிலாயம்
எடுத்தானைத் தடுத்தானை என்மனத்தே வைத்தேனே.
(10)

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிருத்தம்

## நான்காம் திருமுறை

திருப்பாதிரிப்புலியூர்

திருச்சிற்றம்பலம்

ஈன்றாளு மாய்எனக் கெந்தையு மாயுடன்
தோன்றினராய்
மூன்றா யுலகம் படைத்துகந் தான்மனத் துள்ளிருக்க
ஏன்றான் இமயவர்க் கன்பன் திருப்பா திரிப்புலியூர்
தோன்றாத் துணையா யிருந்தனன் தன்னடி
யோங்களுக்கே.
(1)

பற்றாய் நினைத்திடப் போதுநெஞ் சேஇந்தப்
பாரைமுற்றும்
சுற்றாய் அலைகடல் மூடினுங் கண்டேன் புகல்நமக்கு
உற்றான் உமையவட் கன்பன் திருப்பா திரிப்புலியூர்
முற்றா முளைமதிக் கண்ணியி னான்றன் மொய்கழலே.
(2)

விடையான் விரும்பியென் னுள்ளத் திருந்தான்
இனிநமக்கிங்
கடையா அவலம் அருவினை சாரா நமனையஞ்சோம்
புடையார் கமலத் தயன்போல் பவர்பா திரிப்புலியூர்
உடையான் அடியார் அடிஅடி யோங்கட் கரியதுண்டே.
(3)

மாயமெல் லாமுற்ற விட்டிருள் நீங்கி மலைமகட்கே
நேயம் நிலாவ இருந்தான் அவன்றன் திருவடிக்கே
தேயமெல் லாம்நின், றிறைஞ்சுந் திருப்பா திரிப்புலியூர்
மேயநல் லான்மலர்ப் பாதமென் சிந்தையுள் நின்றனவே
(4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்த பொருள்நமக் காமென்று சொல்லி
மனத்தடைத்துச்
சித்த மொருக்கிச் சிவாய நமவென் றிருக்கினல்லால்
மொய்த்த கதிர்மதி போல்வா ரவர்பா திரிப்புலியூர்
அத்தன் அருள்பெற லாமோ அறிவிலாப் பேதைநெஞ்சே. (5)

கருவாய்க் கிடந்துன் கழலே நினையுங் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்றன் நாமம் பயின்றேன்
உனதருளால்
திருவாய்ப் பொலியச் சிவாய நமவென்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதி நீபா திரிப்புலி யூர்அரனே. (6)

எண்ணா தமரர் இரக்கப் பரவையுள்நஞ்சை யுண்டாய்
திண்ணார் அசுரர் திரிபுரந் தீயெழச் செற்றவனே
பண்ணார்ந் தமைந்த பொருள்கள் பயில்பா திரிப்புலியூர்க்
கண்ணார் நுதலாய் கழல்நங் கருத்தில் உடையவனே. (7)

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி என்மனத்தே
வழுமா திருக்க வரந்தர வேண்டும்இவ் வையகத்தே
தொழுவார்க் கிரங்கி இருந்தருள் செய்பா திரிப்புலியூர்ச்
செழுநீர்ப் புனற்கங்கை செஞ்சடை மேல்வைத்த
தீவண்ணனே. (8)

மண்பா தலம்புக்கு மால்கடல் மூடிமற் றேழுலகும்
விண்பால் திசைகெட் டிருசுடர் வீழினும்
அஞ்சல் நெஞ்சே
திண்பால் நமக்கொன்று கண்டோந் திருப்பா
திரிப்புலியூர்க்
கண்பாவு நெற்றிக் கடவுட் சுடரான் கழலிணையே. (9)

திருந்தா அமணர்தந் தீநெறிப் பட்டுத் திகைத்துமுத்தி
தருந்தா ளிணைக்கே சரணம் புகுந்தேன் வரையெடுத்த
பொருந்தா அரக்கன் உடல்நெரித் தாய்பா திரிப்புலியூர்
இருந்தாய் அடியேன் இனிப்பிற வாமல்வந்
தேன்றுகொள்ளே. (10)

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிருத்தம்

## நான்காம் திருமுறை

திருத்தூங்கானைமாடம்

திருச்சிற்றம்பலம்

பொன்னார் திருவடிக் கொன்றுண்டு விண்ணப்பம்
போற்றி செய்யும்
என்னாவி காப்பதற் கிச்சையுண் டேலிருங் கூற்றகல
மின்னாரு மூவிலைச் சூலமென் மேற்பொறி
மேவுகொண்டல்
துன்னார் கடந்தையுள் தூங்கானை மாடச்
சுடர்க்கொழுந்தே (1)

ஆவா சிறுதொண்ட னென்நினைந் தானென்
றரும்பிணிநோய்
காவா தொழியிற் கலக்குமுன் மேற்பழி காதல் செய்வார்
தேவா திருவடி நீறென்னைப் பூசுசெந் தாமரையின்
பூவார் கடந்தையுள் தூங்கானை மாடத்தெம்
புண்ணியனே (2)

கடவுந் திகிரி கடவா தொழியக் கயிலையுற்றான்
படவுந் திருவிரல் ஒன்றுவைத் தாய்பனி மால்வரைபோல்
இடபம் பொறித்தென்னை ஏற்றுக்கொள் ளாயிருஞ்
சோலைதிங்கள்
தடவுங் கடந்தையுள் தூங்கானை மாடத்தெந்
தத்துவனே (10)

திருச்சிற்றம்பலம்

*இப்பதிகத்தின் 3. 4, 5, 6, 7, 8, 9 ஆம் பாடல்கள் சிதைந்து போய்விட்டன.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறுந்தொகை

## ஐந்தாம் திருமுறை

### திருமறைக்காடு

திருச்சிற்றம்பலம்

பண்ணி னேர்மொழி யாளுமை பங்கரோ
மண்ணி னார்வலஞ் செய்ம்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே. (1)

ஈண்டு செஞ்சடை யாகத்துள் ஈசரோ
மூண்ட கார்முகி லின்முறிக் கண்டரோ
ஆண்டு கொண்டநீ ரேயருள் செய்திடும்
நீண்ட மாக்கத வின்வலி நீக்குமே. (2)

அட்ட மூர்த்திய தாகிய அப்பரோ
துட்டர் வான்புரஞ் சுட்ட சுவண்டரோ
பட்டங் கட்டிய சென்னிப் பரமரோ
சட்ட இக்கத வந்திறப் பிம்மினே. (3)

அரிய நான்மறை யோதிய நாவரோ
பெரிய வான்புரஞ் சுட்ட சுவண்டரோ
விரிகொள் கோவண ஆடை விருத்தரோ
பெரிய வான்கத வம்பிரி விக்கவே. (4)

மலையில் நீடிருக் கும்மறைக் காடரோ
கலைகள் வந்திறைஞ் சுங்கழல் ஏத்தரேர
விலையில் மாமணி வண்ண வுருவரோ
தொலைவி லாக்கத வந்துணை நீக்குமே. (5)

பூக்குந் தாழை புறணி அருகெலாம்
ஆக்குந் தண்பொழில் சூழ்மறைக் காடரோ
ஆர்க்குங் காண்பரி யீர்அடி கேள்உமை
நோக்கிக் காணக் கதவைத் திறவுமே. (6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெந்த வெண்பொடிப் பூசும் விகிர்தரோ
அந்த மில்லி அணிமறைக் காடரோ
எந்தை நீ அடி யார்வந் திறைஞ்சிட
இந்த மாக்கத வம்பிணி நீக்குமே. (7)

ஆறு சூடும் அணிமறைக் காடரோ
கூறு மாதுமைக் கீந்த குழகரோ
ஏற தேறிய எம்பெரு மானிந்த
மாறி லாக்கத வம்வலி நீக்குமே. (8)

சுண்ண வெண்பொடிப் பூசுஞ் சுவண்டரோ
பண்ணி யேறுகந் தேறும் பரமரோ
அண்ண லாதி அ ணிமறைக் காடரோ
திண்ண மாக்கத வந்திறப் பிம்மினே. (9)

விண்ணு ளார்விரும் பியெதிர் கொள்ளவே
மண்ணு ளார்வணங் கும்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்மினே (10)

அரக்க னைவிர லால்அடர்த் திட்டநீர்
இரக்க மொன்றிலீர் எம்பெரு மானிரே
சுரக்கும் புன்னைகள் சூழ்மறைக் காடரோ
சரக்க இக்கத வந்திறப் பிம்மினே. (11)

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறுந்தொகை

## ஐந்தாம் திருமுறை

### திருபாண்டிக்கொடுமுடி

திருச்சிற்றம்பலம்

சிட்ட னைச்சிவ னைச்செழுஞ் சோதியை
அட்ட மூர்த்தியை ஆல நிழலமர்
பட்ட னைத்திருப் பாண்டிக் கொடுமுடி
நட்ட னைத்தொழ நம்வினை நாசமே (1)

பிரமன் மாலறி யாத பெருமையன்
தரும மாகிய தத்துவன் எம்பிரான்
பரம னாருறை பாண்டிக் கொடுமுடி
கரும மாகத் தொழுமட நெஞ்சமே (2)

ஊச லாளல்லன் ஒண்கழ லாளல்லன்
தேச மாந்திருப் பாண்டிக் கொடுமுடி
ஈச னேயெனும் இத்தனை யல்லது
பேசு மாறறி யாளொரு பேதையே. (3)

தூண்டி யசுடர் போலொக்குஞ் சோதியான்
காண்ட லுமெளி யன்னடி யார்கட்குப்
பாண்டிக் கொடுமுடி மேய பரமனைக்
காண்டு மென்பவர்க் கேதுங் கருத்தொணான். (4)

நெருக்கி யம்முடி நின்றிசை வானவர்
இருக்கொ டும்பணிந் தேத்த இருந்தவன்
திருக்கொ டும்முடி யென்றலுந் தீவினைக்
கருக்கெ டும்இது கைகண்ட யோகமே. (5)

திருச்சிற்றம்பலம்

*இப்பதிகத்தின் 6, 7, 8, 9, 10 ஆம் பாடல்கள்*
*சிதைந்து போய்விட்டன.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது: தனித்திருக் குறுந்தொகை

## ஐந்தாம் திருமுறை

### திருச்சிற்றம்பலம்

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே. (1)

நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே. (2)

ஆளா காரா ளானாரை அடைந் துய்யார்
மீளா ஆட்செய்து மெய்ம்மையுள் நிற்கிலார்
தோளா தசுரை யோதொழும் பர்செவி
வாளா மாய்ந்துமண் ணாகிக் கழிவரே. (3)

நடலை வாழ்வுகொண் டென்செய்திர் நாணிலீர்
சுடலை சேர்வது சொற்பிர மாணமே
கடலின் நஞ்சமு துண்டவர் கைவிட்டால்
உடலி னார்கிடந் தூர்முனி பண்டமே. (4)

பூக்கைக் கொண்டரன் பொன்னடி போற்றிலார்
நாக்கைக் கொண்டரன் நாமம் நவில்கிலார்
ஆக்கைக் கேயிரை தேடி யலமந்து
காக்கைக் கேயிரை யாகிக் கழிவரே. (5)

குறிக ளும் அடை யாளமுங் கோயிலும்
நெறிக ளும் அவர் நின்றதோர் நேர்மையும்
அறிய ஆயிரம் ஆரணம் ஓதிலும்
பொறியி லீர்மனம் என்கொல் புகாததே. (6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியுந் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேன்நெடுங் காலமே. (7)

எழுது பாவைநல் லார்திறம் விட்டுநான்
தொழுது போற்றிநின் றேனையுஞ் சூழ்ந்துகொண்
டுழுத சால்வழி யேஉழு வான்பொருட்
டிழுதை நெஞ்சமி தென்படு கின்றதே. (8)

நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும்பொன் னார்சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவுநீ ருங்கொண்டு
நக்கு நிற்பர் அவர்தம்மை நாணியே. (9)

விறகிற் றீயினன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட் டுணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே. (10)

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியதிருத்தாண்டகம்

## ஆறாம் திருமுறை

கோயில்

திருச்சிற்றம்பலம்

அரியானை அந்தணர்தம் சிந்தை யானை
அருமறையின் அகத்தானை அணுவை யார்க்குந்
தெரியாத தத்துவனைத் தேனைப்பாலைத்
திகழொளியைத் தேவர்கள்தங் கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. 1)

கற்றானைக் கங்கைவார் சடையான் தன்னைக்
காவிரிசூழ் வலஞ்சுழியுங் கருதி னானை
அற்றார்க்கும் அலந்தார்க்கும் அருள்செய் வானை
ஆரூரும் புகுவானை அறிந்தோ மன்றே
மற்றாருந் தன்னொப்பா ரில்லா தானை
வானவர்க ளெப்பொழுதும் வணங்கி ஏத்தப்
பெற்றானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. 2)

கருமானின் உரியதளே உடையா வீக்கிக்
கனைகழல்கள் கலந்தொலிப்ப அனல்கை ஏந்தி
வருமானத் திரள்தோள்கள் மட்டித் தாட
வளர்மதியஞ் சடைக்கணிந்து மானேர் நோக்கி
அருமான வாண்முகத்தா ளமர்ந்து காண
அமரர்கணம் முடி வணங்க ஆடுகின்ற
பெருமானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. 3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருந்தவர்கள் தொழுதேத்தும் அப்பன் தன்னை
அமரர்கள்தம் பெருமானை அரனை மூவா
மருந்தமரர்க் கருள்புரிந்த மைந்தன் தன்னை
மறிகடலுங் குலவரையும் மண்ணும் விண்ணும்
திருந்தொளிய தாரகையுந் திசைக ளெட்டுந்
திரிசுடர்கள் ஓரிரண்டும் பிறவு மாய
பெருந்தகையைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. 4)

அருந்துணையை அடியார்தம் அல்லல் தீர்க்கும்
அருமருந்தை அகல்ஞாலத் தகத்துள் தோன்றி
வருந்துணையுஞ் சுற்றமும் பற்றும் விட்டு
வான்புலன்கள் அகத்தடக்கி மடவா ரோடும்
பொருந்தணைமேல் வரும்பயனைப் போக மாற்றிப்
பொதுநீக்கித் தனைநினைய வல்லோர்க் கென்றும்
பெருந்துணையைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. (5)

கரும்பமரும் மொழிமடவாள் பங்கன் தன்னைக்
கனவயிரக் குன்றனைய காட்சி யானை
அரும்பமரும் பூங்கொன்றைத் தாரான் தன்னை
அருமறையோ டாறங்க மாயி னானைச்
சுரும்பமருங் கடிபொழில்கள் சூழ்தென் னாரூர்ச்
சுடர்க் கொழுந்தைத் துளக்கில்லா விளக்கை மிக்க
பெரும்பயனைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. (6)

வரும்பயனை எழுநரம்பி னோசை யானை
வரைசிலையா வானவர்கள் முயன்ற வாளி
அரும்பயஞ்செ யவுணர்புர மெரியக் கோத்த
அம்மானை அலைகடல்நஞ் சயின்றான் தன்னைச்
சுரும்பமருங் குழன் மடவார் கடைக்கண் நோக்கில்
துளங்காத சிந்தையராய்த் துறந்தோ ருள்ளப்
பெரும்பயனைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. (7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரானை யீருரிவைப் போர்வை யானைக்
காமருபூங் கச்சியே கம்பன் தன்னை
ஆரேனும் அடியவர்கட் கணியான் தன்னை
அமரர்களுக் கறிவரிய அளவி லானைப்
பாரோரும் விண்ணோரும் பணிய நட்டம்
பயில்கின்ற பரஞ்சுடரைப் பரனையெண்ணில்
பேரானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. (8)

முற்றாத பால்மதியஞ் சூடி னானை
மூவுலகுந் தானாய முதல்வன் தன்னைச்
செற்றார்கள் புரமூன்றுஞ் செற்றான் தன்னைத்
திகழொளியை மரகதத்தைத் தேனைப் பாலைக்
குற்றாலத் தமர்ந்துறையுங் குழகன் தன்னைக்
கூத்தாட வல்லானைக் கோனை ஞானம்
பெற்றானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. ( )

காரொளிய திருமேனிச் செங்கண் மாலுங்
கடிக்கமலத் திருந்தவனுங் காணா வண்ணம்
சீரொளிய தழற்பிழம்பாய் நின்ற தொல்லைத்
திகழொளியைச் சிந்தைதனை மயக்கந் தீர்க்கும்
ஏரொளியை இருநிலனும் விசும்பும் விண்ணும்
ஏழுலகுங் கடந்தண்டத் தப்பால் நின்ற
பேரொளியை பெரும்பற்ற புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. (10)

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறுமாற்றத் திருத்தாண்டகம்

## ஆறாம் திருமுறை

### திருச்சிற்றம்பலம்

நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோ
மின்பமே யெந்நாளுந் துன்ப மில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான
சங்கரனற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா வாளாய்க்
கொய்மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே. (1)

அகலிடமே யிடமாக வூர்க டோறு
மட்டுண்பா ரிட்டுண்பார் விலக்கா ரையம்
புகலிடமா மம்பலங்கள் பூமி தேவி
யுடன்கிடந்தாற் புரட்டாள்பொய் யன்று மெய்யே
இகலுடைய விடையுடையா னேன்று கொண்டா
னினியேதுங் குறைவிலோ மிடர்க டீர்ந்தோம்
துகிலுடுத்துப் பொன் பூண்டு திரிவார் சொல்லுஞ்
சொற்கேட்கக் கடவோமோ துரிசற் றோமே. (2)

வாராண்ட கொங்கையர்சேர் மனையிற் சேரோம்
மாதேவா மாதேவா வென்று வாழ்த்தி
நீராண்ட புரோதாய மாடப் பெற்றோம்
நீறணியுங் கோலமே நிகழப் பெற்றோம்
காராண்ட மழைபோலக் கண்ணீர் சோரக்
கன்மனமே நன்மனமாக் கரையப் பெற்றோம்
பாராண்டு பகடேறி வருவார் சொல்லும்
பணிகேட்கக் கடவோமோ பற்றற் றோமே. (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவாவா ருருத்திரபல் கணத்தி னோர்க
ளுடுப்பனகோ வணத்தொடுகீ ளுளவாமன்றே
செறுவாருஞ் செறமாட்டார் தீமை தானு
நன்மையாய்ச் சிறப்பதே பிறப்பிற் செல்லோம்
நறவார்பொன் னிதழிநறுந் தாரோன் சீரார்
நமச்சிவா யஞ்சொல்ல வல்லோ நாவால்
சுறவாருங் கொடியானைப் பொடியாக் கண்ட
சுடர்நயனச் சோதியையே தொடர்வுற் றோமே.(4)

என்றுநா மியாவர்க்கு மிடைவோ மல்லோ
மிருநிலத்தி லெமக்கெதிரா வாரு மில்லை
சென்றுநாஞ் சிறுதெய்வஞ் சேர்வோ மல்லோஞ்
சிவபெருமான் றிருவடியே சேரப் பெற்றோம்
ஒன்றினாற் குறைவுடையோ மல்லோ மன்றே
யுறுபிணியார் செறலொழிந்திட் டோடிப் போனார்
பொன்றினார் தலைமாலை யணிந்த சென்னிப்
புண்ணியனை நண்ணியபுண் ணியத்து ளோமே.(5)

மூவுருவின் முதலுருவா யிருநான் கான
மூர்த்தியே யென்றுமுப் பத்து மூவர்
தேவர்களு மிக்கோருஞ் சிறந்து வாழ்த்துஞ்
செம்பவளத் திருமேனிச் சிவனே யென்னும்
நாவுடையார் நமையாள வுடையா ரன்றே
நாவலந்தீ வகத்தினுக்கு நாத ரான
காவலரே யேவி விடுத்தா ரேனுங்
கடவமலோங் கடுமையொடு களவற் றோமே. (6)

நிற்பனவு நடப்பனவு நிலனு நீரு
நெருப்பினொடு காற்றாகி நெடுவா னாகி
அற்பமொடு பெருமையுமா யருமை யாகி
யன்புடையார்க் கெளிமையதா யளக்க லாகாத்
தற்பரமாய்ச் சதாசிவமாய்த் தானு மியானு
மாகிநின்ற தன்மையனை நன்மையோடும்
பொற்புடைய பேசக் கடவோம் பேயர்
பேசுவன பேசுதுமோ பிழையற் றோமே. (7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈசனையெவ் வுலகினுக்கு மிறைவன் றன்னை
யிமையவர்தம் பெருமானை யெரியாய் மிக்க
தேசனைச் செம்மேனி வெண்ணீற் றானைச்
சிலம்பரையன் பொற்பாவை நலஞ்செய் கின்ற
நேசனை நித்தலு நினையப் பெற்றோ
நின்றுண்பா ரெம்மை நினையச் சொன்ன
வாசக மெல்லா மறந்தோ மன்றே
வந்தீரார் மன்னவனா வான்றா னாரே. (8)

சடையுடையான் சங்கக் குழையோர் காதன்
சாம்பலும் பாம்பு மணிந்த மேனி
விடையுடையான் வேங்கை யதள்மே லாடை
வெள்ளிபோற் புள்ளியுழை மான்றோல் சார்ந்த
உடையுடையா னம்மை யுடையான் கண்டீ
ரும்மோடு மற்று முளராய் நின்ற
படையுடையான் பணிகேட்கும் பணியோ மல்லோம்
பாசமற வீசும் படியோ நாமே. (9)

நாவார நம்பனையே பாடப் பெற்றோ
நாணற்றார் நள்ளாமே விள்ளப் பெற்றோம்
ஆவாவென் றெமையாள்வா னமரர் நாத
னயனொடுமாற் கறிவரிய வனலாய் நீண்ட
தேவாதி தேவன் சிவனென் சிந்தை
சேர்ந்திருந்தான் றென்றிசைக்கோன் றானே வந்து
கோவாடிக் குற்றேவல் செய்கென் றாலுங்
குணமாகக் கொள்ளோமெண் குணத்து ளோமே. (10)

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பூவணம் திருத்தாண்டகம்

## ஆறாம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

வடியேறு திரிசூலந் தோன்றுந் தோன்றும்
வளர்சடைமேல் இளமதியந் தோன்றுந் தோன்றும்
கடியேறு கமழ்கொன்றைக் கண்ணி தோன்றுங்
காதில்வெண் குழைதோடு கலந்து தோன்றும்
இடியேறு களிற்றுரிவைப் போர்வை தோன்றும்
எழில்திகழுந் திருமுடியு மிலங்கித் தோன்றும்
பொடியேறு திருமேனி பொலிந்து தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே.
(1)

ஆணாகிப் பெண்ணாய வடிவு தோன்றும்
அடியவர்கட் காரமுத மாகித் தோன்றும்
ஊணாகி யூர்திரிவா னாகித் தோன்றும்
ஒற்றைவெண் பிறைதோன்றும் பற்றார் தன்மேல்
சேணாக வரைவில்லா லெரித்தல் தோன்றுஞ்
செத்தவர்தம் எலும்பினாற் செறியச் செய்த
பூணாணும் அரைஞாணும் பொலிந்து தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே.
(2)

தன்னடியார்க் கருள்புரிந்த தகவு தோன்றுஞ்
சதுர்முகனைத் தலையரிந்த தன்மை தோன்றும்
மின்னனைய நுண்ணிடையாள் பாகந் தோறும்
வேழத்தி னுரிவிரும்பிப் போர்த்தல் தோன்றும்
துன்னியசெஞ் சடைமேலோர் புனலும் பாம்புந்
தூயமா மதியுடனே வைத்தல் தோன்றும்
பொன்னனைய திருமேனி பொலிந்து தோன்றும்
பொழில் திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே.
(3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கணைந்த சண்டிக்கும் அருளி யன்று
தன்முடிமேல் அலர்மாலை யளித்தல் தோன்றும்
பாங்கணைந்து பணிசெய்வார்க் கருளியன்று
பலபிறவி யறுத்தருளும் பரிசுந் தோன்றும்
கோங்கணைந்த கூவிளமும் மதமத் தம்முங்
குழற்கணிந்த கொள்கையோடு கோலந் தோன்றும்
பூங்கணைவே ளுருவழித்த பொற்புத் தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனிதனார்க்கே
(4)

திருச்சிற்றம்பலம்

# திருஆரூர் திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

திருமணியைத் தித்திக்குந் தேனைப் பாலைத்
தீங்கரும்பின் இன்சுவையைத் தெளிந்த தேறல்
குருமணியைக் குழல்மொந்தை தாளம் வீணை
கொக்கரையின் சச்சரியின் பாணி யானைப்
பருமணியைப் பவளத்தைப் பசும்பொன் முத்தைப்
பருப்பதத்தில் அருங்கலத்தைப் பாவந் தீர்க்கும்
அருமணியை ஆரூரி லம்மான் தன்னை
யறியா தடிநாயே னயர்த்த வாறே.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருஆரூர் திருத்தாண்டகம்

## ஆறாம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதீயென்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே.

திருச்சிற்றம்பலம்

# திருஆரூர் போற்றித்திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

கற்றவர்க ளுண்ணுங் கனியே போற்றி
கழலடைந்தரர் செல்லுங் கதியே போற்றி
அற்றவர்கட் காரமுத மானாய் போற்றி
அல்லலறுத் தடியேனை ஆண்டாய் போற்றி
மற்றொருவ ரொப்பில்லா மைந்தா போற்றி
வானவர்கள் போற்றும் மருந்தே போற்றி
செற்றவர்தம் புரமெரித்த சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி. (1)

சங்கரனே நின்பாதம் போற்றி போற்றி
சதாசிவனே நின்பாதம் போற்றி போற்றி
பொங்கரவா நின்பாதம் போற்றி போற்றி
புண்ணியனே நின்பாதம் போற்றி போற்றி
அங்கமலத் தயனோடு மாலுங் காணா
அனலுருவா நின்பாதம் போற்றி போற்றி
செங்கமலத் திருப்பாதம் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி. (2)

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருஐயாறு: திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

எல்லா உலகமு மானாய் நீயே
யேகம்பம் மேவி யிருந்தாய் நீயே
நல்லாரை நன்மை யறிவாய் நீயே
ஞானச் சுடர் விளக்காய் நின்றாய் நீயே
பொல்லா வினைக ளறுப்பாய் நீயே
புகழ்ச்சே வடியென்மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வந் தருவாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ.

## திருஆவடுதுறை: திருத்தாண்டகம்

திருவேயென் செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே செழுஞ்சுடர்நற் சோதி மிக்க
உருவேஎன் னுறவே என்ஊனே ஊனின்
உள்ளமே உள்ளத்தி னுள்ளே நின்ற
கருவேஎன் கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியாடு பாவாய் காவாய்
அருவாய வல்வினைநோய் அடையா வண்ணம்
ஆவடுதண் டுறையுறையும் அமர ரேறே.

## கயிலாயம்: போற்றித்திருத்தாண்டகம்

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி
ஓவாத சத்தத் தொலியே போற்றி
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி
ஆறங்கம் நால்வேத மானாய் போற்றி
காற்றாகி யெங்குங் கலந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கயிலாயம்: போற்றித்திருத்தாண்டகம்

பொறையுடைய பூமிநீ ரானாய் போற்றி
பூதப் படையாள் புனிதா போற்றி
நிறையுடைய நெஞ்சி னிடையாய் போற்றி
நீங்காதென் னுள்ளத் திருந்தாய் போற்றி
மறையுடைய வேதம் விரித்தாய் போற்றி
வானோர் வணங்கப் படுவாய் போற்றி
கறையுடைய கண்ட முடையாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

## கயிலாயம்: போற்றித்திருத்தாண்டகம்

பாட்டான நல்ல தொடையாய் போற்றி
பரிசை யறியாமை நின்றாய் போற்றி
சூட்டான் திங்கள் முடியாய் போற்றி
தூமாலை மத்தம் அணிந்தாய் போற்றி
ஆட்டான தஞ்சும் அமர்ந்தாய் போற்றி
அடங்கார் புரமெரிய நக்காய் போற்றி
காட்டானை மெய்த்தோ லுரித்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

## திருஆரூர்: திருத்தாண்டகம்

முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணங்கேட்டாள்
பின்னை யவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசா ரத்தைத்
தன்னை மறந்தாள் தன்நாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது: தனித்திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

அப்பன்நீ அம்மைநீ ஐய னும்நீ
அன்புடைய மாமனும் மாமி யும்நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொரு ளும்நீ
ஒருகுலமுஞ் சுற்றமும் ஓரு ரும்நீ
துய்ப்பனவும் உய்ப்பனவுந் தோற்று வாய்நீ
துணையாயென் நெஞ்சந் துறப்பிப் பாய்நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத் தும்நீ
யிறைவன்நீ ஏறூர்ந்த செல்வன்நீயே. (1)

திருக்கோயி லில்லாத திருவி லூரும்
திருவெண்ணீ றணியாத திருவி லூரும்
பருக்கோடிப் பத்திமையாற் பாடா வூரும்
பாங்கினொடு பலதளிக ளில்லா வூரும்
விருப்போடு வெண்சங்கம் ஊதா வூரும்
விதானமும் வெண்கொடியு மில்லா வூரும்
அருப்போடு மலர்பறித்திட் டுண்ணா வூரும்
அவையெல்லாம் ஊரல்ல அடவி காடே. (2)

திருநாமம் அஞ்செழுத்துஞ் செப்பா ராகில்
தீவண்ணர் திறமொருகால் பேசா ராகில்
ஒருகாலுந் திருக்கோயில் சூழாராகில்
உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணா ராகில்
அருநோய்கள் கெடவெண்ணீ றணியா ராகில்
அளியற்றார் பிறந்தவா றேதோ வென்னில்
பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்துஞ் செத்துப்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின் றாரே. (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலம்பொல்லேன் குணம்பொல்லேன் குறியும் பொல்லேன்
குற்றமே பெரிதுடையேன் கோல மாய
நலம்பொல்லேன் நான்பொல்லேன் ஞானி யல்லேன்
நல்லாரோ டிசைந்திலேன் நடுவே நின்ற
விலங்கல்லேன் விலங்கல்லா தொழிந்தேன் அல்லேன்
வெறுப்பனவும் மிகப்பெரிதும் பேச வல்லேன்
இலம்பொல்லேன் இரப்பதே ஈய மாட்டேன்
என்செய்வான் தோன்றினேன் ஏழை யேனே. (4)

சங்கநிதி பதுமநிதி யிரண்டுந் தந்து
தரணியொடு வானாளத் தருவ ரேனும்
மங்குவார் அவர்செல்வம் மதிப்போ மல்லோம்
மாதேவர்க் கேகாந்த ரல்லா ராகில்
அங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோ யராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனுங்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்ப ராகில்
அவர் கண்டீர் நாம்வணங்கும் கடவு ளாரே. (5)

திருச்சிற்றம்பலம்

# திருப்புகலூர்: திருத்தாண்டகம்

திருசிற்றம்பலம்

எண்ணுகேன் என்சொல்லி எண்ணு கேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணி னல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன்
கழலடியே கைதொழுது காணின் அல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும்போ துணர மாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. (1)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கமே பூண்டாய் அனலா டினாய்
ஆதிரையாய் ஆல்நிழலாய் ஆனே றூர்ந்தாய்
பங்கமொன் றில்லாத படர்சடையினாய் பாம்பொடு
திங்கள் பகை தீர்த் தாண்டாய்
சங்கையொன் றின்றியே தேவர் வேண்டச்
சமுத்திரத்தின் நஞ்சுண்டு சாவா மூவாச்
சிங்கமே உன்னடிக்கே போது கின்றேன்
திருப்புகலூர் மேவிய தேவ தேவே. (2)

நீரேறு செஞ்சடைமேல் நிலாவெண் திங்கள்
நீங்காமை வைத்துகந்த நீதி யானே
பாரேறு படுதலையிற் பலிகொள்வானே பண்ட
நங்கற் காய்ந்தானே பாவ நாசா
காரேறு முகிலனைய கண்டத் தானே
கருங்கைக் களிற்றுரிவை கதறப் போர்த்த
போரேறே உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. (5)

தேவார்ந்த தேவனைத் தேவ ரெல்லாந்
திருவடிமேல் அலரிட்டுத் தேடி நின்று
நாவார்ந்த மறைபாடி நட்டம் ஆடி
நான்முகனும் இந்திரனும் மாலும் போற்றக்
காவார்ந்த பொழிற் சோலைக் கானப் பேராய்
கழுக்குன்றத் துச்சியாய கடவுளே நின்
பூவார்ந்த பொன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. (7)

ஒருவனையும் அல்லா துணரா துள்ளம்
உணர்ச்சித் தடுமாற்றத் துள்ளே நின்ற
இருவரையும் மூவரையும் என்மேல் ஏவி
இல்லாத தரவறுத்தாய்க் கில்லேன் ஏலக்
கருவரைசூழ் கானல் இலங்கை வேந்தன்
கடுந்தேர்மீ தோடாமைக் காலாற் செற்ற
பொருவரையாய் உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. (10)

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரமூர்த்தி சுவாமிகள்
அருளிச் செய்த

# தேவாரப் பதிகங்கள்

## ஏழாம் திருமுறை

திருவெண்ணெய்நல்லூர்

பண்- இந்தளம்

திருச்சிற்றம்பலம்

பித்தாபிறை சூடிபெரு மானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்
லூரருட்டுறையுள்
அத்தாவுனக் காளாயினி யல்லேனென லாமே. (1)

நாயேன்பல நாளுநினைப் பின்றிமனத் துன்னைப்
பேயாய்த்திரிந் தெய்த்தேன்பெற லாகாவருள் பெற்றேன்
வேயார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூர
ருட் டுறையுள்
ஆயாவுனக் காளாயினி யல்லேனென லாமே. (2)

மன்னேமற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னைப்
பொன்னேமணி தானேவயி ரம்மேபொரு துந்தி
மின்னார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூர
ருட் டுறையுள்
அன்னேயுனக் காளாயினி யல்லேனென லாமே. (3)

முடியேனினிப் பிறவேன்பெறின் மூவேன்பெற்ற மூர்த்தீ
கொடியேன்பல பொய்யேயுரைப் பேனைக்குறிக்
கொண்ணீ
செடியார்பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர
ருட் டுறையுள்
அடிகேளுனக் காளாயினி யல்லேனென லாமே. (4)

இ66

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதம்பணி வார்கள்பெறும் பண்டமது பணியாய்
ஆதன்பொரு ளானேனறி வில்லேனரு ளாளா
தாதார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்
டுறையுள்
ஆதீயுனக் காளாயினி யல்லேனென லாமே. (5)

தண்ணார்மதி சூடீதழல் போலுந்திரு மேனீ
எண்ணார்புர மூன்றுமெரி யுண்ணநகை செய்தாய்
மண்ணார் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூரருட்
டுறையுள்
அண்ணாவுனக் காளாயினி யல்லேனென லாமே. (6)

ஊனாயுயி ரானாயுட லானாயுல கானாய்
வானாய்நில னானாய்கட லானாய்மலை யானாய்
தேனார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்
டுறையுள்
ஆனாயுனக் காளாயினி யல்லேனென லாமே. (7)

ஏற்றார்புர மூன்றுமெரி யுண்ணச்சிலை தொட்டாய்
தேற்றாதன சொல்லித்திரி வேனோசெக்கர் வானீர்
ஏற்றாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்
டுறையுள்
ஆற்றாயுனக் காளாயினி யல்லேனென லாமே. (8)

மழுவாள்வல னேந்தீமறை யோதீமங்கை பங்கா
தொழுவாரவர் துயராயின தீர்த்தலுன தொழிலே
செழுவார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்
டுறையுள்
அழகாவுனக் காளாயினி யல்லேனென லாமே. (9)

காரூர்புன லெய்திக்கரை கல்லித்திரைக் கையால்
பாரூர்புக ழெய்தித்திகழ் பன்மாமணி யுந்திச்
சீரூர்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்
டுறையுள்
ஆரூரனெம் பெருமாற்கா ளல்லேனென லாமே. 10)

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமச்சிவாயத் திருப்பதிகம்

## ஏழாம் திருமுறை

திருப்பாண்டிக்கொடுமுடி பண் பழம்பஞ்சுரம்

திருச்சிற்றம்பலம்

மற்றுப்பற்றெனக் கின்றிநின்திருப்
பாதமே மனம் பாவித்தேன்
பெற்றலும்பிறந் தேனினிப்பிற
வாததன்மைவந் தெய்தினேன்
கற்றவர்தொழு தேத்துஞ்சீர்க்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்றவாவுனை நான்மறக்கினுஞ்
சொல்லுநா நமச்சிவாயவே. (1)

இட்டனும்மடி யேத்துவாரிகழ்ந்
திட்டநாள்மறந் திட்ட நாள்
கெட்டநாளிவை யென்றலாற்கரு
தேன்கிளர்புனற் காவிரி
வட்டவாசிகை கொண்டடிதொழு
தேத்துபாண்டிக் கொடுமுடி
நட்டவாவுனை நான் மறக்கினுஞ்
சொல்லுநா நமச்சிவாயவே. (2)

ஓவுநாளுணர் வழியுநாளுயிர்
போகுநாளுயர் பாடைமேல்
காவுநாளிவை யென்றலாற்கரு
தேன்கிளர்புனற் காவிரிப்
பாவுதண்புனல் வந்திழிபரஞ்
சோதிபாண்டிக் கொடுமுடி
நாவலாவுனை நான்மறக்கினுஞ்
சொல்லுநா நமச்சிவாயவே. (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லையில்புக ழெம்பிரானெந்தை
தம்பிரானென்பொன் மாமணி
கல்லையுந்தி வளம்பொழிந்திழி
காவிரியதன் வாய்க்கரை
நல்லவர்தொழு தேத்துஞ்சீர்க்கறை
யூரிற்பாண்டிக் கொடுமுடி
வல்லவாவுனை நான்மறக்கினுஞ்
சொல்லுநா நமச்சிவாயவே. (4)

அஞ்சினார்க்கர ணாதியென்றடி
யேனுநான்மிக வஞ்சினேன்
அஞ்சலென்றடித் தொண்டனேற்கரு
ளல்கினாய்க்கழி கின்றதென்
பஞ்சின்மெல்லடிப் பாவைமார்குடைந்
தாடுபாண்டிக் கொடுமுடி
நஞ்சணிகண்ட நான்மறக்கினுஞ்
சொல்லுநா நமச்சிவாயவே. (5)

ஏடுவானிளந் திங்கள்சூடினை
யென்பின்கொல்புலித் தோலின்மேல்
ஆடுபாம்ப தரைக்கசைத்த
வழகனேயந்தண் காவிரிப்
பாடுதண்புனல் வந்திழிபரஞ்
சோதிபாண்டிக் கொடுமுடிச்
சேடனேயுனை நான்மறக்கினுஞ்
சொல்லுநா நமச்சிவாயவே. (6)

விரும்பிநின்மலர்ப் பாதமேநினைத்
தேன்வினைகளும் விண்டன
நெருங்கிவண்பொழில் சூழ்ந்தெழில்பெற
நின்றகாவிரிக் கோட்டிடைக்
குரும்பைமென்முலைக் கோதைமார்குடைந்
தாடுபாண்டிக் கொடுமுடி
விரும்பனேயுனை நான்மறக்கினுஞ்
சொல்லுநா நமச்சிவாயவே. (7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்பொனேர்சடை யாய்திரிபுரந்
தீயெழச்சிலை கோலினாய்
வம்புலாங்குழ லாளைப்பாக
மமர்ந்துகாவிரிக் கோட்டிடைக்
கொம்பின்மேற்குயில் கூவமாமயி
லாடுபாண்டிக் கொடுமுடி
நம்பனேயுனை நான்மறக்கினுஞ்
சொல்லுநா நமச்சிவாயவே. (8)

சாரணன்றந்தை யெம்பிரானெந்தை
தம்பிரானன்பொன் மாமணியென்று
பேரெணாயிர கோடிதேவர்
பிதற்றிநின்று பிரிகிலார்
நாரணன்பிர மன்றொழுங்கறை
யூரிற்பாண்டிக் கொடுமுடிக்
காரணாவுனை நான்மறக்கினுஞ்
சொல்லுநா நமச்சிவாயவே. (9)

கோணியபிறை சூடியைக்கறை
யூரிற்பாண்டிக் கொடுமுடி
பேணியபெரு மானைப்பிஞ்ஞகப்
பித்தனைப்பிறப் பில்லியைப்
பாணுலாவரி வண்டறைகொன்றைத்
தாரனைப்படப் பாம்பரை
நாணனைத்தொண்ட னூரன்சொல்லிவை
சொல்லுவார்க்கில்லைத் துன்பமே. (10)

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருத்தொண்டர்த்தொகை

## ஏழாம் திருமுறை

திருவாரூர் பண் - கொல்லிக்கௌவாணம்

திருச்சிற்றம்பலம்

தில்லைவா ழந்தணர்தம் மடியார்க்கு மடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே என்னாத வியற்பகைக்கு மடியேன்
இளையான்றன் குடிமாற னடியார்க்கு மடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டற் கடியேன்
அல்லிமென் முல்லையந் தாரமர் நீதிக்கடியேன்
ஆரூர னாரூரி லம்மானுக் காளே. (1)

இலைமலிந்த வேனம்பி யெறிபத்தற் கடியே
னேனாதி நாதன் றனடியார்க்கு மடியேன்
கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பற் கடியேன்
கடவூரிற் கலயன் தனடியார்க்கு மடியேன்
மலைமலிந்த தோள் வள்ளன் மானக்கஞ்சாற
னெஞ்சாத வாட்டாய னடியார்க்கு மடியேன்
அலைமலிந்த புனன்மங்கை யானாயற் கடியேன்
ஆரூர னாரூரி லம்மானுக் காளே. (2)

மும்மையா லுலகாண்ட மூர்த்திக்கு மடியேன்
முருகனுக்கு முருத்திர பசுபதிக்கு மடியேன்
செம்மையே திருநாளைப் போவார்க்கு மடியேன்
றிருக்குறிப்புத் தொண்டர்தம் மடியார்க் குமடியேன்
மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதையை மழுவினா லெறிந்த
அம்மையா னடிச்சண்டிப் பெருமானுக் கடியேன்
ஆரூர னாரூரி லம்மானுக் காளே. (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக்கரையன் றன்னடியார்க்கு மடியேன்
பெருநம்பி குலச்சிறைதன் னடியார்க்கு மடியேன்
பெருமிழலைக் குறும்பற்கும் பேயார்க்கு மடியேன்
ஒருநம்பி யப்பூதி யடியார்க்கு மடியே
னொலிபுனல்சூழ் சாத்த மங்கை நீலநக்கற் கடியேன்
அருநம்பி நமிநந்தியடி யார்க்கு மடியேன்
ஆரூர னாரூரி லம்மானுக் காளே. (4)

வம்பறா வரிவண்டு மணநாற மலரு
மதுமலர்நற் கொன்றையா னடியலாற்பேணா
எம்பிரான் சம்பந்த னடியார்க்கு மடியேன்
னேயர்கோன் கலிக்காம னடியார்க்கு மடியேன்
நம்பிரான் றிருமூல னடியார்க்கு மடியேன்
னாட்டமிகு தண்டிக்கும் மூர்க்கற்கு மடியேன்
நம்பரான சோமாசி மாறனுக்கு மடியேன்
ஆரூர னாரூரி லம்மானுக் காளே. (5)

வார்கொண்ட வனமுலையா ளுமைபங்கன் கழலே
மறவாது கல்லெறிந்த சாக்கியற்கு மடியேன்
சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கு மடியேன்
செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டற் கடியேன்
கார்கொண்ட கொடைக்கழறிற் றறிவாற்கு மடியேன்
கடற்காழிக் கணநாத னடியார்க்கு மடியேன்
ஆர்கொண்ட வேற்கூற்றன் களந்தைக்கோ னடியேன்
ஆரூர னாரூரி லம்மானுக் காளே. (6)

பொய்யடிமை யில்லாத புலவர்க்கு மடியேன்
பொழிற்கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழற் கடியேன்
மெய்யடியா னரசிங்க முனையரையற் கடியேன்
விரிதிரைசூழ் கடனாகை யதிபத்தற் கடியேன்
கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பன் கலியன்
கழற்சத்தி வரிஞ்சையர்கோ னடியார்க்கு மடியேன்
ஐயடிகள்கா டவர்கோ னடியார்க்கு மடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே. (7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறைக்கண்டன் கழலடியே காப்புக்கொண்டி ருந்த
கணம்புல்ல நம்பிக்குங் காரிக்கு மடியேன்
நிறைக்கொண்ட சிந்தையால் நெல்வேலி வென்ற
நின்றசீர் நெடுமாற னடியார்க்கு மடியேன்
துறைக்கொண்ட செம்பவள மிருளகற்றுஞ் சோதித்
தொன்மயிலை வாயிலா னடியார்க்கு மடியேன்
அறைக்கொண்ட வேனம்பி முனையடுவார்க் கடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே. (8)

கடல்சூழ்ந்த வுலகெலாங் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்க னடியார்க்கு மடியேன்
மடல்சூழ்ந்த தார்நம்பி யிடங்கழிக்குந் தஞ்சை
மன்னவனாஞ் செருத்துணைதன் னடியார்க்கு மடியேன்
புடைசூழ்ந்த புலியதண்மே லரவாட வாடி
பொன்னடிக்கே மனம் வைத்த புகழ்த்துணைக்கு மடியேன்
அடல்சூழ்ந்த வேல்நம்பி கோட்புலிக்கு மடியேன்
னாரூர னாரூரி லம்மானுக் காளே. (9)

பத்தராய்ப் பணிவார்க ளெல்லார்க்கு மடியேன்
பரமனையே பாடுவா ரடியார்க்கு மடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கு மடியேன்
றிருவாரூர்ப் பிறந்தார்க ளெல்லார்க்கு மடியேன்
முப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கு மடியேன்
அப்பாலு மடிச்சார்ந்த வடியார்க்கு மடியேன்
னாரூர னாரூரி லம்மானுக் காளே. (10)

மன்னிய சீர்மறைநாவ னின்றவூர்ப் பூசல்
வரிவளையாள் மானிக்கும் நேசனுக்கு மடியேன்
தென்னவனா யுலகாண்ட செங்கணார்க் கடியேன்
திருநீல கண்டத்துப் பாணனார்க் கடியேன்
என்னவனா மரனடியே யடைந்திட்ட சடைய
னிசைஞானி காதலன் திருநாவலூர்க் கோன
அன்னவனா மாரூர னடிமைகேட் டுவப்பா
ராரூரி லம்மானுக் கன்பரா வாரே. (11)

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கேதீச்சரப் பதிகம்

திருக்கேதீச்சரம் பண் - நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

நத்தார்புடை ஞானன்பசு வேறிந்நனை கவிழ்வாய்
மத்தம்மத யானையுரி போர்த்தமண வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான்திருக் கேதீச்சரத் தானே
(1)

சுடுவார்பொடி நீறுந்நல்ல துண்டப்பிறைக் கீளும்
கடமார்களி யானையுரி யணிந்தகறைக் கண்டன்
படவேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
திடமாவுறை கின்றான்திருக் கேதீச்சரத் தானே.
(2)

அங்கம்மொழி யன்னாரவ ரமரர்தொழு தேத்த
வங்கம்மலி கின்றகடன் மாதோட்டநன் னகரில்
பங்கம்செய் தபிறைசூடினன் பாலாவியின் கரைமேல்
செங்கண்ணர வசைத்தான்திருக் கேதீச்சரத் தானே.
(3)

கரியகறைக் கண்டன்நல்ல கண்மேலொரு கண்ணான்
வரியசிறை வண்டியாழ்செயு மாதோட்டநன் னகருள்
பரியதிரை யெறியாவரு பாலாவியின் கரைமேல்
தெரியும்மறை வல்லான்றிருக் கேதீச்சரத் தானே.
(4)

அங்கத்துறு நோய்களடி யார்மேலொழித் தருளி
வங்கம்மலி கின்றகடன் மாதோட்டநன் னகரில்
பங்கஞ்செய்த மடவாளொடு பாலாவியின் கரைமேல்
தெங்கம்பொழில் சூழ்ந்ததிருக் கேதீச்சரத் தானே.
(5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெய்யவினையா யவடியார் மேலொழித் தருளி
வையமலி கின்றகடன் மாதோட்ட நன்னகரில்
பையேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
செய்யசடை முடியான்திருக் கேதீச்சரத் தானே.
(6)

ஊனத்துறு நோய்களடி யார்மேலொழித் தருளி
வானத்துறு மலியுங்கடன் மாதோட்டநன் னகரில்
பானத்துறு மொழியாளொடு பாலாவியின் கரைமேல்
ஏனத்தெயி றணிந்தான்திருக் கேதீச்சரத் தானே.
(7)

அட்டன்னழ காகவரை தன்மேலர வார்த்து
மட்டுண்டுவண் டாலும்பொழின் மாதோட்ட நன்னகரில்
பட்டவரி நுதலாளொடு பாலாவியின் கரைமேல்
சிட்டன்னமை யாள்வான்றிருக் கேதீச்சரத்தானே. (8)

மூவரென விருவரென முக்கண்ணுடை மூர்த்தி
மாவின்கனி தூங்கும்பொழில் மாதோட்ட நன்னகரில்
பாவம்வினை யறுப்பார்பயில் பாலாவியின் கரைமேல்
தேவன்எனை யாள்வான்றிருக் கேதீச்சரத் தானே.
(9)

கறையார்கடல் சூழ்ந்தகழி மாதோட்ட நன்நகருள்
சிறையார்பொழில் வண்டியாழ்செயுங் கேதீச்சரத் தானை
மறையார்புக ழூரன்னடித் தொண்டனுரை செய்த
குறையாத்தமிழ் பத்துஞ்சொலக் கூடாகொடு வினையே.
(10)

திருச்சிற்றம்பலம்

---

" அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் "

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநொடித்தான்மலைப் பதிகம்

## ஏழாம் திருமுறை

திருநொடித்தான்மலை பண்: பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

தானெனை முன்படைத்தா
னதறிந்துதன் பொன்னடிக்கே
நானென பாடலந்தோ
நாயினேனைப் பொருட்படுத்து
வானெனைவந் தெதிர்கொள்ள
மத்தயானை யருள்புரிந்து
ஊனுயிர் வேறுசெய்தான்
நொடித்தான்மலை யுத்தமனே. (1)

ஆனை யுரித்தபகை
யடியேனொடு மீளக்கொலோ
ஊனை யுயிர்வெருட்டி
யொள்ளியானை நினைந்திருந்தேன்
வானை மதித்தமரர்
வலஞ்செய்தெனை யேறவைக்க
ஆனை யருள்புரிந்தான்
நொடித்தான்மலை யுத்தமனே. (2)

மந்திர மொன்றறியேன்
மனைவாழ்க்கை மகிழ்ந்தடியேன்
சுந்தர வேடங்களாற்
றுரிசேசெயுந் தொண்டனெனை
அந்தர மால்விசும்பி
லழகானை யருள்புரிந்த
துந்தர மோநெஞ்சமே
நொடித்தான்மலை யுத்தமனே (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வை யுகந்தநெஞ்சே
மடவார்தங்கள் வல்வினைப்பட்
டாழ முகந்தவென்னை
யதுமாற்றி யமரரெல்லாம்
சூழ வருள்புரிந்து
தொண்டனேன் பரமல்லதொரு
வேழ மருள்புரிந்தான்
நொடித்தான்மலை யுத்தமனே. (4)

மண்ணுல கிற்பிறந்து
நும்மைவாழ்த்தும் வழியடியார்
பொன்னுல கம்பெறுதல்
தொண்டனேனின்று கண்டொழிந்தேன்
விண்ணுல கத்தவர்கள்
விரும்பவெள்ளை யானையின்மேல்
என்னுடல் காட்டுவித்தான்
நொடித்தான்மலை யுத்தமனே. (5)

அஞ்சினை யொன்றிநின்று
அலர்கொண்டடி சேர்வறியா
வஞ்சனை யென்மனமே
வைகிவானநன் னாடர்முன்னே
துஞ்சுதன் மாற்றுவித்துத்
தொண்டனேன்பர மல்லதொரு
வெஞ்சின வானைதந்தான்
நொடித்தான்மலை யுத்தமனே. (6)

நிலைகெட விண்ணதிர
நிலமெங்கு மதிர்ந்தசைய
மலையிடை யானையேறி
வழியேவரு வேனெதிரே
அலைகட லாலரையன்
அலர்கொண்டுமுன் வந்திறைஞ்ச
உலையணை யாதவண்ணம்
நொடித்தான்மலை யுத்தமனே. (7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரவொலி யாகமங்க
ளறிவாரறி தோத்திரங்கள்
விரவிய வேதவொலி
விண்ணெலாம்வந் தெதிர்ந்திசைப்ப
வரமலி வாணன்வந்து
வழிதந்தெனக் கேறுவதோர்
சிரமலி யானைதந்தான்
நொடித்தான்மலை யுத்தமனே. (8)

இந்திரன் மால்பிரமன்
லெழிலார்மிகு தேவரெல்லாம்
வந்தெதிர் கொள்ளவென்னை
மதயானை யருள்புரிந்து
மந்திர மாமுனிவ
ரிவனாரென வெம்பெருமான்
நந்தம ரூரரென்றான்
நொடித்தான்மலை யுத்தமனே. (9)

ஊழிதொ றூழிமுற்று
முயர்பொன்னொடித் தான்மலையைச்
சூழிசை யின்கரும்பின்
சுவைநாவல வூரன்சொன்ன
ஏழிசை யின்றமிழா
லிசைந்தேத்திய பத்தினையும்
ஆழி கடலரையா
வஞ்சையப்பர்க் கறிவிப்பதே. (10)

திருச்சிற்றம்பலம்

---

ஆலயந் தொழுவது சாலவும் நன்று.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த
# தேவாரங்கள்

திருக்கோளிலி பண்: நட்டராகம்

நீள நினைந்தடி யேனுமை நித்தலுங் கைதொழுவேன்
வாளனகண்மட வாளவள்வாடி வருந்தாமே
கோளிலியெம்பெரு மான்குண்டையூர்ச்சில
நெல்லுப் பெற்றேன்
ஆளிலையெம்பெரு மானவையட்டித் தரப்பணியே. (1)

திருமழபாடி பண்: நட்டராகம்

பொன்னார்மேனியனே புலித்தோலை யரைக்கசைத்து
மின்னார்செஞ்சடைமேல் மிளிர்கொன்றை யணிந்தவனே
மன்னேமாமணியே மழபாடியுண் மாணிக்கமே
அன்னேயுன்னையல்லா லினியாரை நினைக்கேனே. (2)

திருப்புகலூர் பண்: கொல்லி

தம்மையேபுகழ்ந் திச்சைபேசினுஞ்
சார்வினுந்தொண்டர் தருகிலாப்
பொய்ம்மையாளரைப் பாடாதேயெந்தை
புகலூர்பாடுமின் புலவீர்காள்
இம்மையேதருஞ் சோறுங்கூறையு
மேத்தலாமிடர் கெடலுமாம்
அம்மையேசிவ லோகமாள்வதற்
கியாதுமையுற வில்லையே. (3)

திருக்கடவூர்மயானம் பண்: பழம்பஞ்சுரம்

மருவார்கொன்றை மதிசூடி
மாணிக்கத்தின் மலைபோல
வருவார்விடைமேன் மாதோடு
மகிழ்ந்துபூதப் படைசூழத்
திருமால்பிரம னிந்திரற்குந்
தேவர்நாகர் தானவர்க்கும்
பெருமான்கடவூர் மயானத்துப்
பெரியபெருமா னடிகளே. (4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவொற்றியூர் பண்: தக்கேசி

அழுக்கு மெய்கொடுன் றிருவடி யடைந்தேன்
அறுவு நான்படப் பாலதொன் றானால்
பிழுக்கை வரியும் பால்கொள்வ ரடிகேள்
பிழைப்பனாகிலுந் திருவடிப் பிழையேன்
வழுக்கி வீழினுந் திருப்பெய ரல்லான்
மற்று நானறி யேன்மறு மாற்றம்
ஒழுக்க வென்கணுக் கொருமருந் துரையாய்
ஒற்றி யூரெனு மூருறை வானே. (5)

திருப்புன்கூர் பண்: தக்கேசி

அந்த ணாளனுன் னடைக்கலம் புகுத
வவனைக் காப்பது காரண மாக
வந்த காலன்ற னாருயி ரதனை
வவ்வி னாய்க்குன்றன் வண்மைகண் டடியேன்
எந்தை நீயெனை நமன்றமர் நலியி
லிவன்மற் றென்னடி யானென விலக்கும்
சிந்தையால் வந்துன் றிருவடி யடைந்தேன்
செழும்பொ ழிற்றிருப் புன்கூ ருளானே. (6)

திருவாரூர் பண்: தக்கேசி

பொன்னு மெய்ப்பொரு ளுந்தரு வானைப்
போக முந்திரு வும்புணர்ப் பானைப்
பின்னை யென்பிழை யைப்பொறுப் பானைப்
பிழையெலாந்தவி ரப்பணிப் பானை
இன்ன தன்மைய னென்றறி யொண்ணா
வெம்மா னையெளி வந்தபி ரானை
அன்னம்வை கும்வ யற்பழ னத்தணி
யாரூ ரானை மறக்கலுமாமே. (7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாரூர் பண்: செந்துருத்தி

மீளா வடிமை யுமக்கே யாளாய்ப் பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போ லுள்ளே கனன்று முகத்தான் மிகவாடி
ஆளா யிருக்கு மடியார் தங்க ளல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவா ரூரீர் வாழ்ந்து போதீரே. (8)

திருவையாறு பண்: காந்தாரபஞ்சமம்

பரவும்பரிசொன் றறியேனான்
பண்டேயும்மைப் பயிலாதேன்
இரவும்பகலும் நினைந்தாலு
மெய்தநினைய மாட்டேனான்
சுரவிலருவி கமுகுண்ணத்
தெங்கங்குலைக்கீழ்க் கருப்பாலை
அரவந்திரைக்கா விரிகோட்டத்
தையாறுடைய வடிகளோ. (9)

திருவாவடுதுறை பண்: தக்கேசி

கங்கைவார்சடை யாய்கணநாதா
காலகாலனே காமனுக்கனலே
பொங்குமாகடல் விடமிடற்றானே
பூதநாதனே புண்ணியபுனிதா
செங்கண்மால்விடை யாய்தெளிதேனே
தீர்த்தனே திரு வாவடுதுறையுள்
அங்கணாவெனை யஞ்சலென் றருளா
யாரெனக்குற வமரர்களேறே. (10)

திருச்சிற்றம்பலம்

---

எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்தவை

## எட்டாம் திருமுறை

*(சிவனது அநாதி முறைமையான பழமை)*

*திருப்பெருந்துறையில் அருளியது*

*(கலிவெண்பா)*

**சிவபுராணம்.**

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணி தன் தாள் வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க

வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன் தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உண்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க

ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவனடி போற்றி

ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினை முழுவதும் ஓய உரைப்பனியான்

கண்ணுதலான் தன் கருணைக் கண்காட்டவந் தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழல் இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து(ம்) மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறைந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லாவினையேன் புகழுமாறு ஒன்று அறியேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிப்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அநின்ற இத்தாவர சங்கமத்துள்

எல்லா பிறப்பும் பிறந்திளைத்தேன் எம் பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்
உய்யவென் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வென ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா
பொய்யாயின வெல்லாம் போயகல வந்தருளி
மெஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவுஇறுதி யில்லாய் அனைத்து உலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருள்வாய்
போக்குவாய் என்னை புகுவிப்பாய் நின் தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே

கறந்த பால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓரைந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன்
தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம் பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்து எங்கும் புழு அழுக்குமூடி
மலம் சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்கு
கலந்த அன்பாகிக் கசிந்து உள் உருகும்
நலம் தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலம் தன்மேல் வந்தருளி நீள் கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங் கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆராவமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி யென் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாய்
சோதியனே துன்னிருளே தோன்றாய் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தாற் கொண்டு உணர்வார்
தம் கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண் உணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்றுவிகார விடக்குடம்பின் உள்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ வென்றென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றிப் புகழ்ந்திருந்து பொய் கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப் பிறவி சாராமே
கள்ளப் புலக் குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே (90)

அல்லல் பிறவி அறுப்பானே ஓ வென்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து. (95)

திருச்சிற்றம்பலம்

---

அன்பு சிவமெனல் அறிஞர்க் குண்டு.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவண்ணாமலையில் அருளியது

# திருவெம்பாவை

கொச்சகக்கலிப்பா

திருச்சிற்றம்பலம்

ஆதியு மந்தமு மில்லா வரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதா ரமளியின்மே னின்றும் புரண்டிங்ங
னேதேனு மாகாள் கிடந்தாளென் னேயென்னே
யீதேயெந் தோழி பரிசேலோ ரெம்பாவாய். (1)

பாசம் பரஞ்சோதிக் கென்பா யிராப்பகனாம்
பேசும்போ தெப்போதிப் போதா ரமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ யிவையுஞ் சிலவோ விளையாடி
யேசுமிட மீதோ விண்ணோர்க ளேத்துதற்குக்
கூசு மலர்ப் பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் றில்லைச் சிற்றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோ ரெம்பாவாய். (2)

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந்தெதி ரெழுந்தென்
அத்தனானந்த னமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீ ரீசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் னன்புடைமை யெல்லோ மறியோமோ
சித்த மழகியார் பாடாரோ நஞ்சிவனை
இத்தனையும் வேண்டு மெமக்கேலோ ரெம்பாவாய்.
(3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒண்ணித் திலநகையா யின்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியா ரெல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோ மவ்வளவுங்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயே வந்
தெண்ணிக் குறையிற் றுயிலேலோ ரெம்பாவாய்
(4)

மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
போலறிவோ மென்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே யறிவரியான்
கோலமு நம்மையாட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்
றோல மிடினு முணரா யுணராய் காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய் (5)

மானேநீ நென்னலை நாளை வந்துங்களை
நானே யெழுப்புவ னென்றலு நாணாமே
போன திசைபகரா யின்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே யறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே யுருகா யுனக்கே யுறுமெமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய்
(6)

அன்னே யிவையுஞ் சிலவோ பலவமரர்
உன்னற்கரியா னொருவ னிருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய் திறப்பாய்
தென்னாவென்னா முன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை யென்னரைய னின்னமுதென் றெல்லோமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறா யின்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய் (7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கு
மேழி லியம்ப இயம்புவெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோங் கேட்டிலையோ
வாழியீ தென்ன வுறக்கமோ வாய்திறவாய்
ஆழியா னன்புடைமை யாமாறு மிவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற வொருவனை
ஏழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய். (8)

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்ற வுன்சீரடியோம்
உன்னடியார் தாள் பணிவோ மாங்கவர்க்கே
பாங்காவோம்
அன்னவரே யெங்கணவ ராவா ரவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே யெமக்கெங்கோ னல்குதியேல்
என்ன குறையு மிலோமேலோ ரெம்பாவாய். (9)

பாதாள மேழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியு மெல்லாப் பொருண்முடிவே
பேதை யொரு பாற்றிருமேனி யொன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணுந் துதித்தாலும்
ஓதவுலவா வொருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்.
ஏதவனூ ரேதவன்பே ராருற்றா ராரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய். (10)

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்கா ணாரழல்போற்
செய்யாவெண்ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ யாட்கொண்டருளும் விளையாட்டின்
உய்வார்க ளுய்யும் வகையெல்லா முய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பா யெமையேலோ ரெம்பாவாய். (11)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்த்த பிறவித் துயர்கெடநா மார்த்தாடுந்
தீர்த்தனற் றில்லைச் சிற்றம்பலத்தே தீயாடுங்
கூத்தனிவ் வானுங் குவலயமு மெல்லோமுங்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழன்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி யிருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய். (12)

பைங்குவளைக் கார்மலராற் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தாற் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியு மெங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநஞ்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்தாடேலோ ரெம்பாவாய். (13)

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி யப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி யந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி யாடேலோ ரெம்பாவாய். (14)

ஓரொருகா லெம்பெருமா னென்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங்களிகூர
நீரொருகா லோவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவ ராமாறும்
ஆரொருவ ரிவ்வண்ண மாட்கொள்ளும் வித்தகர் தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல் பாய்ந்தாடேலோ ரெம்பாவாய். (15)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைங்குவளைக் கார்மலராற் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தாற் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியு மெங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநஞ்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்தாடேலோ ரெம்பாவாய்.
(13)

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி யப்பொருளாமாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி யந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி யாடேலோ ரெம்பாவாய். (14)

ஓரொருகா லெம்பெருமா னென்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங்களி கூர
நீரொருகா லோவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத்தான்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவ ராமாறும் பணியாள்
ஆரொருவ ரிவ்வண்ண மாட்கொள்ளும் வித்தகர்தான்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல் பாய்ந்தாடேலோ ரெம்பாவாய்.
(15)

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை யாளுடையா ளிட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை யாளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமா னன்பர்க்கு
முன்னி யவணமக்கு முன்சுரக்கு மின்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய்.
(16)

செங்கணவன் பால்திசைமுகன்பால் தேவர்கள் பால்
எங்கு மிலாததோ ரின்பம் நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கணரசை யடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

(17)

அண்ணாமலையா னடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீறற்றாற்போல்
கண்ணா ரிரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணா ரொளி மழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி யாணா யலியாய்ப் பிறங் கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணாரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல் பாய்ந்தாடேலோ
ரெம்பாவாய்.

(18)

உங்கையிற் பிள்ளை யுனக்கே யடைக்கலமென்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமா னுனக்கொன் றுரைப் போங்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார் தோள் சேரற்க
எங்கை யுனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே யெமக்கெங்கோ னல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய்.

(19)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றி யருளுக நின்னாதியாம் பாதமலர்
போற்றி யருளுகநின் னந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கு மீறா மிணையடிகள்
போற்றிமா னான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியா முய்யவாட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியா மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய்.

(20)

திருச்சிற்றம்பலம்

பொய்யும் பொறாமையும் புன்மையோர்க்குண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில்லையில் அருளிச் செய்த

# திருப்பொற்சுண்ணம்

## எண்சீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

முத்துநல் தாமம்பூ மாலை தூக்கி
 முளைக்குடம் தூபம்நல் தீபம்வைம்மின்
சக்தியுஞ் சோமியும் பார்மகளும்
 நாமகளோடு பல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியுங்
 கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தன் ஐயாறன்அம் மானைப் பாடி
 ஆடப் பொற் சுண்ணம் இடித்து நாமே. (1)

பூவியல் வார்சடை எம்பிராற்குப்
 பொற்றிருச் சுண்ணம் இடிக்க வேண்டும்
மாவின் வடுவகி ரன்ன கண்ணீர்
 வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறநிலாமே
 குனிமின் தொழுமினெங் கோனெங் கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மையாளச்
 செம்பொன் செய் சுண்ணம் இடித்துநாமே. (2)

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
 தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டி யெங்கும்
 எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன் அயன்றன் பெருமான்
 ஆழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தரம் ஆளுமை யாள் கொழுநற்
 கேய்ந்த பொற்சுண்ணம் இடித்து நாமே. (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசணி மின்கள் உலக்கையெல்லாங்
காம்பணி மின்கள் கறையுரலை
நேசமுடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்று வாழ்த்தித்
தேசமெல்லாம் புகழ்ந் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாசவினையைப் பறித்து நின்று
பாடிப் பொற்சுண்ணம் இடித்துநாமே. (4)

அறுகெடுப் பார்அய னும் அரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர் கணங்க ளெல்லாம்
நம்மிற்பின் பல்ல தெடுக்கவொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்தவில்லி
திருவேகம் பன் செம் பொற் கோயில்பாடி
மூறுவற் செவ் வாயினீர் முக்கணப்பற்
காடப் பொற் சுண்ணம் இடித்து நாமே. (5)

உலக்கை பலஒச்சு வார்பெரியர்
உலகமெ லாமுரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்து நின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டு கொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்து பொற் சுண்ணம் இடித்து நாமே. (6)

சூடகந் தோள்வளை ஆர்ப்ப ஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்ப ஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
பாடகம் மெல்லடி ஆர்க்கும் மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்
காடக மாமலை அன்னகோவுக்
காடப் பொற்சுண்ணம் இடித்து நாமே. (7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வான்தடங் கண்மட மங்கை நல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கை பொங்கத்
தோள்திரு முண்டந் துதைந்திலங்கச்
சோத்தெம்பி ரானென்று சொல்லிச் சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப் பொற்சுண்ணம் இடித்து நாமே. (8)

வையகம் எல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கை நாட்டி
மெய் யெனும் மஞ்சள் நிறைய அட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப் பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கை பற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப் பொற்சுண்ணம் இடித்து நாமே. (9)

முத்தணி கொங்கைகள் ஆட ஆட
மொய் குழல் வண்டினம் ஆட ஆடச்
சித்தம் சிவனொடும் ஆட ஆடச்
செங்கயற் கண்பனி ஆட ஆடப்
பித்தெம் பிரானொடும் ஆட ஆடப்
பிறவி பிறரொடும் ஆட ஆட
அத்தன் கருணையொ டாட ஆட
ஆடப் பொற் சுண்ணம் இடித்து நாமே. (10

மாடு நகைவாள் நிலாவெறிப்ப
வாய் திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெரு மானைத் தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத் தேறி
ஆடுமின் அம்பலத் தாடினானுக்
காடப் பொற்சுண்ணம் இடித்து நாமே. (11)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையமர் கண்டனை வான நாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் தன்னை
ஐயனை ஐயர் பிரானை நம்மை
அகப்படுத் தாட் கொண்டருமை காட்டும்
பொய்யர் தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொடித்தோள்
பையர வல்குல் மடந்தை நல்லீர்
பாடிப் பொற் சுண்ணம் இடித்து நாமே. (12)

மின்னிடைச் செந்துவர் வாய்க் கருங்கண்
வெண்நகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமு தெங்களப்பன்
எம்பெருமான் இமவான் மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன் தகப்பன்
தமையன் எம் ஐயன் தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கை நல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. (13)

சங்கம் அரற்றச் சிலம் பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாயித ழுந்துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம் பாடிக்
கங்கை இரைப்ப அரா இரைக்கும்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. (14)

ஞானக் கரும்பின் தெளிவைப் பாகை
நாடற்கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்துதித் திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டு கொண்ட
கூத்தனை நாத்தழும் பேற வாழ்த்திப்
பானல் தடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப் பொற்சுண்ணம் இடித்துநாமே. (15)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவகை நாமும்வந் தன்பர் தம்மோ
டாட்செயும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர் கனாவிலுங் கண்ட றியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ்செல்வச்
சேவகம் ஏந்திய வெல் கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப் பாடிச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே. (16)

தேனக மாமலர்க் கொன்றை பாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளை பாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம் பாடி
உம்பரும் இம்பரும் உய்யவன்று
போனக மாகநஞ் சுண்டல் பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. (17)

அயன் தலை கொண்டு செண் டாடல்பாடி
அருக்கன் எயிறுபறித்தல் பாடிக்
கயன்தனைக் கொன்றுரி போர்த்தல் பாடிக்
காலனைக் காலால்உதைத்தல் பாடி
இயைந்தன முப்புரம் எய்தல் பாடி
ஏழை அடியோமை ஆண்டு கொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ணம் இடித்துநாமே. (18)

வட்டமலர்க் கொன்றை மாலை பாடி
மத்தமும்பாடி மதியும் பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லை பாடிச்
சிற்றம்பலத் தெங்கள்செல்வம் பாடிக்
கட்டிய மாசுணக் கச்சை பாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம் பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்துநாமே. (19)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்மையும் பொய்மையும் ஆயினார்க்குச்
சோதியு மாய்இருள் ஆயினார்க்குத்
துன்பமு மாய் இன்பம் ஆயினார்க்கு
பாதியு மாய்முற்றும் ஆயினார்க்குப்
பந்தமு மாய்வீடும் ஆயினார்க்குப்
ஆதியும் அந்தமும் ஆயினார்க்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்து நாமே. (20)

திருச்சிற்றம்பலம்

---

சங்கர சிவசிவ மா தேவா
எங்களை ஆட்கொளவா வாவா

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பெருந்துறையில் அருளியது

# திருப்பள்ளியெழுச்சி

எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

போற்றியென் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்
டேற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
ஏற்றுயர்க் கொடியுடை யாயெனை யுடையாய்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே. (1

அருணன் இந் திரன்திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயநின் மலர்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணல் அங் கண்ணாம்
திரள்நிரை யறுபதம் முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே
அலைகட லேபள்ளி எழுந்தருளாயே. (2)

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை யொளியொளி யுதயத்
தொருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய்
திருப்பெருந்துறை யுறை சிவபெருமானே
யாவரும் அறிவரி யாயெமக் கெளியாய்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே. (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
என்னையும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே. (4)

பூதங்கள் தோறும்நின் றாயெனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறியோம் உனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக் கும்அரி யாயெங்கள் முன்வந்
தேதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே. (5)

பப்பற வீட்டிருந் துணரும்நின் அடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின் றாரணங் கின்மண வாளா
செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே. (6)

அதுபழச் சுவையென அமுதென அறிதற்
கரிதென எளிதென அமரரும் அறியார்
இது அவன் திருவுரு இவனவன் எனவே
எங்களை ஆண்டுகொண் டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழில்திரு வுத்தரகோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா
எதுஎமைப் பணிகொளு மாறது கேட்போம்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே. (7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்திய முதல்நடு இறுதியு மானாய்
மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்
பந்தணை விரலியும் நீயும்நின் அடியார்
பழங்குடில் தொறும் எழுந்தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலுங் காட்டி
அந்தண னாவதும் காட்டிவந் தாண்டாய்
ஆரமுதே பள்ளி எழுந்தருளாயே. (8)

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப் பொருளேயுன தொழுப்படி யோங்கள்
மண்ணகத்தே வந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்
கண்ணகத்தே நின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாயுல குக்குயி ரானாய்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே. (9)

புவனியிற் போய்ப்பிற வாமையினா ணாம்
போக்குகின் றோம் அவ மேயிந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும்நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமுதே பள்ளி எழுந்தருளாயே. (10)

திருச்சிற்றம்பலம்.

அரகர சிவ சிவ மா தேவா
அருளமு தந்தர வா வா வா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிடித்தபத்து

திருத்தோணிபுரத்தில் அருளியது]

எழுசீர் விருத்தம்

திருச்சிற்றம்பலம்

உம்பர்கட் கரசே ஒளிவற நிறைந்த
யோகமே ஊற்றையேன் றனக்கு
வம்பெனப் பழுத்தென் குடிமுழு தாண்டு
வாழ்வற வாழ்வித்த மருந்தே
செம்பொருட் டுணிவே சீருடைக் கழலே
செல்வமே சிவபெரு மானே
எம்பொருட் டுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. (1)

விடைவிடா துகந்த விண்ணவர் கோவே
வினையனே னுடையமெய்ப் பொருளே
முடைவிடா தடியேன் மூத்தற மண்ணாய்
முழுப்புழுக் குரம்பையிற் கிடந்து
கடைபடா வண்ணம் காத்தெனை ஆண்ட
கடவுளே கருணை மா கடலே
இடைவிடா துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. (2)

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. (3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளுடைச் சுடரே அளித்ததோர் கனியே
பெருந்திறல் அருந்தவர்க் கரசே
பொருளுடைக் கலையே புகழ்ச்சியைக் கடந்த
போகமே யோகத்தின் பொலிவே
தெருளிடத் தடியார் சிந்தையுட் புகுந்த
செல்வமே சிவபெருமானே
இருளிடத் துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. (4)

ஒப்புனக் கில்லா ஒருவனே அடியேன்
உள்ளத்துள் ஒளிர்கின்ற ஒளியே
மெய்ப்பதம் அறியா வீறிலி யேற்கு
விழுமிய தளித்ததோ ரன்பே
செப்புதற் கரிய செழுஞ்சுடர் மூர்த்தி
செல்வமே சிவபெருமானே
எய்ப்பிடத் துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. (5)

அறவையேன் மனமே கோயிலாக் கொண்டாண்
டளவிலா ஆனந்த மருளிப்
பிறவிவே ரறுத்தென் குடிமுழு தாண்ட
பிஞ்ஞகா பெரியஎம் பொருளே
திறவிலே கண்ட காட்சியே அடியேன்
செல்வமே சிவபெருமானே
இறவிலே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. (6)

பாசவே ரறுக்கும் பழம்பொருள் தன்னைப்
பற்றுமா றடியனேற் கருளிப்
பூசனை உகந்தென் சிந்தையுட் புகுந்து
பூங்கழல் காட்டிய பொருளே
தேசுடை விளக்கே செழுஞ்சுடர் மூர்த்தி
செல்வமே சிவபெருமானே
ஈசனே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. (7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தனே அண்டர் அண்டமாய் நின்ற
ஆதியே யாதுமீ றில்லாச்
சித்தனே பத்தர் சிக்கெனப் பிடித்த
செல்வமே சிவபெருமானே
பித்தனே எல்லா உயிருமாய்த் தழைத்துப்
பிழைத்தவை அல்லையாய் நிற்கும்
எத்தனே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. (8)

பால் நினைந் தூட்டுந் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்தருளுவ தினியே. (9)

புன்புலால் யாக்கை புரைபுரை கனியப்
பொன்னெடுங் கோயிலாப் புகுந்தென்
என்பெலாம் உருக்கி எளியையா ஆண்ட
ஈசனே மாசிலா மணியே
துன்பமே பிறப்பே இறப்பொடு மயக்காந்
தொடக்கெலாம் அறுத்த நற்சோதீ
இன்பமே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. (10)

திருச்சிற்றம்பலம்.

---

தூயவுள்ளத்தாற் கூறிய சொல் என்றும் வீணாகாது.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருட்பத்து

## திருப்பெருந்துறை

### எழுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரிகுழற் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள்வெண் ணீற்றாய்
பங்கயத் தயனும்மா லறியா
நீதியே செல்வத் திருப்பெருந் துறையில்
நிறைமலர்க் குருந்தமே யசீர்
ஆதியே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. (1)

நிருத்தனே நிமலா நீற்றனே நெற்றிக்
கண்ணனே விண்ணுளோர் பிரானே
ஒருத்தனே உன்னை ஓலமிட் டலறி
உலகெலாந் தேடியுங் காணேன்
திருத்தமாம் பொய்கைத் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அருத்தனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. (2)

எங்கணா யகனே என்னுயிர்த் தலைவா
ஏலவார் குழலிமார் இருவர்
தங்கணா யகனே தக்கநற் காமன்
தனதுடல் தழலெழ விழித்த
செங்கணா யகனே திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அங்கணா அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமலநான் முகனும் கார்முகில் நிறத்துக்
கண்ணனும் நண்ணுதற் கரிய
விமலனே யெமக்கு வெளிப்படா யென்ன
வியன்தழல் வெளிப்பட்ட எந்தாய்
திமிலநான் மறைசேர் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அமலனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. (4)

துடிகொள்நே ரிடையாள் சுரிகுழல் மடந்தை
துணைமுலைக் கண்கள் தோய் சுவடு
பொடிகொள்வான் தழலிற் புள்ளிபோல் இரண்டு
பொங்கொளி தங்குமார் பினனே
செடிகொள்வான் பொழில்சூழ் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அடிகளே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. (5)

துப்பனே தூயாய் தூயவெண் ணீறு
துதைந்தெழு துளங்கொளி வயிரத்
தொப்பனே உன்னை உள்குவார் மனத்தின்
உறுசுவை அளிக்கும் ஆரமுதே
செப்பமா மறைசேர் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அப்பனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. (6)

மெய்யனே விகிர்தா மேருவே வில்லா
மேவலர் புரங்கள் மூன்றெரித்த
கையனே காலாற் காலனைக் காய்ந்த
கடுந்தழற் பிழம்பன்ன மேனிச்
செய்யனே செல்வத் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
ஐயனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. (7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தனே முதல்வா முக்கணா முனிவா
மொட்டறா மலர்பறித் திறைஞ்சிப்
பத்தியாய் நினைந்து பரவுவார் தமக்குப்
பரகதி கொடுத்தருள் செய்யுஞ்
சித்தனே செல்வத் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அத்தனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. (8)

மருளனேன் மனதை மயக்கற நோக்கி
மறுமையோ டிம்மையுங் கெடுத்த
பொருளனே புனிதா பொங்குவா ளரவங்
கங்கைநீர் தங்குசெஞ் சடையாய்
தெருளுநான் மறைசேர் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அருளனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. (9)

திருந்துவார் பொழில்சூழ் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
இருந்தவா றெண்ணி ஏசற நினைந்திட்
டென்னுடை யெம்பிரான் என்றென்
றருந்தவா நினைந்தே ஆதரித் தழைத்தால்
அலைகடல் அதனுளே நின்று
பொருந்தவா கயிலை புகுநெறி இதுகாண்
போதராய் என்றரு ளாயே. (10)

திருச்சிற்றம்பலம்

---

கள்ளமில்லாத உள்ளத்தில் கடவுள் இருப்பர்

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சோப்பதிகம்

கலிவிருத்தம்

தில்லை திருச்சிற்றம்பலம்

முக்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணஞ்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தன்எனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே. (1)

நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனைச்
சிறுநெறிகள் சேராமே திருவருளே சேரும் வண்ணம்
குறியொன்றும் இல்லாத கூத்தன்தன் கூத்தையெனக்
கறியும் வண்ணம் அருளிவா றார்பெறுவார் அச்சோவே.(2)

பொய்யெல்லாம் மெய்யென்று புணர்முலையார் போகத்தே
மையலுறக் கடவேனை மாளாமே காத்தருளித்
தையலிடங் கொண்ட பிரான் தன்கழலே சேரும் வண்ணம்
ஐயன் எனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே. (௩)

மண்ணதனிற் பிறந்தெய்த்து மாண்டு விழக் கடவேனை
எண்ணமிலா அன்பருளி எனையாண்டிட் டென்னை யுந்தன்
சுண்ணவெண்ணீ றணிவித்துத் தூய் நெறியே சேரும்
வண்ணம்
அண்ணல் எனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.
(4)

பஞ்சாய அடிமடவார் கடைக்கண்ணால் இடர்ப்பட்டு
நெஞ்சாய துயர் கூர நிற்பேன் உன் அருள் பெற்றேன்
உய்ஞ்சேன் நான் உடையானே அடியேனை வருக என்
றஞ்சேல் என் றருளியவா றார்பெறுவார் அச்சோவே
(5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெந்துவிழும் உடற்பிறவி மெய்யென்று வினை பெருக்கிக்
கொந்துகுழற் கோல்வளையார் குவிமுலைமேல் வீழ்வேனை
பந்தமறுத் தெனையாண்டு பரிசறஎன் துரிசு மறுத்
தந்த மெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே. (6)

தையலார் மையலிலே தாழ்ந்து விழக் கடவேனைப்
பையவே கொடுபோந்து பாசமெனுந் தாழுருவி
உய்யுநெறி காட்டுவித்திட் டோங்காரத் துட்பொருளை
ஐயன் எனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே. (7)

சாதல் பிறப் பென்னுந் தடஞ்சுழியில் தடுமாறிக்
காதலின் மிக் கணியிழையார் கலவியிலே விழுவேனை
மாதொருகூ றுடைய பிரான் றன் கழலே சேரும்வண்ணம்
ஆதியெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே. (8)

செம்மை நலம் அறியாத சிதட ரொடுந் திரிவேனை
மும்மை மலம் அறுவித்து முதலாய முதல்வன் தான்
நம்மையும் ஓர் பொருளாக்கி நாய் சிவிகை ஏற்றுவித்த
அம்மையெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.
(9)

திருச்சிற்றம்பலம்

நன்றே செய்க இன்றே செய்க இன்னே செய்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகத்தில் தனிப்பாடல்கள்

திருச்சிற்றம்பலம்

மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்
துன்விரையார் கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி
வெதும்பி யுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி
சயசய போற்றி யென்னும்
கைதான் நெகிழ விடேன் உடை
யாய் என்னைக் கண்டுகொள்ளே. (1)

கடையவ னேனைக் கருணையினாற் கலந்
தாண்டு கொண்ட
விடையவ னேவிட் டிடுதிகண்டாய் விறல்
வேங்கையின் தோல்
உடையவ னேமன்னும் உத்தர கோச
மங்கைக் கரசே
சடையவனே தளர்ந்தேன் எம்பிரான் என்னைத்
தாங்கிக் கொள்ளே. (2)

கடவுளே போற்றி என்னைக்
கண்டு கொண்டருளு போற்றி
விடவுளே உருக்கி என்னை
ஆண்டிட வேண்டும் போற்றி
உடலிது களைந்திட் டொல்லை
உம்பர் தந் தருளுபோற்றி
சடையுளே கங்கை வைத்த
சங்கரா போற்றி போற்றி (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானே பொய் என்நெஞ்சும்
பொய் என் அன்பும் பொய்
ஆனால் வினையேன் அழுதால்
உன்னைப் பெறலாமே
தேனே அமுதே கரும்பின்
தெளிவே தித்திக்கும்
மானே அருளாய் அடியேன்
உனைவந் துறுமாறே. (4)

பாடவேண்டும் நான் போற்றி நின்னையே
பாடி நைந்து நைந்துருகி நெக்குநெக்
காட வேண்டும் நான் போற்றி அம்பலத்
தாடு நின்கழற் போது நாயினேன்
கூட வேண்டும் நான் போற்றி இப்புழுக்
கூடு நீக்கெனைப் போற்றி பொய்யெலாம்
வீட வேண்டும் நான் போற்றி வீடு தந்
தருளு போற்றிநின் மெய்யர் மெய்யனே. (5)

தனித்துணை நீ நிற்க யான்
தருக்கித்தலை யால் நடந்த
வினைத்துணை யேனை விடுதி கண்டாய்
வினை யேனுடைய
மனத்துணை யேஎன் றன் வாழ்முதலே
எனக் கெய்ப்பில் வைப்பே
தினைத்துணை யேனும் பொறேன்
துயராக்கையின் திண்வலையே (6)

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலுங் காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ (7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில் கொண்ட எம்பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்
யான் இதற் கிலன் ஓர் கைம்மாறே. (8)

செழுங் கமலத் திரளனநின்
சேவடி சேர்ந்தமைந்த
பழுத்த மனத் தடியர் உடன்
போயினர் யான் பாவியேன்
புழுக்கணுடைப் புன் குரம்பை
பொல்லாக் கல்வி ஞானமிலா
அழுக்குமனத் தடியேன் உடையாய்
உன் அடைக்கலமே. (9)

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
பற்று நான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்தரசே
திருப்பெருந்துறையுறை சிவனே
யாரொடு நோகேன் ஆர்க்கெடுத்
துரைக்கேன் ஆண்டநீ அருளிலையானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன்
கண்டாய் வருக என்றருள் புரியாயே. (10)

நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம
எனப் பெற்றேன்
தேனாய் இன் அமுதமுமாய்த்
தித்திக்குஞ் சிவபெருமான்
நானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற்
கருள் செய்தான்
ஊனாரும் உயிர் வாழ்க்கை
ஒறுத்தன்றே வெறுத்திடவே. (11)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்றாரை யான் வேண்டேன்
ஊர் வேண்டேன் பேர் வேண்டேன்
கற்றாரை யான் வேண்டேன்
கற்பனவும் இனியமையும்
குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தா
உன் குரை கழற்கே
கற்றாவின் மனம் போலக்
கசிந்துருக வேண்டுவனே. (12)

வேண்டத்தக்க தறிவோய் நீவேண்ட
முழுதுந் தருவாய் நீ
வேண்டும் அயன்மாற் அரியோய்நீ
வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா தருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரி சொன்றுண்டென்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே. (13)

அன்றே என்றன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை
ஆட்கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூ றெனக்குண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ இதற்கு நாயகமே. (14)

பிணியெலாம் வரினும் அஞ்சேன்
பிறப்பினோடிறப்பும் அஞ்சேன்
துணிநிலா அணியினான்றன் தொழும்பரோட
ழுந்தி அம்மால்
திணிநிலம் பிளந்துங் காணாச்
சேவடி பரவி வெண்ணீ
றணிகிலா தவரைக் கண்டால்
அம்ம நாம் அஞ்சுமாறே. (15)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கு திரண்டு முரன்றெழும் ஓசை
தழைப்பன ஆகாதே
சாதி விடாத குணங்கள்நம் மோடு
சலித்திடு மாகாதே
அங்கிது நன்றிது நன்றெனு மாயை
அடங்கிடு மாகாதே
ஆசைஎ லாம்அடி யாரடியோம் எனும்
அத்தனை ஆகாதே
செங்கயல் ஒருகண் மடந்தையர் சிந்தை
திளைப்பன ஆகாதே
சீரடி யார்கள் சிவானு பவங்கள்
தெரிந்திடு மாகாதே
எங்கும் நிறைந்தமு தூறுரபஞ் சுடர்
எய்துவ தாகாதே
ஈறறி யாமறை யோன்எனை ஆள
எழுந்தரு ளப்பெறிலே. (16)

திருச்சிற்றம்பலம்

---

அன்பு அருளைத் தரும்; அருள் தவத்தைத் தரும்; தவம் சிவத்தைத் தரும்; சிவமாம் பேறு பெறுதற்குச் சிறந்த வழி.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோவையார்

## எட்டாந் திருமுறை

திருச்சிற்றம்பலம்

திருவளர் தாமரை சீர்வளர் காவிகளீசர் தில்லைக்
குருவளர் பூங்குமிழ் கோங்கு பைங்காந்தள்
கொண்டோங்குதெய்வ
மருவளர் மாலையோர் வல்லியினொல்கியன நடைவாய்த்
துருவளர் காமன்றன் வென்றிக் கொடி
போன்றொளிர்கின்றதே. (1)

போதோ விசும்போ புனலோ பணிகளது பதியோ
யாதோ அறிகுவ தேது மரிதி யமன் விடுத்த
தூதோ அனங்கன் றுணையோ வினையிலி
தொல்லைத்தில்லை
மாதோ மடமயிலோ வென நின்றவர் வாழ்பதியே. (2)

சுரும்பிலர் சந்தும் நொடுகடல் முத்தும் வெண்சங்கு மெங்கும்
விரும்பினர் பாற்சென்று மெய்க்கணியாம் வியன்
கங்கையென்னும்
பெரும்புனல் சூடும் பிரான்சிவன் சிற்றம்பலமனைய
கரும்பன மென்மொழி யாருமந் நீரமையர் காணுநர்க்கே.
(3)

முனிவரும் மன்னரும் முன்னுவ மொன்னான் முடியுமெனப்
பனிவருங் கண்பரமன்றிருச் சிற்றம்பலமனையாய்
துனிவரு நீர்மையி தென்னென்று தூநீர் தெளித்தளிப்ப
நனிவரு நாளிது வோவென்று வந்திக்கும் நன்னுதலே.
(4)

திருச்சிற்றம்பலம்

எட்டாம் திருமுறை முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிசைப்பா

## ஒன்பதாந் திருமுறை

### திருமாளிகைத்தேவர்

கோயில் பண்: பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

ஒளிவளர் விளக்கே யுலப்பிலா வொன்றே
யுணர்வுசூழ் கடந்ததோ ருணர்வே
தெளிவளர் பளிங்கின் றிரண்மணிக் குன்றே
சித்தத்துட் டித்திக்குந் தேனே
அளிவள ருள்ளத் தானந்தக் கனியே
யம்பல மாடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே. (1)

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக்கண் ணுடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமேயோக
வெள்ளமே—மேருவில் வீரா
ஆறணி சடையெம் மற்புதக் கூத்தா
அம்பொன்செ யம்பலத் தரசே
ஏறணி கொடியெம் மீசனே யுன்னைத்
தொண்டனே னிசையுமா றிசையே. (2)

### சேந்தனார்

திருவீழிமிழலை பண்: பஞ்சமம்

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரவென் கண்குளிர்ந் தனவே. (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருவூர்த்தேவர்

திருமுகத்தலை பண்: பஞ்சமம்

புவனநா யகனே யகவுயிர்க் கமுதே
பூரணா வாரணம் பொழியும்
பவளவாய் மணியே பணிசெய்வார்க் கிரங்கும்
பசுபதீ பன்னகா பரணா
அவனிஞா யிறுபோன் றருள்புரிந் தடியே
னகத்திலு முகத்தலை மூதூர்த்
தவளமா மணிப்பூங் கோயிலு மமர்ந்தாய்
தனியனேன் தனிமைநீங் குதற்கே. (4)

## பூந்துருத்திநம்பிகாடநம்பி

கோயில் பண்: சாளரபாணி

எம்பந்த வல்வினைநோய் தீர்த்திட் டெமையாளுஞ்
சம்பந்தன் காழியர்கோன் தன்னையுமாட் கொண்டருளி
அம்புந்து கண்ணாளுந் தானுமணி தில்லைச்
செம்பொன்செ யம்பலமே சேர்ந்திருக்கை யாயிற்றே
(5)

## கருவூர்த்தேவர்

கங்கைகொண்டசோளேச்சரம் பண்: பஞ்சமம்

அன்னமாய் விசும்பு பறந்தயன் றேட
வங்ஙனே பெரியநீ சிறிய
என்னையாள் விரும்பி யென்மனம் புகுந்த
வெளிமையை யென்றுநான் மறக்கேன்
முன்னமா லறியா வொருவனா மிருவா
முக்கணா நாற்பெருந் தடந்தோட்
கன்னலே தேனே யமுதமே கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே. (6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாலியமுதனார்

கோயில் பண்: காந்தாரம்

அன்ன நடையா ரமுத மொழியா
ரவர்கள் பயிறில்லைத்
தென்னன் றமிழு மிசையுங் கலந்த
சிற்றம் பலந்தன்னுட்
பொன்னு மணியு நிரந்த தலத்துப்
புலித்தோல் பியற்கிட்டு
மின்னி னிடையா ளுமையாள் காண
விகிர்த நாடுமே. (7)

## கருவூர்த்தேவர்

திரைலோக்கியசுந்தரம் பண்: காந்தாரம்

நையாத மனத்தினனை நைவிப்பா னித்தெருவே
ஐயாநீ யுலாப்போந்த வன்றுமுத லின்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலுஞ்
செய்யாயோ அருள்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே. (8)

## சேதிராயர்

கோயில் பண்: பஞ்சமம்

ஏயு மாறெழிந் சேதிபர் கோன்றில்லை
நாய னாரை நயந்துரை செய்தன
தூய வாறுரைப் பார்துறக் கத்திடை
ஆய வின்ப மெய்தி யிருப்பரே. (9)

திருச்சிற்றம்பலம்

---

சிவஞான நிலையே சிவயோக நிறைவே.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பல்லாண்டு

சேந்தனார்

கோயில் பண்: பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள்
வஞ்சகர்போ யகலப்
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனியெல் லாம்விளங்க
அன்னநடை மடவா ளுமைகோ னடியோமுக்
கருள் புரிந்து
பின்னைப்பிற வியறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே. (1)

மிண்டு மனத்தவர் போமின்கண் மெய்யடியார்கள்
விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி யீசற்காட்
செய்மின் குழாம்புகுந்
தண்டங் கடந்த பொருளள வில்லதோ
ரானந்த வெள்ளப்பொருள்
பண்டு மின்றுமென்று முள்ளபொரு ளென்றே
பல்லாண்டு கூறுதுமே. (2)

நிட்டையி லாவுட னீத்தென்னை யாண்ட
நிகரிலா வண்ணங்களுஞ்
சிட்டன் சிவனடி யாரைச்சீ ராட்டுந்
திறங்களுமே சிந்தித்
தட்டமூர்த் திக்கென் கைநெக வூறு
மமிர்தினுக் காலநிழற்
பட்டனுக் கென்னைத்தன் பாற்படுத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லாண்ட சுருதிப் பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சில தேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரண்மேரு விடங்கன்
விடைப் பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. (4)

சீருந் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீ
ழாரும் பெறாத வறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவாருகில்
லூரு முலகுங் கழற வுழறி
யுமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பு மறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே. (5)

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கட லீந்தபிரான்
மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னு
ளாலிக்கு மந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. (6)

தாதையைத் தாளற வீசிய சண்டிக்கு
மண்டத் தொடுமுடனே
பூதலத் தோரும் வணங்கப் பொற்கோயிலும்
போனகமு மருளிச்
சோதி மணிமுடித் தாமமு நாமமுந்
தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்குப் பரிசுவைத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. (7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழலொலி யாழொலி கூத்தொலி யேத்தொலி
யெங்குங் குழாம்பெருகி
விழவொலி விண்ணளவுஞ் சென்று விம்மி
மிகுதிரு வாரூரின்
மழவிடை யார்க்கு வழிவழி யாளாய்
மணஞ்செய் குடிப்பிறந்த
பழவடி யாரொடுங் கூடியெம் மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. (8)

ஆரார் வந்தா ரமரர் குழாத்தி
லணியுடை யாதிரை நாள்
நாரா யணனொடு நான்முக னங்கி
யிரவியு மிந்திரனுந்
தேரார் வீதியிற் தேவர் குழாங்க
டிசையனைத்து நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியு மாடியும்
பல்லாண்டு கூறுதுமே. (9)

திருச்சிற்றம்பலம்

கடவுளே எமக்குச் சரணாகதியும் பலமுமாகும்
தொல்லைக்குள் உடன் தோன்றும் துணையுமாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமந்திரம்

## பத்தாந் திருமுறை

திருமூலநாயனார் அருளிச்செய்தவை

திருச்சிற்றம்பலம்

சிவனொடொக் குந்தெய்வந் தேடினும் இல்லை
அவனொடொப் பார்இங்கு யாவரும் இல்லை
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னும்
தவளச் சடைமுடித் தாமரை யானே. (1)

அவனை ஒழிய அமரரும் இல்லை
அவனன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை
அவனன்றி மூவரால் ஆவதொன் றில்லை.
அவனன்றி ஊர்புகு மாறறி யேனே. (2)

தீயினும் வெய்யன் புனலினுந் தண்ணியன்
ஆயினும் ஈசன் அருளறி வார்இல்லை
சேயினும் நல்லன் அணியன்நல் அன்பர்க்குத்
தாயினும் நல்லன் தாழ்சடை யோனே. (3)

நான்பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்
வான்பற்றி நின்ற மறைபொருள் சொல்லிடின்
ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்
தான்பற்றப் பற்றத் தலைப்படுந் தானே. (4)

மூலன் உரைசெய்ய மூவா யிரந்தமிழ்
ஞாலம் அறியவே நந்தி அருளது
காலை எழுந்து கருத்தறிந் தோதிடின்
ஞாலத் தலைவனை நண்ணுவ ரன்றே. (5)

பொல்லாப் புலாலை நுகரும் புலையரை
எல்லாருங் காண இயமன்தன் தூதுவர்
செல்லாகப் பற்றித் தீவாய நரகத்தில்
மல்லாகத் தள்ளி மறித்து வைப்பாரே. (6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன்மின்
பார்த்திருந் துண்மின் பழம்பொருள் போற்றன்மின்
வேட்கை யுடையீர் விரைந்தொல்லை உண்ணன்மின்
காக்கை கரைந்துண்ணுங் காலம் அறிமினே. (7)

யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம் பிறர்க் கின்னுரை தானே. (8)

அன்பும் சிவமும்இரண் டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்த பின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே. (9)

முன்னவ னார்கோயில் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றுங்
கன்னங் களவு மிகுத்திடுங் காசினில்
என்னரு நந்தி எடுத்துரைத் தானே. (10)

அரகர என்ன அரியதொன் றில்லை
அரகர என்ன அறிகிலர் மாந்தர்
அரகர என்ன அமரரும் ஆவர்
அரகர என்ன அறும்பிறப் பன்றே. (11)

புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு
அண்ணல் அதுகண் டருள்புரி யாநிற்கும்
எண்ணிலி பாவிகள் எம்மிறை ஈசனை
நண்ணறி யாமல் நழுவுகின் றாரே. (12)

சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே. (13)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூல னுரைசெய்த மூவா யிரந்தமிழ்
மூல னுரைசெய்த முந்நூறு மந்திரம்
மூல னுரைசெய்த முப்ப துபதேசம்
மூல னுரைசெய்த மூன்றும் ஒன்றுமே. (14)

திருமூல தேவனையே சிந்தைசெய் வார்க்கு
கருமூல மில்லையே காண் (15)

திருமந் திரமே சிவகதிக்கு வித்தாக
திருமந் திரமே சிவமா மருமந்த
புத்திக்கு ணேநினைந்து போற்றுமடி யார்தமக்குச்
சந்திக்குந் தற்பரமே தான். (16)

திருச்சிற்றம்பலம்

---

எமது தேவையை அவசியமில்லாது பெருக்கிக்
கொண்டு போவது பாவமாகும்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுகப்பாசுரம்

## பதினொராந்திருமுறை

### திருவாலவாயுடையார் அருளியது

திருச்சிற்றம்பலம்

மதிமலி புரிசை மாடக் கூடல்
பதிமிசை நிலவு பால்நிற வரிச்சிற
கன்னம் பயில்பொழில் ஆல வாயின்
மன்னிய சிவன் யான் மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்
கொருமையின் உருமையின் உதவி ஒளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா உகைக்குஞ் சேரலன் காண்க
பண்பா லியாழ்பயில் பாண பத்திரன்
தன்போல் என்பால் அன்பன் தன்பால்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே.

திருச்சிற்றம்பலம்

### காரைக்கால்அம்மையார் அருளியது

முள்ளி தீந்துமுளரி கருகி மூளை சொரிந்துக்குக்
கள்ளி வற்றி வெள்ளில் பிறங்கு கடுவெங் காட்டுள்ளே
புள்ளி யுழைமான் தோலொன் றுடுத்துப் புலித்தோல் பியற்கிட்டுப்
பள்ளி யிடமும் அதுவே யாகப் பரம னாடுமே. (1)

என்னை யுடையானும் ஏகமாய் நின்றானுந்
தன்னை யறியாத தன்மையனும்—பொன்னைச்
சுருளாகச் செய்தனைய தூச்சடையான் வானோர்க்
கருளாக வைத்த அவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயடிகள் காடவர்கோன் அருளியது

குந்தி நடந்து குனிந்தொருகை கோலூன்றி
நொந்திருமி ஏங்கி நுரைத்தேறி—வந்துந்தி
ஐயாறு வாயாறு பாயாமுன் நெஞ்சமே
ஐயாறு வாயால் அழை. (1)

தொட்டுத் தடவித் துடிப்பொன்றுங் காணாது
பெட்டப் பிணமென்று பேரிட்டுக்—கட்டி
எடுங்களத்தா என்னாமுன் ஏழைமட நெஞ்சே
நெடுங்களத்தான் பாதம் நினை. (2)

நக்கிரதேவர் அருளியவை

வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல்—வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்பும் குன்றும்
துளைத்தவேல் உண்டே துணை. (1)

அஞ்சுமுகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சலென வேல்தோன்றும்—நெஞ்சில்
ஒருகால் நினைக்கில் இருகாலும் தோன்றும்
முருகாஎன் றோதுவார் முன். (2)

நக்கீரர் தாமுரைத்த நன்முருகாற் றுப்படையைத்
தற்கோல நாடோறும் சாற்றினால்—முற்கோல
மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளி
தான் நினைத்த எல்லாம் தரும். (3)

மற்றும் பலபிதற்ற வேண்டாம் மடநெஞ்சே
கற்றைச் சடையண்ணல் காளத்தி—நெற்றிக்கண்
ஆராஅமுதின் திருநாமம் அஞ்செழுத்துஞ்
சோராமல் எப்பொழுதுஞ் சொல். (4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரணதேவர் அருளியது

தீயான மேனியனே செம்பவளக் குன்றமே
தீயான சேராமற் செய்வானே—தீயான
செம்பொற் புரிசைத் திருவாரூ ராய் என்னைச்
செம்பொற் சிவலோகஞ் சேர்.

பட்டணத்துப்பிள்ளையார் அருளியது

பாதம் பரவியோர் பித்துப் பிதற்றிலும் பல்பணியும்
ஏதம் புகுதா வகையருள் ஏகம்பர் ஏத்தெனவே
போதம் பொருளாற் பொலியாத புன்சொற் பனுவல்களும்
வேதம் பொலியும் பொருளா மெனக்கொள்வர்
மெய்த்தொண்டரே.

நம்பியாண்டார்நம்பி அருளியது

புல்லறி வின்மற்றைத் தேவரும் பூம்புலி யூருள்நின்ற
வல்லெறி மாமதிக் கண்ணிய னைப்போல் அருளுவரே
கல்லெறிந் தானுந்தன் வாய்நீர் கதிர்முடி மேலுகுத்த
நல்லறி வாளனும் மீளாவழி சென்று நண்ணினரே.

சேரமான்பெருமாள் அருளியது

வேண்டிய நாட்களிற் பாதியுங் கங்குல் மிகஅவற்றுள்
ஈண்டிய வெந்நோய் முதலது பிள்ளைமை மேலதுமூப்
பாண்டின அச்சம் வெகுளி அவாஅழுக் காறிங்ஙனே
மாண்டன சேர்ந்தும் வளர்புன் சடைமுக்கண்
மாயனையே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியபுராணம்

## பன்னிரண்டாந் திருமுறை

## சேக்கிழார்சுவாமிகள் அருளிச்செய்தது

திருச்சிற்றம்பலம்

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம். (1)

ஐந்துபே ரறிவும் கண்களே கொள்ள அளப்பரும்
கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணமொரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே யாக
இந்துவாழ் சடையான் ஆடுமானந்த வெல்லையில்
தனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துட் டிளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார். (2)

தெண்ணிலா மலர்ந்த வேணியா யுன்றன்
திருநடங் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே யெனக்கு
வாலிதா மின்பமா மென்று
கண்ணிலா னந்த வருவிநீர் சொரியக்
கைம்மல ருச்சிமேற் குவித்துப்
பண்ணினா னீடி யறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார். (3)

முன்னேவந் தெதிர்தோன்றும்
முருகனோ பெருகொளியாற்
றன்நேரின் மாரனோ
தார்மார்பின் விஞ்சையனோ
மின்னேர்செஞ் சடையண்ணல்
மெய்யருள்பெற் றுடையவனோ
என்னேயென் மனந்திரிந்த
இவன்யாரோவென நினைந்தார். (4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேறினி இதன்மேல் உண்டோ
பிரான்திருக் கண்ணில் வந்த
ஊறுகண் டஞ்சித் தங்கண்
இடந்தப்ப உதவுங் கையை
ஏறுயர்த் தவர்தங் கையாற்
பிடித்துக்கொண் "நெடன் வலத்தில்
மாறிலாய்! நிற்க" என்று
மன்னுபே ரருள்பு ரிந்தார். (5)

"அண்ண லேஎனை ஆண்டுகொண் டருளிய அமுதே
விண்ணி லேமறைத் தருள்புரி வேதநா யகனே
கண்ணி னால்திருக் கயிலையில் இருந்தநின் கோலம்
நண்ணி நான்தொழ நயந்தருள்புரி" எனப் பணிந்தார்.
(6)

வெள்ளி வெற்பின்மேல் மரகதக் கொடியுடன் விளங்கும்
தெள்ளு பேரொளிப் பவளவெற் பெனஇடப் பாகம்
கொள்ளு மாமலை யாளுடன் கூடவீற் றிருந்த
வள்ள லாரைமுன் கண்டனர் வாக்கின்மன் னவனார்.
(7)

மார்பாரப் பொழிகண்ணீர் மழைவாருந்
திருவடிவும் மதுர வாக்கில்
சேர்வாகுந் திருவாயில் தீந்தமிழின்
மாலைகளுஞ் செம்பொற் றாளே
சார்வான திருமனமும் உழவாரத்
தனிப்படையும் தாமும் ஆகிப்
பார்வாழத் திருவீதிப்பணிசெய்து
பணிந்தேத்திப் பரவிச் செல்வார். (8)

புல்லோடும் கல்லோடும் பொன்னோடும் மணியோடும்
சொல்லோடும் வேறுபா டிலாநிலைமை துணிந்திருந்த
நல்லோர்முன் திருப்புகலூர் நாயகனார் திருவருளால்
வில்லோடு நுதல்மடவார் விசும்பூடு வந்திழிந்தார். (9)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்முதலாம் உலகேத்த மன்னுதிருத் தாண்டகத்தைப்
"புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்" எனப்புகன்று
நண்ணரிய சிவாநந்த ஞானவடி வேயாகி
அண்ணலார் சேவடிக்கீழ் ஆண்டஅரசமர்ந்திருந்தார். (10)

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம். (11)

சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினிலோங் கியஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் அந்நிலையில். (12)

சென்றகா லத்தின் பழுதிலாத் திறமும் இனி எதிர்
காலத்தின் சிறப்பும்
இன்றெழுந் தருளப் பெற்றபே றதனால் எற்றைக்குந்
திருவரு ளுடையேம்
நன்றியில் நெறியில் அழுந்திய நாடும் நற்றமிழ்
வேந்தனும் உய்ந்து
வென்றிகொள் திருநீற் றொளியினில் விளங்கும்
மேன்மையும் படைத்தனம் என்பார். (13)

ஞானத்தின் திருவுருவை
நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன்றி
மண்ணில்வளர் மதிக்கொழுந்தைத்
தேனக்க மலர்க்கொன்றைச்
செஞ்சடையார் சீர்தொடுக்குங்
கானத்தின் எழுபிறப்பைக்
கண்களிப்பக் கண்டார்கள். (14)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இட்ட ஏட்டினில் எழுதிய செந்தமிழ்ப் பதிகம்
மட்டு லாங்குழல் வனமுலை மலைமகள் பாகத்
தட்ட மூர்த்தியைப் பொருளென உடைமையால் அமர்ந்து
பட்ட தீயிடைப் பச்சையால் விளங்கிய தன்றே. (15)

"மண்ணி னிற்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்
அண்ண லார்அடி யார்தமை அமுதுசெய் வித்தல்
கண்ணி னால்அவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்
உண்மை யாமெனில் உலகர்முன் வருகென உரைப்பார்.
(16)

காதலியைக் கைப்பற்றிக் கொண்டுவலங் கொண்டருளித்
தீதகற்ற வந்தருளுந் திருஞானசம்பந்தர்
நாதனெழில் வளர்சோதி நண்ணியதன் உட்புகுவார்
போதநிலை முடிந்தவழிப் புக்கொன்றி உடனானார். (17)

"செய்வினையுஞ் செய்வானும் அதன்பயனுங்
கொடுப்பானும்
மெய்வகையால் நான்காகும் விதித்தபொருள்" எனக்
கொண்டே
இவ்வியல்பு சைவநெறி அல்லவற்றுக் இல்லை' என
உய்வகையாற் பொருள் சிவன் என் றருளாலே
உணர்ந்தறிந்தார். (18)

சென்று கண்ணுதல் திருமுன்பு தாழ்ந்து வீழ்ந்
தெழுந்துசே ணிடைவிட்ட
கன்று கோவினைக் கண்டணைந் தது எனக் காதலின்
விரைந்தெய்தி
நின்று போற்றிய தனிப்பெருந் தொண்டரை நேரிழை
வலப்பாகத்
தோன்று மேனியர் 'ஊரனே; வந்தனை' என்றனர்
உலகுய்ய. (19)

என்று மின்பம் பெருகு மியல்பினால்
ஒன்று காதலித் துள்ளமு மோங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம். (20)

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புராணங்கள்

## விநாயகர்

திருச்சிற்றம்பலம்

திருவாக்கும், செய்கருமம் கைகூட்டும், செஞ்சொற்
பெருவாக்கும், பீடும் பெருக்கும் — உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானை
காதலால் கூப்புவர் தம்கை. (1)

திருவும் கல்வியுஞ் சீருந் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகு மானத்துப் பிள்ளையைப் பேணுவாம். (2)

மேதகு மாசிப்பச்சை நறுங்கை யாந்தகரை
வில்வமுடன் ஊமத்தை நொச்சி நாயுருவி
பேதமில் கத்தரி வன்னி அலரி காட்டாத்தி
யெருக்கு மருதுடன் மால்பேரி யம்பு காந்தி
மாதுளையே உயர் தேவதாரும் அருநெல்லி
மன்னுசிறு சண்பகமே கெந்தளி பாதிரியே
ஓதரிய வறுகு இவையோர் இருபத் தொன்று
முயர் விநாயக சதுர்த்திக் குரைத்ததிரு பத்திரமே.(3)

## திருவிளையாடற் புராணம்

வென்றுளே புலன் களைந்தார் மெய்யுணருள்ளந்தோறுஞ்
சென்றுளே யமுத முற்றுந் திருவருள் போற்றி யேற்றுக்
குன்றுளே யிருந்து காட்சி கொடுத்தருள் கோலம் போற்றி
மன்றுளே மாறியாடு மறைச் சிலம்படிகள் போற்றி. (4)

'கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலி
னறியவு முளவோ நீயறியும் பூவே. (5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியாய் சரணஞ் சிறியாய் சரணஞ்
கரியாகி யவங் கணனே சரணம்
அரியா யெளியா யடி மாறி நடம்
புரிவாய் சரணம் புனிதா சரணம். (6)

## கந்தபுராணம்

அருவு மாகுவன் உருவமு மாகுவன் அருவு
முருவு மில்லதோர் தன்மையு மாகுவன் ஊழின்
கரும மாகுவன் நிமிர்த்தமு மாகுவன் கண்டாய்
பரம னாடலை யாவரே பகர்ந்திடற் பாலார். (7)

கெடுத லில்லதோர் வளனோடு நீயுநின் கிளையும்
படுத லின்றியே வாழ்தியென் றின்னன பகர்ந்தேன்
இடுதல் கொண்டிடு சிறையிடைத் தேவரை யின்னே
விடுதல் செய்குதி என்றனன் அறிஞரின் மிக்கான். (8)

முழுமதி யன்ன வாறு முகங்களும்
விழிகளி னருளும் வேலும் வேறுள படையின் சீரும்
அழகிய கரமீ ராறும் அணிமணித் தண்டை யார்க்கும்
செழுமல ரடியுங் கண்டான் அவன்தவம் செப்பற் பாற்றோ
(9)

தீயவை புரிந்தா ரேனும் குமரவேள் திருமுன் உற்றால்
தூயவ ராகி மேலைத் தொல்கதி அடைவ ரென்கை
ஆயவும் வேண்டுங் கொல்லோ அடுசமர் இந்நாட் செய்த
மாயையின் மகனு மன்றோ வரம்பிலா அருள்பெற்
றுய்ந்தான். (10)

ஆறிரு தடந்தோள் வாழ்க ஆறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்கசீ ரடியா ரெல்லாம். (11)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருச்செந்தூர்ப் புராணம்

வண்டடை கிடந்தின் னிசைமுரன் றெழுதேன்
வாய்மடுத் துண்டுகா லுழக்க
விண்குடைந் தலருங் கடம்பணி தடந்தோள்
வெற்பெலாம் பொற்புலாஞ் சுடர்வேற்
கெண்டயந் தடங்கட் குறக்கொடி களபக்
கிளரொளி முலைவனப் பெழுதக்
கண்டு கண் டுள்ளங் களிப்பறாச் செந்தூர்க்
கந்தனை வந்தனை புரிவாம். (12)

வேதனுக் குலகம் யாவும் வித்திடு செயலு ஞான
போதனச் செயலு முள்ளம் பொற்புறு வுபதே சித்துக்
காதலிற் சிறந்த வேற்கைக் காங்கேயன் கருணை காட்டித்
தீதலும் போக மோக்கத் தியாகியென் றிருந்தான்
மன்னோ. (13)

பன்னிரு கரத்தாய் போற்றி பசும்பொன்மா மயிலாய்
போற்றி
முன்னிய கருணையாறு முகப்பரம் பொருளே போற்றி
கன்னிய ரிருவர் நீங்காக் கருணைவா ரிதியே போற்றி
யென்னிரு கண்ணே கண்ணு னிருக்குமா மணியே
போற்றி (14)

## அருணாசல புராணம்

மண்ணிற் பிறந்திறந்து மாயுந்தெய் வங்களோ
எண்ணப் படாவருணை யீசனே — விண்ணப்ப
மொன்றுண் டடியே னுனைப்பிரியா தேயிருக்க
வென்று தருவா யெனக்கு. (15)

திங்கள்செஞ் சடையுமோர்பாற் றிருமுடி துலங்கக்கையிற்
கங்கண மிலங்கக்காலிற் கவின்சிலம் பலம்ப வன்பர்
சங்கரா வெனநின்றேத்தத் தாயெனக் கிருபை நல்கி
அங்கமொன் றானசோதி யணியணா மலையுளானே
(16)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவரே யெனினு மாயு ளிறுவதன் முன்ன ரோர் கான்
மேவியஞ் சுகாமச் செவேண் முருகனைத் தரிசித்தாலும்
பாவிக்கு னெஞ்சி லன்றிப் பழுதறு கனவிற் காணி
லாவிதா னகலி னெஞ்சி லழுந்தினும் பெறுவர் முத்தி.(17)

இழிகுண முடைய ரேனு மத்தலத் தடைவா ரென்னிற்
பழிமலி குணங்க ணீங்கிப் பரமனுக் கடிமை யாகி
யழிவில ரெங்கே சென்று மரிப்பிலும் யாங்குச் சென்று
தழுவிலாழ் வுறினுஞ் செவ்வே றாலகினிற் றிகழ்ந்து
வாழ்வர். (18)

## திருவாதவூரடிகள் புராணம்

ஆதியை மன்று ளாடு மையனை யன்பி னாலே
யோதிய தமிழின் பாட லுள்ளவை யோத வெண்ணி
மாதுய ரகல வின்னே வந்தன மெழுத வேண்டும்
வேதியர் பெருமா னின்று விளம்பிடும் விளங்க என்றார்.
(19)

நின்ற புகழ்ப் புலியூரர் நேயமுடன் படை சூழச்
சென்றருளுக் கிடமான செம்பொனினம் பலமெய்தி
யொன்றியவித் தமிழ்மாலைப் பொருளிவரென் றுரைசெய்து
மன்றுதனிற் கடிதேகி மறைந்தன ரங் கவர்காண. (20)

## நகுலகிரிப் புராணம்

திருச்சிற்றம்பலம்

வையமீ தினிலுயிர் களுக்கிகபரம் வழங்கத்
தையலா ணகுலாம்பிகை தணத்திடா தமரச்
செய்ய மேனிகொண்ட மர்ந்தருளுதவு தெய்வீகத்
துய்ய தோர் நகுலேசன திருபதந் துதிப்பாம். (1)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்ந்த நதியின்மரபா கப்போய் முழுகி
ஆர்ந்து லவுமன்பா லழுகுற்றதென் புலத்தில்
நேர்ந்த பிதிர்களுக்கு நேடுஞ் சிராத்தமதைக்
கூர்ந்த திலமருவக் கூர்ச்சமதிற் பிண்டமிடா. (2)

கொற்ற வேன்முசுகு ந்தனுங் கோதிலா
நற்ற வங்கொள் நகுலமுனி வனும்
உற்ற கங்கையின் மூழ்கி யுவகையால்
அற்ற மின்றிய வானன மெய்தினார். (3)

இகலினால் முன்னிராவ ணனாதியாம்
நிகரிலாத நிருதரைத் தென்றிசை
திகழ வைத்ததிறல் கொளிராகவன்
நகுல வெற்பினல முடனண்ணினான். (4

தருமன் கனிட்டன் நதிமூழ்கித்தக்கோர்
புகழப் புனிதமுடன்
உருவெண்ணீறு புனைந் தினிமையுறு
மைந்தெழுத்து முறைதழுவிக்
கருமம் முடித்து மதிநுதலாள்
கௌரிமருங்கினுற வமர்ந்த
திருகுஞ் சடையான குலேசன்
முன்னர்ப்புகுந்து தீமைகெட. (5)

உள்ளங்குளிர வென்புருக வுரோமஞ்
சிலிர்க்கவுரை தவறக்
கள்ளந்தழு வைம்புலன கலக்
கரணமொடுங்க விழிசொருகத்
தெள்ளுகரங்கள் சிரமீது சேர்ந்து
குவியத் தெண்டனிடா
வள்ளலெனு மின்னகுலேசன் முன்பாய்
நின்று வழுத்துறுவான். (6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தியின் மருப்பெனத் தனங் கொணாரியும்
முந்து நன்னதிதனின் மூழ்கி நாடொறும்
அந்தி வேணியனடி போற்ற வன்னைபாற்
சிந்தையின் எழின்முகஞ் சிறப்பினுற்றதே. (7)

தன்னுறு குதிரைமாமுகந் தணந்ததால்
மன்மலர்க் குழலியுண் மகிழ்ச்சியுற்றினி
துன்னுதந்தைக் கிவணுற்ற பான்மையைப்
பன்னருந் தூதராற் பகர்வித்தாளரோ. (8)

அயில் கொளுமாறுமாமுகனை யன்பினால்
மயின்மிசை மனைவியர் மருங்குவைகுற
வியனுறுந் திருவுரு வியற்று வித்தனன்
குயினிகருரையினாள் குணமுடன்கொள. (9)

செப்பருங் கும்பதாபனங்கள் செய்திடா
தொப்பிலா மறைமுறை யொளிருநல்லருள்
வைப்பினாவாகனப திட்டை தன்னைமுன்
தப்பிலாக் குமரவேட னக்குச் செய்தனள். (10)

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புகழ்

## அருணகிரிநாதர் அருளியது

திருச்சிற்றம்பலம்

உம்பர்தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் றேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமானே. (1)

அபகார நிந்தைபட் டுழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாலே
உனைநானி னைந்தருட் பெறுவேனோ
இபமாமு கன்தனக் கிளையோனே
இமவான் மடந்தையுத் தமிபாலா
ஜெபமாலை தந்தசற் குருநாதா
திருவாவி னன்குடிப் பெருமாளே. 2)

காவியுடுத்துந் தாழ்சடை வைத்துங்
காடுகள் புக்குந் தடுமாறிக்
காய்கனிதுய்த்துங் காயமொ றுத்துங்
காசினி முற்றுந் திரியாதே
சீவ னொடுக்கம் பூத வொடுக்கம்
தேற வுதிக்கும் பரஞான
தீப விளக்கங் காண எனக்குன்
சீதள பத்மந் தருவாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவ நிறத்தின் தாருக வர்க்கம்
பாழ்பட வுக்ரந் தருவீரா
பாணிகள் கொட்டும் பேய்கள் பிதற்றும்
பாடலை மெச்சுங் கதிர்வேலா
தூவிகள் நிற்குஞ் சாலி வளைக்குஞ்
சோலை சிறக்கும் புலியூரா
சூரர் மிகக்கொண் டாட நடிக்குந்
தோகை நடத்தும் பெருமாளே.
(3)

இசைந்த ஏறுங் கரியுரிபோர்வையும் எழில்நீறும்
இலங்கு நூலும் புலியத ளாடையு மழுமானும்
அசைந்த தோடுஞ் சிரமணி மாலையு முடிமீதே
அணிந்த ஈசன் பரிவுடன் மேவிய குருநாதா
உசந்த சூரன் கிளையுடன் வேரற முனிவோனே
உகந்த பாசங் கயிறொடு தூதுவர் நலியாதே
அசந்த போதென் துயர்கெட மாமயில் வரவேணும்
அமைந்த வேலும் புயமிசைமேவிய பெருமாளே.
(4)

வேழ முண்ட விளாகனி யதுபோல
மேனி கொண்டு வியாபக மயலூறி
நாளு மிண்டர்கள் போல்மிக அயர்வாகி
நானு நைந்து விடாதருள் புரிவாயே
மாள அன்றம ணீசர்கள் கழுவேற
வாதில் வென்றசிகாமணி மயில்வீரா
கால கண்ட னுமாபதி தருபாலா
காசி கங்கையில் மேவிய பெருமாளே.
(5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமக ளுலாவு மிருபுய முராரி
திருமருக நாமப் பெருமாள் காண்
ஜெகதலமும் வானு மிகுதி பெறுபாடல்
தெரிதரு குமாரப் பெருமாள் காண்
மருவுமடி யார்கள் மனதில்விளையாடு
மரகதம யூரப் பெருமாள் காண்
மணிதரளம் வீசி யணியருவி சூழ
மருவுகதிர் காமப் பெருமாள் காண்
அருவரைகள் நீறு படஅசுரர் மாள
அமர் பொருத வீரப் பெருமாள் காண்
அரவுபிறை வாரி விரவுசடை வேணி
அமலர் குரு நாதப் பெருமாள் காண்
இருவினையி லாத தருவினைவிடாத
இமையவர்க்கு லேசப் பெருமாள் காண்
இலகுசிலை வேடர் கொடியினதி பார
இருதனவிநோதப் பெருமாளே.
(6)

இறவாமற் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தரநுபூதி

## அருணகிரிநாதர் அருளியது

திருச்சிற்றம்பலம்

உல்லா சநிரா குலயோ கவிதச்
சல்லா பவிநோ தனுநீ யலையோ
எல்லா மறவென் னையிழந் தநலஞ்
சொல்லாய் முருகா சுரபூ பதியே. (1)

கெடுவாய் மனனே கதிர்கேள் கரவா து
இடுவாய் வடிவேல் இறைதாள் நினைவாய்
சுடுவாய் நெடுவே தனைதூள் படவே
விடுவாய் விடுவாய் வினையா வையுமே. (2)

கார்மா மிசைக்கா லன்வரிற் கலபத்
தேர்மா மிசைவந் தெதிரப் படுவாய்
தார்மார் பவலா ரிதலா ரியெனுஞ்
சூர்மார் மடியத் தொடுவே லவனே. (3)

கைவாய் கதிர்வேல் முருகன் கழல் பெற்று
உய்வாய் மனனே ஒளிவாய் ஒளிவாய்
மெய்வாய் விழிநா சியொடும் செவிஆம்
ஐவாய் வழிசெல் லும்அவா வினையே. (4)

தூசாம் அணியும் துகிலும் புனைவாள்
நேசா முருகா நினதுஅன் பருளால்
ஆசா நிகளந் துகளா யினபின்
பேசா அனுபூ திபிறந் ததுவே. (5)

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே. (6)

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தரலங்காரம்

## அருணகிரிநாதர் அருளியது

திருச்சிற்றம்பலம்

பேற்றைத் தவஞ்சற்று மில்லாத வென்னைப்ர
பஞ்சமென்னுஞ்
சேற்றைக் கழிய வழிவிட்ட வாசெஞ் சடாடவிமேல்
ஆற்றைப் பணியை யிதழியைத் தும்பையை யம்புலியின்
கீற்றைப் புனைந்த பெருமான் குமாரன்க்கு பாகரனே. (1)

வையிற் கதிர்வடி வேலோனை வாழ்த்தி வறிஞர்க்கென்றும்
நொய்யிற் பிளவள வேனும் பகிர்மின்க நுங்கட் இங்ஙன்
வெய்யிற் கொதுங்க வுதவா வுடம்பின் வெறுநிழல் போற்
கையிற் பொருளு முதவாது காணுங் கடைவழிக்கே. (2)

நாளென் செய்யும் வினை தானென் செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங் கொடுங் கூற்றென் செயுங்குமரேசரிரு
தாளுஞ் சிலம்பும் சதங்கையுந் தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங் கடம்பு மெனக்குமுன் னேவந்து தோன்றிடினே.
(3)

சேல்பட் டழிந்தது செந்தூர் வயற்பொழி றேங்கடம்பின்
மால்பட் டழிந்தது பூங்கொடி யார்மன மாமயிலோன்
வேல்பட் டழிந்தது வேலையுஞ் சூரனும் வெற்புமவன்
கால்பட் டழிந்ததிங் கென்தலை மேலயன்
கையெழுத்தே. (4)

ஆலுக் கணிகலம் வெண்டலை மாலை யகிலமுண்ட
மாலுக் கணிகலந் தண்ணந் துழாய்மயி லேறுமையன்
காலுக் கணிகலம் வானோர் முடியுங் கடம்புங்கையில்
வேலுக் கணிகலம் வேலையுஞ் சூரனு மேருவுமே. (5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலோன் மருகனை மன்றாடி மைந்தனை வானவர்க்கு
மேலான தேவனை மெய்ஞ்ஞான தெய்வத்தை மேதினியிற்
சேலார் வயற்பொழிற் செங்கோடனைச் சென்று கண்டுதொழ
நாலாயிரங் கண் படைத்தில னேயந்த நான்முகனே. (6)

சலங்காணும் வேந்தர் தமக்குமஞ் சார்யமன் சண்டைக்கஞ்சார்
துலங்கா நரகக் குழியணு கார்துட்ட நோயணுகார்
கலங்கார் புலிக்குங் கரடிக்கும் யானைக்குங் கந்தனன்னூல்
அலங்கார நூற்று ளொருகவி தான்கற் றறிந்தவரே. (7)

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் அருளிச்செய்த

# சகலகலாவல்லிமாலை

## கட்டளைக் கலித்துறை

திருச்சிற்றம்பலம்

வெண்டா மரைக்கன்றி நின்பதம்
தாங்களென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ
லோசகம் ஏழுமளித் (து)
உண்டான் உறங்க ஒழித்தான் பித்
தாகஉண் டாக்கும்வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே! 1

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே!
கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே!
சகல கலாவல்லியே! 2

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்அமு (து)
ஆர்ந்துன் அருட்கடலில்
குளிக்கும் படிக்(கு)என்று கூடும்
கொலோ?உளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே!
சகல கலாவல்லியே! 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கும் பனுவல் துறைதோய்ந்த
கல்வியும், சொற்சுவை தோய்
வாக்கும், பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்.
தேக்குஞ் செந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர்செந் நாவில்நின்று
காக்குங் கருணைக் கடலே!
சகல கலாவல்லியே! 4

பஞ்சுஅப்பு இதம்தரு செய்யபொற்
பாதபங் கேருகம் என்
நெஞ்சத் தடத்(து)அல ராததுஎன்
னே? நெடுந் தாட்கமலத்(து)
அஞ்சத் துவசம் உயர்த்தோன்செந்
நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத் தவி(சு) ஒத்(து) இருந்தாய்!
சகல கலாவல்லியே! 5

பண்ணும் பரதமுங் கல்வியும்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழு(து)எளி(து) எய்தநல்
காய்எழு தாமரையும்
விண்ணும் புவியும் புனலும்
கனலும்வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்!
சகல கலாவல்லியே! 6

பாட்டும் பொருளும், பொருளால்
பொருந்தும் பயனும், என்பால்
கூட்டும்படி, நின் கடைக்கண் நல்
காய்உளங் கொண்டு தொண்டர்
தீட்டும் கலைத்தமிழ்த் தீம்பால்
அமுதந் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ஓதிமப் பேடே!
சகல கலாவல்லியே! 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்விற் பனமும் அவதான
முங்கல்வி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந்(து) அடிமைகொள்
வாய்நளி னாசனம்சேர்
செல்விக்(கு) அரி(து)என்(று) ஒருகால
முஞ்சிதை யாமைநல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே!
சகல கலாவல்லியே! 8

சொற்கும் பொருட்கும் உயிராம்மெய்ஞ்
ஞானத்தின் தோற்றம்என்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்? நிலம் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ(டு)
அரசன்னம் நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே!
சகல கலாவல்லியே! 9

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னரும்என்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வம் உளதோ
சகல கலாவல்லியே! 10

திருச்சிற்றம்பலம்

முற்றிற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# விநாயகர் கவசம்

திருச்சிற்றம்பலம்

வளர்சிகையைப் பராபரமாய் வயங்கு
விநாயகர் காக்க வாய்ந்த சென்னி
யளவுபடா வதிகசவுந் தரதேக
மதோற்கடர்தா மமர்ந்து காக்க
விளரற நெற்றியை யென்றும் விளங்கிய
காசிபர் காக்க புருவந் தம்மைத்
தளர்வின் மகோதரர் காக்க தடவிழிகள்
பாலசந் திரனார் காக்க. (1)

கவின்வளரு மதரங் கசமுகர் காக்க
தாலங்கணக் கிரீடர் காக்க
நவில்சிபுகங் கிரிசைசு தர்காக்க நனிவாக்கை
விநாயகர்தாங் காக்க
அவிர்நகை துன்முகர் காக்க அள்ளெழிற்
செஞ்செவி பாசபாணி காக்க
தவிர்தலுறா திளங்கொடிபோல் வளர்மணி நாசியைச்
சிந்திதார்த்தர் காக்க. (2)

காமருபூ முகந்தன்னைக் குணேசர் நனிகாக்க
களங்கணேசர் காக்க
வாமமுறு மிருதோளும் வயங்குகந்த பூர்வசர்தா
மகிழ்ந்து காக்க
ஏமமுறு மணிமுலை விக்கின விநாசன் காக்க
இதயந் தன்னைத்
தோமகலுங் கணநாதர் காக்க வகட்டினைத்
துலங்கே ரம்பர் காக்க. (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்க மிரண்டையும் தராதரர் காக்கப்
பிருட்டத்தைப் பாவ நீக்கும்
விக்கின கரன்காக்க விளங்கி லிங்கம்
வியாளபூ டணர்தாங் காக்க
தக்ககுய்யந் தன்னைவக் கிரதுண்டர்
காக்கசக னத்தை யல்லல்
உக்க கணப்பன் காக்க ஊருவை மங்கள
மூர்த்தி யுவந்து காக்க. (4)

தாழ் முழந்தாள் மகாபுத்தி காக்க விருபதமேக
தந்தர் காக்க
வாழ்கரங்கிப் பிரப்பிர சாதனர் காக்க முன்கையை
வணங்குவார் நோய்
ஆழ்தரச் செய்யா சாபுரகர் காக்க விரல்பதும
வத்தர் காக்க
கேழ்கிளரு நகங்கள் விநாயகர் காக்க
கிழக்கினிற் புத்தீசர் காக்க. (5)

அக்கினியிற் சித்தீசர் காக்க வுமா புத்திரர்தென்
னாசை காக்க
மிக்கநிருதியிற் கணேசுரர் காக்க விக்கினவர்த்தி
தனர்மேற் கென்னுந்
திக்கதனிற் காக்க வாயுவிற் கசகன்னன் காக்க
திகழ் உதீசி
தக்கநிதிபன் காக்க வட கிழக்கி லீசாந்
தனரே காக்க (6)

ஏகதந்தர் பகன்முழுதுங் காக்க விரவினுஞ் சந்தி
யிரண்டன் மாட்டும்
ஓகையின் விக்கின கிருது காக்க விராக்கதர்பூத
முறுவே தாள
மோகினி பேயிவையாதி யுயிர்த்திறத்தால்
வருந்துயரு முடிவிலாத
வேகமுறு பிணிபலவும் விலக்குபு பாசாங் குசர்தாம்
விரைந்து காக்க. (7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிஞானந் தவந்தான மானமொளி புகழ்குலம் வண்
சரீரம் முற்றும்
பதிவான தனந்தானியங் கிரக மனைவி மைந்தர்
பயினட் பாநிக்
கதியாவுங் கலந்து சர்வாயுதர் காக்க காமர்பவத்
திரர்முன் னான
விதியாருஞ் சுற்றமெலா மயூரேச ரெஞ்ஞான்றும்
விரும்பிக் காக்க. (8)

வென்றிசேவி தங்கபிலர் காக்க கரியாதி யெலாம்
விகடர் காக்க
என்றிவ்வா றிது தன்னைமுக் காலமு மோதிடினும்பா
லிடையூ றென்றும்
ஒன்றுறா முனிவரர்கா ளறிமின்கள் யாதொருவ
ரோதி னாலும்
மன்றவாங் கவர் தேகம் பிணியறவச் சிரதேக
மாகி மன்னும். (9)

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# சிவ கவசம்

## விடய முனி அருளியது

திருச்சிற்றம்பலம்

பங்கயத் தவிசின் மேவி யிருந்துடற் பற்று நீக்கி
யங்குநற் பூதசுத்தி யடைவுடன் செய்த பின்னர்க்
கங்கையத் தரித்த சென்னிக் கற்பக தருவைச் செம்பொற்
கொங்கைவெற் பனைய பச்சைக் கொடியொடு முளத்தில் வைத்தே. (1)

அகில நாயகனாய் ஞான வானந்த ரூபி யாகித்
துகடரு மணுவாய் வெற்பின் றோற்றமா யுயிரை யெல்லாந்
தகவுட னவனி யாகித் தரிப்பவ னெம்மை யிந்த
மகிதல மதனிற் றீமை மருவிடா தருளிற் காக்க, (2)

குரைபுன லுருவங் கொண்டு கூழ்தொறும் பயன்க ணல்கித்
தரையிடை யுயிர்கள் யாவுந் தளர்ந்திடா வண்ணங் காப்போ
னிரைநீரை முகில்க ளீண்டி நெடுவரை முகட்டிற் பெய்யும்
விரைபுன லதனுள் வீழ்ந்து விளிந்திடா தெம்மைக் காக்க. (3)

கடையுகந் தன்னி லெல்லா வுலகமுங் கடவு டயா
னடலைசெய் தமலை தாள மறைதர நடிக்கு மீச
னிடைநெறி வளைதா பத்தி லெறிதரு சூறைக் காற்றிற்
றடைபடா தெம்மை யிந்தத் தடங்கட லுலகிற் காக்க. (4)

தூயகண் மூன்றி னோடு சுடரும் பொன்வதன நான்கும்
பாயுமான் மழுவி னோடு பகர்வர தாபயங் கண்
மேயதிண் புயங்க ணாங்கு மிளிருமின் னனைய தேசு
மாயதற் புருட னெம்மைக் குணதிசை யதனிற் காக்க. (5)

மான்மழு சூலந் தோட்டி வனைதரு மக்க மாலை
கூன்மலீ யங்கு சந்தீத் தமருகங் கொண்ட செங்கை
நான்முக முக்க ணீல நள்ளிருள் வருணங் கொண்டே
ஆன்வரு மகோர மூர்த்தி தென்றிசை யதனிற் காக்க. (6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திவண்மறி யக்க மாலை செங்கையோ ரிரண்டுந் தாங்க
அவிர்தரு மிரண்டு செங்கை வரதத்தோ டபயந் தாங்கக்
கவினிறை வதன நான்குங் கண்ணொரு மூன்றுங் காட்டுந்
தவளமா மேனிச் சத்தியோ சாதன்மேற் றிசையிற் காக்க. (7)

கறை கெழு மழுவு மானு மபயமும் கண்ணி னாமம்
அறைதரு தொடையுஞ் செய்ய வங்கைக ணான்கு மேந்திப்
பொறை கொணான் முகத்து முக்கட் பொன்னிற மேனியோடு
மறைபுகழ் வாம தேவன் வடதிசை யதனிற் காக்க. (8)

அங்குசங் கபாலஞ் சூல மணிவர தாப யங்கள்
சங்குமான் பாச மக்கத் தமருகங் கரங்க ளேந்தித்
திங்களிற் றவளமேனி திருமுக மைந்தும் பெற்ற
எங்களீ சான தேவ னிருவிசும் பொங்குங் காக்க. (9)

சந்திர மவுலி சென்னி தனினுதற் கண்ண னெற்றி
மைந்துறு பகன்கண் டொட்டோன் வரிவிழி யகில நாதன்
கொந்துணர் நாசி வேதங் கூறுவோன் செவி கபாலி
அந்தில்செங் கபோலந் தூய வைம்முகன் வதன முற்றும். (10)

வளமறை பயிலு நாவ னாமணி நீல கண்டன்
களமடு பினாக பாணி கையினை தரும வாகு
கிளர்புயந் தக்கன் யாகங் கெடுத்தவன் மார்பு தூய
ஒளிதரு மேரு வில்லி யுதரமன் மதனைக் காய்ந்தோன். (11)

இடையிப முகத்தோன் றாதை யுந்திநம் மீசன் மன்னும்
புடைவள ரறைகு பேர மித்திரன் பொருவில் வாழும்
படர்சக தீசன் சானு பாய்தரு மிடப கேது
மிடைதருகணைக்கா லெந்தை விமலன் செய்பாதங் காக்க. (12)

வருபகன் முதல்யா மத்து மகேசன்பின் னிரண்டாம் யாமம்
பொருவறு வாம தேவன் புகன்றிடு மூன்றாம் யாமந்
செருமலி மழுவா ளங்கைத் திரியம்பக னாலாம் யாமம்
பருவலி யிடப வூர்தி பிணியற வினிது காக்க. (13)

கங்குலின் முதல்யா மத்துக் கலைமதி முடித்தோன் காக்க
தங்கிய விரண்டாம் யாமஞ் சானவி தரித்தோன் காக்க
பொங்கிய மூன்றாம் யாமம் புரிசடை யண்ணல் காக்க
பங்கமி னாலாம் யாமம் கௌரிதன் பதியே காக்க. (14)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்துள கால மெல்லா மந்தரற் கடிந்தோ னுள்ளுந்
தனிப்பெரு முதலாய் நின்ற சங்கரன் புறமுந் தாணு
வனப்புறு நடுவுந் தூய பசுபதிமற்று மெங்கு
நினைத்திடற் கரிய நோன்மைச் சதாசிவ நிமலன் காக்க. (15)

நிற்புழிப் புவன நாதனேகுழி நிமல மேனிப்
பொற்பிர மதாதி நாதா னிருப்புழிப் பொருவி லாத
அற்புத வேத வேத்திப னருந்துயில் கொள்ளு மாங்கட்
டற்பர சிவன் வழிக்குச் சாமள ருத்திரன் காக்க. (16

மலைமுதற் றுருக்கந் தம்மிற் புராரிகாத் திடுக மன்னுஞ்
சிலைவலி வேடரூபன் செறிந்தகா னகத்திற் காக்க
கொலை யமர்கற் பத்தண்ட கோடிகள் குலுங்க நக்குப்
பலபடி நடிக்கும் வீர பத்திரன் முழுதும் காக்க. (17)

பல்துளைப் புரவித் திண்டேர் படுமதக் களிறு பாய்மா
வில்லுடைப் பதாதி தொக்கு மிடைந்திடு மெண்ணில் கோடி
கொல்லியன் மாலை வைவேற் குறுகலர் குறுகுங் காலை
வல்லியோர் பங்கன் செங்கை மழுப்படை துணித்துக் காக்க. (18)

தத்துநீர்ப் புணரி யாடைத் தரணியைச் சுமந்து மானப்
பைத்தலை நெடிய பாந்தட் பஃறலை யனைத்துந் தேய்ந்து
மூத்தலை படைத்த தொக்கு மூரிவெங் கனல்கொள் சூலம்
பொய்த்தொழிற் கள்வர் தம்மைப் பொருதழித்தினிது காக்க. (19)

முடங்குளை முதலா யுள்ள முழுவலிக் கொடிய மாக்கள்
அடங்கலும் பினாகங் கொல்க வென்றிலை யணைத்து முள்ளத்
திடம்பட நினைந்து பாவஞ் செயுஞ்சிவ கவசந் தன்னை
யுடல்படத் தரிப்பை யானா லுலம்பொரு குலவுத் தோளாய். (20)

பஞ்ச பாதங்கள்போம் பகைகண் மாய்ந்திடும்
அஞ்சலின் மறவியு மஞ்சியாட் செயும்
வஞ்சநோ யொழிந்திடும் வறுமை தீர்ந்திடும்
தஞ்சமென் றிதனைநீ தரித்தல் வேண்டுமாம். (21)

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# சக்தி கவசம்

திருச்சிற்றம்பலம்

அங்கையிற் கரகந்தாங்கும் பிரமாணி யருளினோடும்
எங்கமென் சென்னிகாக்க வயிணவி துகளிலாகம்
துங்கனுங் காக்கசெய்ய வேந்தெழி லுருத்திராணி
தங்குமெண் டிசையுமன்பு தழைத்திட வினிதுகாக்க. (1)

கொன்னுனைச் சூலிசென்னி மயிரினைக் குறித்துக்காக்க
மன்னுவெண் பிறைதாழ்சென்னி வயங்கொளி நெற்றிகாக்க
பன்மயிப் பருவநாளும் பரிவொடு முமையாள் காக்க
என்னையாண் முக்கணீசன் இறைவிகண் ணிணைகள்காக்க. (2)

வயமிகு மிமய்வல்லி மூக்கினை மகிழ்ந்து காக்க
செயையொடு நன்னாக்காக்க விசயைமங் கலைமற்றொவ்வாக்
கண்கவர் நாடிகாக்க காத்தியா யனியெஞ்ஞான்றும்
முண்டக மலரிற்றூய முகத்தினைச் சிறந்து காக்க. (3)

சண்டிமென் கபோலங் காக்க தவளநாண் மலரின்வைகும்
ஒண்டொடி நன்னாக்காக்க விசையைமங் கலைமற் றொவ்வாக்
கண்கவர் நாடிகாக்க் காத்தியாய்னி யெஞ்ஞான்றும்
மூண்டக மலரிற்றூய முகத்தினைச் சிறந்து காக்க. (4)

காளமுண் டிருண்டநீல க்ண்டிமென் கழுத்துக் காக்க
கோளில் பூதாரசத்தி சுவற்புறங் காக்க கூர்மி
நீளொளிக் சந்திகாக்க வயித்திரி நெறியினோடுந்
தோளினை காக்கபத்மை துணைமல ரங்கைகாக்க. (5)

கமலைகை விரல்கள்காக்க விரசைகை யுகிர்கள் காக்க
திமிரமுன் டொளிரும் வெய்யோன் மண்டலத் துறையும்சென்னி
எமதிரு வாகுமூலங் காக்வா னவர்களேத்த
அமிர்தவ கரிநாணாளு மகன்மணி மார்பங் காக்க. (6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரித்திரி யிதயங்காக்க தயித்தியர்ச் செருப்போன் மிக்க
கருத்தொடு முலைகள்காக்க சகத்தினி லிறைமை பூண்டோன்
திருத்தரு வயிறுகாக்க திகழ்தபோ கதிதன் னுள்ளத்
தருத்தியி னுந்திகாக்க அசைவளர் முதுகு காக்க. (7)

கருதரு விகடைகாக்க கடிதடம் பாமைவாய்ந்த
குருமணிச் சகனங்காக்க குகாரணி குய்யங் காக்க
அருடர வருமபாய கந்தினி யபானங் காக்க
தெருளுடை விபுலை யென்றுஞ் சிறப்புடைக் குறங்கு காக்க. (8)

லளிதைமென் முழந்தாள் காக்க வியற்சபை கணைக்கால் காக்க
களிதரு கோரை வாய்ந்த பரட்டினைக் காக்கமிக்க
அளிகொள் பாதலத்திற் செல்வோள் அணிகெழு புறந்தாள் காக்க
ஒளிநகம் விரல்கள் சந்திரி யுக்கிரி யுவந்து காக்க. (9)

தலத்துறை மடந்தை யுள்ளங் காலிணை காக்க தண்ணென்
மலர்திரு மனையைக் காக்க வயங்கு கேத்திரதை யோங்கி
உலப்பில் கேந்திரங்கள் காக்க பரியகரை யொழிவறாது
நலத்தகு மக்கடம்மை நல்குறக் காக்கவன்றே. (10)

உயர்சனா தனியெஞ் ஞான்று மொழிவறு மாயுள் காக்க
மயர்வறு கீர்த்தி யாவு மாதேவி காக்க மிக்க.
செயிரறு தருமம் யாவுந் தனுத்திரி சிறந்து காக்க
இயல்புடைக் குலத்தை வாய்ந்த குலதேவி யினிது காக்க. (11)

சற்கதி பிரதை நல்லோர் இயைபினைத் தயாவித் காக்க
விற்கொடும் போரினீரில் வெளியினில் வனத்திற் சூதில்
இற்புற மதனிலோங்கு சர்வாணி காக்க வென்னாப்
பொற்றரு மலர்கடுவிப் புங்கவ ரேத்தி னாரே. (12)

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# கந்த சஷ்டி கவசம்

### காப்பு

துதிப்போர்க்கு வல்வினைபோம், துன்பம்போம், நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்து ஓங்கும்
நிஷ்டையுங் கைகூடும், நிமலர் அருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

### குறள் வெண்பா

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரன் அடிநெஞ்சே குறி.

## படை வீடு 1

### திருப்பரங்குன்றுறைத் திருமகன்

*முருகனுடைய சடாட்சரமந்திரத்தை 108 முறை செபித்தபின் சோமவாரத்தில் படிப்பது விசேடம்.*

### நூல்

திருப்பரங் குன்றுறை தீரனே குகனே
மருப்பிலாப் பொருளே வள்ளி மனோகரா
குறுக்குத் துறையுறை குமரனே அரனே
இருக்கும் குருபரா ஏரகப் பொருளே
வையா புரியில் மகிழ்ந்துவாழ் பவனே
ஒய்யார மயில்மேல் உகந்தாய் நமோ நமோ
ஐயா குமரா அருளே நமோ நமோ
மெய்யாய் விளங்கும் வேலா நமோ நமோ
பழநியங் கிரிவாழ் பகவா நமோ நமோ
மழுவுடை முதல்வன் மதலாய் நமோ நமோ

விராலி மலையுறை விமலா நமோ நமோ
மராமரம் துளைத்தோன் மருகா நமோ நமோ
சூரசம் கார துரையே நமோ நமோ
வீரவே லேந்தும் வேளே நமோ நமோ
பன்னிரு கரமுடைய பரமா நமோ நமோ
கண்களீ ராறுடைக் கந்தா நமோ நமோ
கோழிக் கொடியுடை கோவே நமோ நமோ
ஆழிசூழ் செந்தில் அமர்ந்தாய் நமோ நமோ
சசச சசச ஓம் ரீம்
ரரர ரரர ரீம்ரீம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவவ வவவ ஆம் ஹோம்
ணணண ணணண வாம் ஹோம்
பபப பபப சாம் சூம்
வவவ வவவ களம் ஓம்
லல லிலி லுலு நாட்டிய் அட்சரம்
கக கக கக கந்தனே வருக
இக இக இக ஈசனே வருக
தக தக தக சற்குரு வருக
பக பக பக பரந்தாமா வருக
வருக வருகவென் வள்ளலே வருக
வருக வருகநிஷ் களங்கனே வருக
தாயென நின்னிரு தாள் பணிந்தேன் எனைச்
சேயெனக் காத்தருள் திவ்யமா முகனே
அல்லும் பகலும் அனுதினம் என்னை
எல்லிலும் இருட்டிலும் எரிபகல் படுக்கை
வல்ல விடங்கள் வராமல் தடுத்து
நல்ல மனத்துடன் ஞான குருஉனை
வணங்கித் துதிக்க மகிழ்ந்துநீ வரங்கள்
இணங்கியே அருள்வாய் இறைவா எப்போதும்
கந்தா கடம்பா கார்த்தி கேயா
நந்தன் மருகா நாரணி சேயே
எண்ணிலாக் கிரியில் இருந்து வளர்ந்தனை
தண்ணளி அளிக்கும் சாமி நாதா
சிவகிரி கைலை திருப்பதி வேளூர்
தவக்கதிர் காமம் சார்திரு வேரகம்
கண்ணுள் மணிபோல் கருதிடும் வய்லூர்
விண்ணவர் ஏத்தும் விராலி மலைமுதல்
தன்னிக ரில்லாத் தலங்களைக் கொண்டு
சன்னதி யாய்வளர் சரவண பவனே
அகத்திய முனிவனுக் (கு) அன்புடன் தமிழைச்
செகத்தோர் அறியச் செப்பிய கோவே
சித்துகள் ஆடும் சிதம்பர சக்கரம்
நர்த்தனம் புரியும் நாற்பத்தெண் கோணம்
வித்தாய் நின்ற மெய்ப்பொரு ளோனே
உத்தம குணத்தாய் உம்பர்கள் ஏறே
வெற்றிக் கொடியுடை வேளே போற்றி
பக்திசெய் தேவர் பயனே போற்றி
சித்தம் மகிழ்ந்திடச் செய்தவா போற்றி
அத்தன் அரியயன் அம்பிகை லட்சுமி
வாணி யுடனே வரையுமாக் கலைகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானே நானென்று சண்முக மாகத்
தாரணி யுள்ளோர் சகலரும் போற்றப்
பூரண கிருபை புரிபவா போற்றி
பூதலத் துள்ள புண்ணியதீர்த் தங்கள்
ஓதமார் கடல்சூழ் ஒளிர்புவி கிரிகளில்
எண்ணிலாத் தலங்கள் இனிதெழுந் தருள்வாய்
பண்ணும் நிட்டைகள் பலபல வெல்லாம்
கள்ளம் அபசாரம் கர்த்தனே எல்லாம்
எள்ளினுள் எண்ணெய்போல் எழிலுடை உன்னை
அல்லும் பகலும் ஆசாரத்துடன்
சல்லாப மாய் உனைத் தானுறச் செய்தால்
எல்லா வல்லமை இமைப்பினில் அருளி
பல்லா யிரநூல் பகர்ந்தருள் வாயே
செந்தில் நகர்உறை தெய்வானை வள்ளி
சந்ததம் மகிழும் தயாபர குகனே
சரணம் சரணம் சரவண பவஓம்
அரன் மகிழ் புதல்வா ஆறுமுகா சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

## படை வீடு 2

### திருச்செந்தில் சரவணன்

ஷ மந்திரம் 108 முறை செபித்தபின் சஷ்டித்திதி, செவ்வாய்க் கிழமைகளில் படிப்பது சிறந்தது.

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பண்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடனஞ் செய்யும் மயில்வா கனனார்
கையில் வேலால்எனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரவண பவச, ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரவண நிறநிற நிறென

வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க,
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக,
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும், உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்

சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக,
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்

முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழகு உடைய் திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிபட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகன
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுகுண டிகுகுண டிகுண

ரரரர ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
எந்தனை யாளும் ஏரகச் செல்வ!
மைந்தன் வேண்டும் வரமகிந் துதவும்
லாலா லாலா வாலா வேசமும்
லீலா லீலா லீலா வீனோதனென்று

உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டு கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க

முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க

வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியிணை அருள்வேல் காக்க
கைகளிரண்டும் கருணைவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க

தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்கத் தாக்க தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்

பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளங்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்

நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டிய பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழி போக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட

வாய்விட் டலறி மதிகெட்டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கைகால் முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகை சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்றுப் பற்று பகலவன் தணலெரி

தணலெரி தணலெரி தணலது வாக
விடு விடு வேலைவெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு

குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீஎனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்

சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா

பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந்திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்

பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன் இரக்ஷி அன்னமுஞ் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசன்

வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டிக் கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒரு நாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்த்தங் கருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்

நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டா வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்

வீரலட்சு மிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
என்னைத்தடுத் தாட்கொள் என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி

இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படை வீடு 3

## பழநிப்பதிவாழ் முருகன்

சடாட்சரமந்திரம் 108 முறை செபித்தபின் செவ்வாய்க் கிழமைகளில் படிப்பது நல்லது.

திருவா வினன்குடி சிறக்கும் முருகா
குருபரா குமரா குழந்தைவே லாயுதா
சரவணை சண்முகா சதாசிவன் பாலா
இரவலர் தயாபரா ஏழைபங் காளா
பரமேசு வரிக்குப் பாலா தயாபரா
வரமெனக்(கு) அருள்வாய் வாமனன் மருகா
இரண்டா யிரம்வெள்ளம் யோகம் படைத்தவா
திரண்டா றுகமனம் தீர்க்கம் படைத்தவா
இலட்சத் திருநான்கு நற்றம்பி மாருடன்
பட்சத் துடனே பராசக்தி வேலதாய்

வீர வாகு மிகுதள கர்த்தனாய்
சூரசம் காரா துஷ்டநிஷ் டூரா
கயிலாய மேவும் கனகசிம் மாசனா
மயிலேறும் சேவகா வள்ளி மனோகரா
அகத்திய மாமுனிக்(கு) அருந்தமிழ் உரைத்தவா
சுகத்திரு முருகாற் றுப்படை சொல்லிய
நக்கீரன் நற்றமிழ் நலமென வினவிக்
கைக்கீழ் வைக்கும் கனமிசைக் குதவா
திருவரு ணகிரி திருப்புகழ் பாட
இரும்புகழ் நாவில் எழுதிப் புகழ்ந்தவா

ஆயிரத் தெட்டாம் அருள்சிவ தலத்தில்
பாயிரம் தோத்திரம் பாடப் புகழ்ந்தவா
எண்ணா யிரம்சமண் எதிர்கழு வேற்றி
விண்ணோர் குமாரன் வியாதியைத் தீர்த்தவா
குருவாம் பிரமனைக் கொடுஞ்சிறை வைத்து
உறுப்பொருள் வேதம் உரைத்தாய் சிவனுடன்
கருதிமெய் யோகம் சொல்லிய(து) ஒரு முகம்
அருள்பெறு மயில்மீ(து) அமர்ந்தது ஒருமுகம்
வள்ளிதெய் வானையை மருவிய(து) ஒருமுகம்
தெள்ளுநான் முகன்போல் சிருட்டிப்ப(து) ஒருமுகம்

சூரனை வேலால் துணித்த(து) ஒருமுகம்
ஆரணம் ஓதும் அருமறை யடியார்
தானவர் வேண்டுவ தருவ(து) ஒருமுகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞான முதல்வர்க்கு நற்பிள்ளை பழநி
திருப்பரங் கிரிவாழ் தேவா நமோநம
பொருட்செந்தில் அம்பதி புரப்பாய் நமோநம
ஏரகம் தனில்வாழ் இறைவா நமோநம
கூரகம் ஆவினன் குடியாய் நமோநம
சர்வசங் கரிக்குத் தனயா நமோநம
உறுசோலை மலைமேல் உகந்தாய் நமோநம

எல்லாக் கிரிக்கும் இறைவா நமோநம
சல்லாப மாக சண்முகத் துடனே
எல்லாத் தவமும் இனிதெழுந் தருளி
உல்லா சத்துறும் ஓங்கார வடிவே
மூலவட்டத்தில் முளைத்தெழும் சோதியே
சர்வ முக்கோணத் தந்தமுச் சக்தியை
வேலா யுதமுடன் விளங்கிடும் குகனைச்
சீலமார் வயலூர்ச் சேந்தனைத் தேவனை
கைலாச மேருவா காசத்தில் கண்டு
பைலாம் பூமியும் பங்கய பார்வதி

மேலும் பகலும் விண்ணுரு வேத்தி
நாற் கோணத்தில் நளினமாய் அர்ச்சனை
கங்கை யீசன் கருதிய நீர்புரை
செங்கண்மால் திருவும் சேர்த்துசெய் அர்ச்சனை
அக்கினி நடுவே அமர்ந்த ருத்திரன்
முக்கோண வட்டம் முதல்வாயு ருத்திரி
வாய்அறு கோணம் மகேஸ்வரன் மகேசுவரி
ஐயும் கருநெல்லி வெண்சாரை தன்மேல்
ஆகாச வட்டத்து(து) அமர்ந்த சதாசிவன்
பாகமாம் வெண்மைப் பராசக்தி கங்கை

தந்திர அர்ச்சனை தலைமேல் கொண்டு
மந்திர மூலத்தில் வாசியைக் கட்டி
அக்கினிக் குதிரை ஆகாசத் தேவி
மிக்கமாய்க் கருநெல்லி வெண்சாரை உண்பவர்
பாகமாய் ரதமும் பகல்வழி யாரை
சாகா வகையும் தன்னை அறிந்து
ஐந்து ஜீவனுடன் ஐயங் சுகல்பமும்
விந்தை உமைசிவன் மேன்மையும் காட்டி
சந்திர சூரியர் தம்முடன் அக்கினி
அந்தி ரனைக்கண்(டு) அறிந்தே யிடமாய்ச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தையுள் ஏற்றுச் சிவசம்பு தன்னை
மந்திர அர்ச்சனை வாசிவ என்று
தேறுமுகம் சென்னி சிவகிரி மீதில்
ஆறு முகமாய் அகத்துளே நின்று
வாசல் ஒன்பதையும் வளமுடன் வைத்து
யோசனை ஐங்கரன் உடன்விளை யாடி
மேலைக் கருநெல்லி வெண்சாரை உண்டு
வாலைக் குழந்தை வடிவையும் காட்டி
நரை திரை மாற்றி நாலையும் காட்டி
உரைசிவ யோகம் உபதேசம் செப்பி

மனத்தில் பிரியா வங்கண மாக
நினைத்த படிஎன் நெஞ்சத் திருந்து
அதிசயம் என்றும் அடியார்களுக் (கு) இரங்கி
மதியருள் வேலும் மயிலுடன் வந்து
நானே நீயெனும் லட்சணத் துடனே
தேனே என்னுளம் சிவகிரி எனவே
ஆறா தாரத் (து) ஆறு முகமும்
மாறா திருக்கும் வடிவையும் காட்டிக்
கனவிலும் நனவிலும் கண்டுனைத் துதிக்க
தனதென வந்து தய்வுடன் இரங்கிச்

சங்கொடு சக்கரம் சண்முக தரிசனம்
எங்கு நினைத்தாலும் என்முன் னேவந்து
அஷ்டாவ தானம் அறிந்தவுடன் சொல்லத்
தட்டாத வாக்கும் சர்வா பரணமும்
இலக்கணம் இலக்கியம் இசையறிந் துரைக்கச்
துலக்கிய காவியம் சொற்பிர பந்தம்
எழுத்துச் சொற்பொருள் யாப்பலங் காரம்
வழுத்துப்என் நாவில் வந்தினி திருந்தே
அமுத வாக்குடன் அடியார்க்கும் வாக்கும்
சமுசார சாரமும் தானே நிசமென

வச்சிர சாரிரம் மந்திர வசீகரம்
அட்சரம் யாவும் அடியேனுக்(கு) உதவி
வல்லமை யோகம் வசீகர சக்தி
நல்லஉன் பாதமும் நாடிய பொருளும்
சகலகலை ஞானமும் தானெனக் கருளி
செகதல வசீகரம் திருவருள் செய்து
வந்த கலிபிணி வல்வினை மாற்றி
இந்திரன் தோகை எழில்மயில் ஏறிக்
கிட்டவே வந்து கிருபை பாலிக்க
அட்டதுட் டமுடன் அனேக மூர்க்கமாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துட்டதே வதையும் துட்டப்பிசாசும்
வெட்டுண்ட பேயும் விரிசடைப் பூதமும்
வேதாளம் கூளி விடும் பில்லி வஞ்சனை
பேதாளம் துன்பப் பிசாசுகள் நடுநடுங்க
பதைபதைத் தஞ்சிடப் பாசத்தால் கட்டி
உதைத்து மிதித்தங்(கு) உருட்டி நொருக்கிச்
சூலத்தாற் குத்தித் தூளுதூ ளுருவி
வேலா யுதத்தால் வீசிப் பருற
மழுவிட் டேவி வடவாக் கினிபோல்
தழுவிஅக் கினியாய்த் தானே எரித்துச்

சிதம்பர சக்கரம் தேவி சக்கரம்
மதம்பெறும் காளி வல்ல சக்கரம்
மதியணி சம்பு சதாசிவ சக்கரம்
பதிகர்ம வீர பத்திரன் சக்கரம்
திருவை குண்டம் திருமால் சக்கரம்
அருள்பெருந் திகிரி அக்கினி சக்கரம்
சண்முக சக்கரம் தண்டா யுதத்தால்
விம்ம அடிக்கும் எல்லாச் சக்கரமும்
ஏக ரூபமாய் என்முன்னே நின்று
வாகனத் துடன்என் மனத்துள் இருந்து

தம்பனம் மோகனம் தயவாம் வசிகரம்
இம்பமா கருடனம் மேவுமுச் சாடனம்
வம்பதாம் பேதனம் வலிதரும் ஆரணம்
உம்பர்கள் ஏத்தும் உயர்வித் வேடணம்
தந்திர மந்திரம் தருமணி அட்சரம்
உந்தன் விபூதி யுடனே சபித்து
கத்தனின் தோத்திரம் கவசமாய்க் காக்க
எந்தன் மனத்துள் ஏதுவேண் டியதும்
தந்துரட் சித்தருள் தயாபார சரணம்
சந்தம் எனக்கருள் சண்முகா சரணம்

சரணம் சரணம் சட்கோண இறைவா
சரணம் சரணம் சத்துரு சம்கார
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படை வீடு 4

# திருவேரகம் சுப்பிரமண்யர்

*வியாழக்கிழமைகளில் படிப்பது.*

ஓமெனும் பிரணவம் உரைத்திடச் சிவனார்
காமுற உதித்த கனமறைப் பொருளே
ஓங்கார மாக உதயத் தெழுந்தே
ஆங்கார மான அரக்கர் குலத்தை
வேரறக் களைந்த வேலவா போற்றி
தேராச் சூரரைத் துண்டதுண் டங்களாய்
வேலா யுதத்தால் வீசி அறுத்த
பாலா போற்றி பழனியின் கோவே
நான்கு மறைகள் நாடியே தேடும்
மான்மரு கோனே வள்ளி மணாளனே

நானெனும் ஆணவம் நண்ணிடா(து) என்னைக்
காண நீ வந்து காப்பதுன் கடனே
காளி கூளி கங்காளி ஓங்காரி
சூலி கபாலி துர்க்கை யேமாளி
போற்றும் முதல்வா புனித குமாரா
சித்தர்கள் போற்றும் தேசிகர் போற்றி
ஏகாட் சரமாய் எங்கும் தானாகி
வாகாய் நின்ற மறைமுதற் பொருளே
துதியட் சரத்தால் தொல்லுல(கு) எல்லாம்
அதிசய மாக அமைத்தவா போற்றி

திரியாட் சரத்தால் சிவனவன் மாலும்
விரிபா ருலகில் மேன்மை யுற்றவனே
சதுரட் சரத்தால் சாற்றுநல் யோகம்
மதுரமாய் அளிக்கும் மயில்வா கனனே
பஞ்சாட் சரத்தால் பரமன் உருவாய்த்
தஞ்மென் றோரைத் தழைத்திடச் செய்தென்
நெஞ்சத்(து) இருக்கும் நித்தனே சரணம்
அஞ்சலி செய்த அமரரைக் காக்கும்
ஆறு கோணமாய் ஆறெழுத் தாகி
ஆறு சிரமும் அழகிய முகமும்

ஆறிரு செவியும் அமர்ந்த மார்பும்
ஆறிரு கண்ணும் அற்புத வடிவும்
சரவணை வந்த சடாட்சரப் பொருளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரனயன் வாழ்த்தும் அப்பனே கந்தா
கரங்கள்பன் னிரண்டில் கதிரும்ஆ யுதத்தால்
தரங்குலைந்(து) ஓடத் தாரகா சுரன்முதல்
வேரறச் சூர்க்குலம் முடித்து மகிழ்ந்தோய்
சீர்திருச் செந்தூர்த் தேவசே னாதிப
அஷ்ட குலாசலம் யாவையும் ஆகி
இஷ்டசித் திகள்அருள் ஈசன் புதல்வா

துட்டசங் கார சுப்பிர மணியா
மட்டிலா வடிவே வையாபுரித் துரையே
எண்கோ ணத்துள் இயங்கிய் நாரணன்
கண்கொள்ளாக் காட்சி காட்டிய சடாட்சர
சைவம் வைணவம் சமரச மாக
தெய்வமாய் விளங்கும் சரவண பவனே
சரியை கிரியை சார்ந்தநல் யோகம்
இரவலர்க்(கு) அருளும் ஈசா போற்றி
ஏதுசெய் திடினும் என்பால் இரங்கிக்
கோதுகள் இல்லாக் குணமெனக் கருளித்

தரிசனம் கண்ட சாதுவோ(டு) உடன்யான்
அருச்சனை செய்ய அனுக்கிரகம் அருள்வாய்
பில்லிவல் வினையும் பீனிச மேகம்
வல்ல பூதங்கள் மாயமாய்ப் பறக்க
அல்லலைப் போக்கி நின் அன்பரோ(டு) என்னைச்
சல்லாப மாகச் சகலரும் போற்ற
கண்டு களிப்புறக் கருணை அருள்வாய்
அண்டர் நாயகனே அருமறைப் பொருளே
குட்டிச் சாத்தான் குணமிலா மாடன்
தட்டிலா இருளன் சண்டிவே தாளம்

சண்டமா முனியும் தக்கராக் கதரும்
மண்டை வலியொடு வாதமும் குன்மமும்
சூலைகா மாலை சொக்கலும் சயமும்
மூல ரோகங்கள் முடக்குள் வலிப்பு
திட்டு முறைகள் தெய்வத சாபம்
குட்டம் சோம்பல் கொடிய வாந்தியும்
கட்டிலாக் கண்ணோய் கண்ணேறு முதலா
வெட்டுக் காயம் வெவ்விடம் அனைத்தும்
உன்னுடைய நாமம் ஓதியே நீறிடக்
கன்னலொன் றதனில் களைந்திடக் கருணை

செய்வதுன் கடனே செந்தில் நாயகனே
தெய்வ நாயகனே தீரனே சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படை வீடு 5

## குன்றுதோறாடும் குமரன்

*பரணி, கார்த்திகை, விசாக நட்சத்திரங்களிலும் வியாழக் கிழமைகளிலும் படிக்க நற்பயன்.*

கணபதி துணைவா கங்காதரன் புதல்வா
குணவதி உமையாள் குமரா குருபரா
வள்ளிதெய் வானை மருவிய் நாயகா
துள்ளிமயி லேறும் சுப்பிர மணியா
அழகொளிப் பிரபை அருள்வடி வேலா
பழநி நகரில் பதியநு கூலா
திருவா வினன்குடி சிறக்கும் முருகா
அருள்சேர் சிவகிரி ஆறு முகவா
சண்முக நதியும் சார்பன்றி மலையும்
பன்முகம் நிறைந்த பழநிக்கு இறைவா

ஆராறு நூற்று அட்டமங் களமும்
வீரவை யாபுரி விளங்கும் தயாபரா
ஈராறு பழநி எங்கும் தழைக்கப்
பாராறு சண்முகம் பகரும் முதல்வா
ஆறு சிரமும் ஆறு முகமும்
ஆறிரு புயமும் ஆறிரு காதும்
வடிவம் சிறந்த மகரகுண் டலமும்
தடித்த பிரபைபோல் சார்ந்த சிந்தூரமும்
திருவெண்ணீ றணிதிருநுதல ழகும்
கருணை பொழியும் கண்ணான்கு மூன்றும்

குனித்த புருவமும் கூரிய மூக்கும்
கணித்த மதுரித்த கனிவாய் இதழும்
வெண்ணிலாப் பிரபைப்போல் விளங்கிய நகையும்
எண்ணிலா அழகாய் இலங்குபல் வரிசையும்
காரிகை உமையாள் களித்தே இனிதெனச்
சீர்தரும் வள்ளி தெய்வநா யகியாள்
பார்த்தழ கென்னப் பரிந்த கபாலமும்
வார்த்த கனகம்போல் வடிவேல் ஒளியும்
முறுக்குமேல் மீசையும் மூர்க்கம் சிறக்க
மறுக்கும் சூரர்மேல் வாதுகள் ஆட

ஈச்வரன் பார்வதி எடுத்துமுத் தாடி
ஈச்வரன் வடிவை மிகக்கண் டனுதினம்
கையால் எடுத்துக் கனமார்(பு) அணைத்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயா! குமரா அப்பனே! என்று
மார்பினும் தோளினும் மடியினும் வைத்துக்
கார்த்திகே யாளனக் கருணையால் கொஞ்சி
முன்னே கொட்டி முருகா! வருகவென்(று)
அந்நேரம் வட்டமிட் டாடி விளையாடித்
தேவியும் சிவனும் திருக்கண் களிகூரக்
கூவிய மயிலேறும் குருபரா வருக

தாவிய தகரேறும் சண்முகா வருக
ஏவிய வேலேந்தும் இறைவா வருக
கூவிய் சேவற் கொடியோய் வருக
பாவலக் கருள்சில பாலனே வருக
அன்பரிக் கருள்புரி ஆறுமுகா வருக
பொன்போல் சரவணப் புண்ணிய வருக
அழகிற் சிவனொளி அய்யனே வருக
களபம் அணியுமென் கந்தனே வருக
மருமலர்க் கடம்பணி மார்பா வருக
மருவுவோர் மலரணி மணியே வருக

திரிபுர பவனெனும் தேவே வருக
பரிபுர பவனெனும் பவனே வருக
சிவகிரி வாழ் தெய்வ சிகாமணி வருக
காலில் தண்டை கலீர் கலீரென
சேலிற் சதங்கை சிலம்பு கலீரென
இடும்பனை மிதித்ததோர் இலங்கிய பாதமும்
அடும்பல வினைகளை அகற்றிய பாதமும்
சிவகிரி மீதினில் திருநிறை கொலுவும்
நவகிரி அரைமேல் இரத்தினப் பிரபையும்
தங்கரை ஞாணும் சாதிரை மாமணி

பொங்குமாந் தளிர்சேர் பொற்பீதாம் பரமும்
சந்திர காந்தச் சரிகைத் தொங்கலும்
மந்திர வாளும் வங்கிச் சரிகையும்
அருணோ தயம்போல் அவிர்வன் கச்சையும்
ஒரு கோடி சூரியன் உதித்த பிரபை போல்
கருணையால் அன்பரைக் காத்திடும் அழகும்
இரு கோடி சந்திரன் எழிலொட்டி யாணமும்
ஆயிரம் பணாமணி அணியுமா பரணமும்
வாயில்நன் மொழியாய் வழங்கிய சொல்லும்
நாபிக் கமலமும் நவரோம பந்தியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்பில் சவ்வாது வாடை குபீரென
புனுகு பரிமளம் பொருந்திய புயமும்
ஒழுகிய சந்தனம் உயர் கஸ்தூரியும்
வலம்புரிச் சங்கொலி மணியணி மிடறும்
நலம்சேர் உருத்திர அக்க மாலையும்
மாணிக்கம் முத்து மரகதம் நீலம்
அணிவை டூரியம் அணிவைரம் பச்சை
பவளகோ மேதகம் பதித்தவச் ராங்கியும்
நவமணிப் பிரபைபோல் நாற்கோடி சூரியன்
அருணோ தயமெனச் சிவந்த மேனியும்

கருணை பொழியும் கடாட்சவீட் சணமும்
கவசமும் தரித்தருள் காரண வடிவம்
நவவீரர் தம்முடன் நற்காட்சி யான
ஒருகை வேலாயுதம் ஒரு கை சூலாயுதம்
ஒருகை நிறைசங்கு ஒருகை சக்கராயுதம்
ஒருகை நிறைவில்லு ஒருகை நிறையம்பு
ஒருகை மந்திரவாள் ஒருகை மாமழு
ஒருகை மேற்குடை ஒருகை தண்டாயுதம்
ஒருகை சந்திராயுதம் ஒருகை வல்லாயுதம்
அங்கையில் பிடித்த ஆயுதம் அளவிலாப்

பங்கயக் கமலப் பன்னிரு தோளும்
முருக்கம் சிறக்கும் முருகா சரவணை
இருக்கும் குருபரா ஏழைபங் காளா
வானவர் முனிவர் மகிழ்ந்து கொண்டாடத்
தானவர் அடியவர் சகலரும் பணியப்
பத்திர காளி பரிவது செய்யச்
சக்திகள் எல்லாம் தாண்டவ மாட
அஷ்ட பயிரவர் ஆனந்த மாட
துஷ்டமிகுஞ் சூளிகள் சூழ்திசை காக்க
சத்த ரிஷிகள் சாந்தக மென்னச்

சித்தர்கள் நின்று சிவசிவா என்னத்
தும்புரு நாரதர் சூரிய சந்திரர்
கும்பமா முனியும் குளிர்ந்த தாரகையும்
அயன்மால் உருத்திரன் அஷ்டகணங்கள்
நயமுடன் நின்று நாவலால் துதிக்க
அஷ்ட லக்ஷ்மி அம்பிகை பார்வதி
கட்டழகன் என்று கண்டுனை வாழ்த்த
இடும்பா யுதன் நின் இணையடி பணிய
ஆடும் தேவகன்னி ஆலத்தி எடுக்க
தேவ கணங்கள் ஜெயஜெய என்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏவற் கணங்கள் இந்திரர் போற்ற
கந்தருவர் பாடிக் கவரிகள் வீசிச்
சார்ந்தனம் என்னச் சார்வரும் அநேக
பூதம் அடிபணிந் தேத்தவே தாளம்
பாதத்தில் வீழ்ந்து பணிந்துகொண் டாட
அரகர என்றடியார் ஆலவட்டம் பிடிக்க
குருபரன் என்றன்பர் கொண்டாடி நிற்க
குடையும் சேவலின் கொடியும் சூழ
இடை விடாமல் உன் ஏவலர் போற்றச்
சிவனடி யார்கள் ·திருப்பாத மேத்த

நவமெனும் நால்வரை ஏற்ற சரமண்டலம்
உருத்திர வீணை நாதசுர மேளம்
தித்திமி என்ற தேவர்கள் ஆடச்
சங்கீத மேளம் தாளம் துலங்க
மங்கள மாக வைபவம் இலங்க
தேவ முரசடிக்கத் தினமேள வாத்தியம்
சேவல் கொடியும் சிறப்புடன் இலங்க
நந்திகேசுவரன் மீது ஏறிய நயமும்
வந்தனம் செய்ய வானவர் முனிவர்
எங்கள் பார்வதியும் ஈசனும் முன்வர

ஐங்கரன் முன்வர ஆறுமா முகவன்
வீரமயிலேறி வெற்றிவேல் எடுத்து
சூரன்மேல் ஏவத் துடித்தவன் மடியச்
சிங்கமுகா சுரன் சிரமது உருளத்
துங்கக் கயமுகன் சூரனும் மாள
அடலற்ற குழந்தை அறுத்துச் சயித்து
விட்டவே லாயுதம் வீசிக்கொக் கரித்துத்
தம்ப மெனும்சயத் தம்பம் நாட்டி
அன்பர்கள் தம்மை அனுதினம் காத்துத்
திருப்பரங் குன்றம் சீர்ப்பதி செந்தூர்

திருவாவி னன்குடி திருவே ரகமும்
துய்ய பழநி சுப்பிர மண்யன்
மெய்யாய் விளங்கும் விராலி மலைமுதல்
அண்ணா மலையும் அருள் மேவும் கயிலை
கண்ணிய மாவூற்று கழுகுமா மலையும்
முன்னிமை யோர்கள் முனிவர் மனத்திலும்
நன்னய மாய்ப்பணி நண்பர் மனத்திலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிர்காமம் செங்கொடு கதிர்வேங் கடமும்
பதினா லுலகத்திலும் பக்தர் மனத்திலும்
எங்கும் தானவ னாயிருந்(து) அடியார்தம்

பங்கி லிருந்து பாங்குடன் வாழ்க
கேட்ட வரமும் கிருபைப் படியே
தேட்ட முடன் அருள் சிவகிரி முருகா
நாட்டு சிவயோகம் நாடிய பொருளும்
தாட்டிக மாய்எனக்(கு) அருள்சண் முகனே
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்

## படை வீடு 6

### பழமுதிர்சோலைப் பிரான்

சங்கரன் மகனே சரவண பவனே
ஐங்கரன் துணைவனே அமரர்தம் கோனே
செங்கண்மால் மருகனே தெய்வானை கேள்வனே
பங்கயம் போன்ற பன்னிரு கண்ணனே
பழநிமா மலையுறும் பன்னிரு கரத்தனே
அழகுவேல் ஏந்தும் ஐயனே சரணம்
சரவண பவனே சட்கோணத் துள்ளுறை
அரனருள் சுதனே ஐயனே சரணம்
சயிலொளி பவனே சடாட்சரத் தோனே
மயில்வா கனனே வள்ளலே சரணம்

திரிபுர பவனே தேவசே னாதிபதி
குறமகள் மகிழும் குமரனே சரணம்
திகழொளி பவனே சேவற் கொடியாய்
நகமா யுதமுடை நாதனே சரணம்
பரிபுர பவனே பன்னிரு கையனே
தருணமிவ் வேளை தற்காத் தருளே
சவ்வும் ரவ்வுமாய்த் தானே யாகி
வவ்வும் ணவ்வுமாய் விளங்கிய குகனே
பவ்வும் வவ்வுமாய் பழமுதிர் சோலையில்
தவ்வியே ஆடும் சரவண பவனே

குஞ்சரி வள்ளியைக் குலாவி மகிழ்வோய்
தஞ்சமென் றுன்னைச் சரணம் அடைந்தேன்
கொஞ்சிய உமையுடன் குழவியாய்ச் சென்றங்(கு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சலி செய்தவன் அமுதமும் உண்டு
கார்த்திகை மாதர் கனமார் (பு) அமுதமும்
பூர்த்தியாய் உண்ட புனிதனே குகனே
நவமைந்தர் சிவனால் நலமுடன் உதிக்கத்
தவமுடை வீர வாகுவோ(டு) ஒன்பான்
தம்பி மாரா கக் கொண்ட
சம்பிர தாயா சண்முகா வேலா

நவவீரர் தம்முடன் நவகோடி வீரரும்
கவனமாய் உருத்திரன் அளித்தே களித்துப்
பேதம் இல்லாமல் பிரமனைக் குருவாய்
ஓதிடச் செய்ய உடன் அவ் வேதனை
ஓமெனும் பிரணவத் துண்மை நீ கேட்கத்
தாமே யோசித்த சதுர்முகன் தன்னை
அமரர்கள் எல்லாம் அதிசயப் படவே
மமமைசேர் அயனை வன்சிறை யிட்டாய்
விமலனும் கேட்டு வேகம தாக
உமையுடன் வந்தினி துவந்து புரிந்து

அயனைச் சிறைவிடென்(று) அன்பாய் உரைக்க
நயமுடன் விடுத்த ஞானபண் டிதனே
திருமால் அயன்சிவன் சேர்ந்து மூவரும்
கௌரி லட்சுமி கலைமக ளுடனே
அறுவரோர் அம்சமாய் அரக்கரை வெல்ல
ஆறு முகத்துடன் அவதரித் தோனே
சிங்க முகாசுரன் சேர்ந்த கயமுகன்
பங்கமே செய்யும் பானு கோபனும்
சூரனே டொத்த துட்டர்க ளோடு
கோரமே செய்யும் கொடியராகக் கதரை

வேருடன் கெல்லி விண்ணவர் துன்பம்
ஆறிடச் செய்தவ் வமரர்கள் தமக்குச்
சேனா பதியாய் தெய்வீக பட்டமும்
தானாய்ப் பெற்ற தாட்டிகப் பெருமானே
திருப்பரங் குன்றம் செந்தூர் முதலாய்ச்
சிறப்புறு பழநி திருவே ரகமுதல்
எண்ணிலாத் தலங்களில் இருந்தாடும் குகனே
விண்ணவர் ஏத்தும் விநோத பாதனே
அன்பர்கள் துன்பம் அகற்றியாள் பவனே
தஞ்சமென்(று) ஓதினர் சமயம் அறிந்தங்(கு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பம் கொடுக்கும் ஏழைபங் காளா
கும்பா முனிக்குக் குருதே சிகனே
தேன்பொழில் பழநித் தேவ குமாரா
கண்பார்த்(து) எனையாள் கார்த்திகே யாஎன்
கஷ்டநிஷ் டூரம் கவலைகள் மாற்றி
அஷ்டலட்சுமி வாழ் அருளெனக்(கு) உதவி
இட்டமாய் என்முன் னிருந்து விளையாடத்
திட்டமாய் எனக்கருள் செய்வாய் குகனே
அருணகிரி தனக்(கு) அருளிய தமிழ்போல்
கருணையால் எனக்கு கடாட்கித் தருவாய்

தேவ ராயன் செப்பிய கவசம்
பூவல யத்தோர் புகழ்ந்து கொண்டாட
சஷ்டிகவசம் தான்செபிப் போரைச்
சிஷ்டராய்க் காத்தருள் சிவகிரி வேலா
வந்தென் நாவில் மகிழ்வுடன் இருந்து
சந்தத் தமிழ்த்திறம் தந்தருள் வோனே
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் தமிழ்தரும் அரனே
சரணம் சரணம் சங்கரன் சுதனே
சரணம் சரணம் சண்முகா சரணம்

கந்த சஷ்டி கவசம் முற்றிற்று.

ஓம் சரவணபவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# திருவூஞ்சல்

## தெல்லிநகர்க் குருநாதசுவாமி பேரிற்

திருச்சிற்றம்பலம்

### காப்பு

திருமேவு சைவருறை தெல்லிநகர் வாழுங்
குருநாத னுக்கூசல் கூற — வருணாட்டுக்
தந்தியா னத்தா மறையாத ஊன்முதலோர்
தந்தியா னத்தான் சரண்

### நூல்

திருவாரும் வருணனார் பவனக் கால்கள்
செவ்விகொடு நாட்டமேல் வைரவிட்டம்
உருவாருந் தேவர்கோ னுவந்து பூட்ட
வுற்றநான் முகன்முத்து வடங்கள் வீக்க
மருவாரு மால்ரத்நப் பலகை தூக்கி
மருகனே யாடுதென வாழ்த்தா நின்றான்
குருநாத சாமிதெல்லி யூர்வாழ் தெய்வங்
குகப்பெருமா னாடியரு ளூசலின்னே (1)

உலகெலா மொருசெங்கோ லோச்சிக்காக்கு
மொண்டமிழர் முடிமீதி லுன்பாதத்தே
யலகிலாப் பத்திவித்து மந்நெஞ்சத்தே
யருண்மேவு கவிஞர்நா வகத்தே கொண்டோர்
இலகுதாமரை நெஞ்சிற் கற்புநாட்டு
மியல்பானோர் வதனத்தே „யின்பமூட்டக்
குலமெலாம் விளையாடித் தெல்லியூர்வாழ்
குருநாத னாடியரு ளூசலின்னே (2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தணியாத காதலொடு வாயூறற்றேன்
றவழ்மார்புச் சிறாரொன்று சேர்ந்து தூய
மணலானே சோறாக்கிக் தெய்வஞ்செய்து
வந்தனையோ டருச்சித்து வாழ்த்து வார்போல்
அணிமேவு மழலைப்பாப் பாடியாடற்
கணிபூத்தம் பாலிகை கூத்தாடிக் காக்குங்
குணமாருந் தெல்லிநகர்க் கோயில்கொண்ட
குருநாத னாடியரு ளுசலின்னே. (3)

கலைமாதி யாழ்வருடிப் பாடுகின்றாள்
கமலத்தான் புனைந்து கூத்தாடுகின்றாள்
அலைமாது மலைமாது மாங்குன் னூச
லாட்டுக்கண் டகங்களித்தற் கீங்குள்ளார்கள்
கலையோடியுட் கொண்டும் புறம்பொன் றில்லார்
களுக்குப் பொற்கலை கொடுக்கும் வண்மைச் செல்வர்
குலமேவு தெல்லிநகர்க் கோயில் கொண்டான்
குருநாத னாடியரு ளுசலின்னே. (4)

வாடாத தவவாய்மை யோங்கிக் கற்றா
மனசென்னத் தமிழ்மாட்டு வேட்கைபொங்கி
ஓடாத நெறிநின்று முன்ன ருற்ற
வூனமெலா நீத்துரிமை யொன்ற வென்று
நாடாண்டு தமிழ்மக்க ணன்று சால
நாவலவர் பாவலவர் தம்மைப் பேணிக்
கோடாத செல்வமெலாங் கொடுத்துக் காக்குங்
குருநாத னாடியரு ளுசலின்னே. (5)

தண்டமிழைச் சைவத்தை தக்கசீர்த்தித்
தமிழ்நாட்டை நான்மறையை யாகமத்தைக்
கொண்டலெனச் சுவையூற்றும் பாவல்லோரைக்
கூடுகண் மணியென்னப் பேணாநீசர்
அண்டிவாழ் திசையுங்கண் பாரா வாண்மை
யமைந்தார்க்கே யிடமீயுந் தெல்லியூரன்
குண்டலமுந் தாரமசைந் தாடவப்பன்
குருநாத னாடியரு ளுசலின்னே. (6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்காரச் சூர்குலவே ரன்றறுத்தா
 னகப்பொருட்குச் சுவைப் பொருளையார்ந்து கேட்டான்
நீங்காத செழுந்தமிழ்க்கு நேயங்கூட்டி
 நிகருமொழி வேறின்றா நேர்மைகாட்டி
பாங்கான மணிமௌவி சூட்டிவென்றி
 படுதம்ப மூலகுரைக்க நாட்டியாண்டான்
கோங்காரு மலர்தடலஞ்சூழ் தெல்லியூர்வாழ்
 குருநாத னாடியரு ளுசலின்னே. (7)

மண்ணுலகும் விண்ணுலகும் வாழுமும்மை
 மாரிமதி தொறும் பொழிய மன்னர்செங்கோல்
எண்ணுமொரு குறைவின்றி யினிதினீட
 யிறைவனருண் மறையுடனாகமங்களோங்க
தண்ணளிசேர் சைவநெறி வீறவின்பந்
 தழைக்கவரு மைந்தெழுத்து நீறும்வெல்ல
கொண்டறவழ் மணிமாடஞ் சூழுந்தெல்லிக்
 குருநாத னாடியரு ளுசலின்னே. (8)

போற்றுவரு ணாச்சிரம நான்கும் வெல்ல
 புலவர்புக ழுறமுதலா நான்கும்புல்ல
நோற்றமறை யந்தணர்கள் வேள்வியொல்ல
 நுவறரும நெறிமறவேர் தன்னைக்கொல்ல
சேற்றிதழ்த்தா மரைமுகையிற் கைகள்கூப்பித்
 தீரவே லெனவடியார் நீண்டுசெல்ல
கோற்றொடியார் நிறைவிளக்குந் தெல்லியூர்வாழ்
 குருநாத னாடியரு ளுசலின்னே. (9)

ஆரியமுஞ் செந்தமிழும் வாழிவேதம்
 ஆகம புராணாதி நூல்கள் வாழி
சீரிய சித்தாந்த சைவஞ் சிறந்துவாழி
 திருநீறுங் கண்டிகையுந் திகழ்ந்துவாழி
மாரிதரு வான்முகில்கள் வழங்கிவாழி
 வளம்பலவும் வாய்ந்து சைவருழிவாழி
கூரியநன் மதிப்புலவர் பாடல்சான்ற
 குருநாதன் றிருக்கருணை வாழி வாழி. (10)

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
குகமயம்



# திருவூஞ்சல்

யாழ்ப்பாணம் – தெல்லியூர்

## குருநாத சுவாமி பேரிற்

### காப்பு

சீர்த்திபெறு பூஞ்சினைகள் பந்த ராக
  செய்ய தோரணங் கமுகின் பாளையாக
ஆர்த்திபெறு மணியோசை பண்ணதாக
  அங்குயிலின் கூக்குரலின் இசையதாக
பூர்த்திபெறு மணங்கமழுஞ் சோலை நாப்பண்
  புண்ணியருக் கருள்புரிய விருப்பினோடும்
கீர்த்திபெறு தெல்லிநக ரத்தே மேவும்
  கிருபை தருங் கணபதியே காப்ப தாமே.

### நூல்

சீர்மேவு நான்மறைகள் கால்க ளாகத்
  திறமேவு மங்கமவை விட்ட மாக
ஏர்மேவு பிரணவம்பொற் பலகையாக
  எழின்மேவு முபாங்கமவை கயிற தாக
ஆர்மேவு பல்கலைசித் திரமதாக
  ஆற்றியொளி செயுமூஞ்சற் பீட மேவி
பேர்மேவு தெல்லிநக ரத்தே வாழும்
  பெருமானே குருநாதா வாட லூஞ்சல். (1)

இ180

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திசெயு மன்பர்நிலை கால்களாகப்
பயிலுமவர் சடலமவை பலகை யாகச்
சித்தியுறு மண்பதுவே கயிறதாக
சிறந்தோங்கு தியானமவை விட்டமாகச்
சுத்தியுறு மலர்மனம்பொற் பீட மாகத்
தொழுமடியா ருளத்துள்ளே குலவி வாழும்
சத்தியொடும் தெல்லிநக ரத்தே மேவும்
சண்முகனே குருநாதா வாடீ ரூஞ்சல். (2)

சங்கரனு மைங்கரனு மகிழ்ச்சி கூரச்
சதுர்முகனும் நாராணனுந் தாழ்ந்து போற்றத்
துங்கமுறு கணத்தலைவர் துதிகள் கூறச்
சுந்தரமா ரரம்பையர்கள் கீதம் பாட
பங்கமிலா வடியார்கள் மகிழ்வோ டாடப்
பாவையர்க ளிருமருங்குங் கவரி வீசப்
பொங்குமெழிற் றெல்லிநக ரத்தே வாழும்
பூரணனே குருநாதா வாடீ ரூஞ்சல். (3)

காலையிலு மாலையிலு மணைந்து போற்றிக்
கண்களினீர் மார்பதனில் வீழ்ந்து சோர
வேலைநிகர் தம்மிடர்கள் சொல்லிச் சொல்லி
விழுந்து நமஸ்காரமது செய்துபோற்றப்
பாலைநகர் குளத்தடியார்க் கருளை யீந்து
பகர்வினைக ளெஞ்ஞான்றும் நீக்கி நீக்கி
சோலைநகர் தெல்லிநக ரத்தே மேவும்
சுந்தரமார் குருநாதா வாடீ ரூஞ்சல். (4)

பொற்பாடு மணிமகுடந் துலங்கி யாடப்
புகழாரு மணிவதனந் தானுமாடக்
கற்பாருங் கனியிதழ்வாய் வள்ளி யாடக்
களிப்பாருந் தெய்வமகள் மகிழ்கொண் டாட
வெற்பாருந் தோகையோடு கொடியு மாட
விளங்குதிருக் கரத்துறையும் வேலு மாட
அற்பாரு மடியவர்கள் போற்றுந் தெல்லி
யகமேவும் குருநாதா வாடீ ரூஞ்சல். (5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்புனையு நவமணிமா மாலை யாட
புரமதனிற் காந்தளம்பூ மாலை யாட
மின்பொலியுங் குழைசுடரிற் குலவி யாட
விரை செறியுங் கடம்புபுயங் கிடந்தே யாட
மன்னுமணி முடியாடப் பதக்கமாட
மாமணியார் கண்டிகையும் மார்பி னாட
அன்பர்கள் வாழ் தெல்லிநக ரத்தே மேவும்
அருள் முருகா குருநாதா வாடீ ரூஞ்சல். (6)

பங்கமறுஞ் சம்பாவி னமுதுந் நெய்யும்
பாறயிரும் முக்கனியும் பழமும் தேனும்
தெங்கிளநீர் வெற்றிலை பாக் காதி யான
செய்யநிவே தனங்களோடு பிறவுங் கொண்டு
தங்கள்மன மாரமிகு வழிபாடாற்றிச்
சந்ததமும் தொண்டுபுரி வோரை யாளுஞ்
செங்கடம்பந் தாருடையோய் தெல்லி மேவுந்
திருமுருகா குருநாதா வாடீ ரூஞ்சல். (7)

அடியவர்தம் மின்னலெலா மகன்றே நீங்க
ஆருயிர்கள் பிணிநீங்கி மகிழ்ச்சி கூர
மிடிமையெனும் பாவிநனி நில்லா தேக
வேந்தர்பயஞ் சாராமல் விலகிப் போகக்
கடினமுறும் பகைவர்துயர் கலங்கி யோடக்
ககனமழை பெய்துமிகு வாரி தேங்கக்
கொடிபுடைசூழ் தெல்லிநக ரத்தே மேவும்
குருநாதா பரநாதா வாடீ ரூஞ்சல் (8)

அன்பர் தமக் கினியாரே யாடீ ரூஞ்சல்
அகங்குழையார்க் கினியாரே யாடீ ரூஞ்சல்
மின்பொலியு முடியாரே யாடீ ரூஞ்சல்
மேவலர்போர் முடிப்பாரே யாடீ ரூஞ்சல்
இன்படியார்க் களிப்பாரே யாடீ ரூஞ்சல்
எண்ணலர்கட் களியாரே யாடீ ரூஞ்சல்
துன்பமெலா மகன்றோடத் தெல்லி வாழும்
சுடர்வடிவேற் குருநாதா வாடீ ரூஞ்சல். (9)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழி

பூமருவு மந்தணரும் பசுவும் வாழி
புரவலர்கள் செங்கோலும் புயலும் வாழி
நாமருவு மறையினொடா கமங்கள் வாழி
நலமருவு மடியார்க்க டாமும் வாழி
மாமகளும் மகிழ் தெல்லி நகரின் மேவும்
மான்மருகன் குருநாத னருளும் வாழி
ஏமமுறு பூசைவிழாச் செய்வோர் வாழி
எவ்வுயிரு மென்றென்றும் வாழி வாழி.

## எச்சரிக்கை

கூறுதுதி யமரர்க்கொரு கோவேயெச்ச ரிக்கை
குறிஞ்சிக்கொடி வள்ளிக்கருள் குமராவெச்ச ரிக்கை
தேறும்வடி வேலாவெங்க டேவேயெச்ச ரிக்கை
தெல்லிப்பதி மேவுங்குரு நாதாவெச்ச ரிக்கை.

## பராக்கு

நாதமுத லாயகுரு நாதா பராக்கு
நவ்விதரு மகளினொரு நாதா பராக்கு
தீதகலுமறை புகலுந் தெளிவே பராக்கு
தெல்லிநக ரத்துறையும் தேவே பராக்கு.

## மங்களம்

வல்லியுமை மைந்தனுக்கு மங்களம்—மாவின்
வடிவுசிதை வேலனுக்கு மங்களம்
தெல்லிநக ரீசனுக்கு மங்களம்—தேசு
சேர்ந்தகுரு நாதனுக்கு மங்களம்.

முற்றிற்று

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# திருப்பொன்னூசல்

## திருத்தில்லையில் அருளியது

### திருச்சிற்றம்பலம்

சீரார் பவளங்கால் முத்தங் கயிறாக
ஏராரும் பொற்பலகை ஏறி இனிதமர்ந்து
நாராயணன் அறியா நாண்மலர்த்தாள் நாயடியேற்
கூராகத் தந்தருளும் உத்தர கோசமங்கை
ஆரா அமுதின் அருட்டா ளிணைபாடிப்
போரார்வேற் கண்மடவீர் பொன்னூச லாடாமோ (1)

மூன்றங் கிலங்கு நயனத்தன் மூவாத
வான்றங்கு தேவர்களுங் காணா மலரடிகள்
தேன்றங்கித் தித்தித் தமுதூறித் தான்தெளிந்தங்
கூன்றங்கி நின்றுருக்கும் உத்தர கோசமங்கைக்
கோன்றங் கிடைமருது பாடிக் குலமஞ்ஞை
போன்றங் கனநடையீர் பொன்னூச லாடாமோ (2)

முன்னீறும் ஆதியும் இல்லான் முனிவர்குழாம்
பன்னூறு கோடி இமையோர்கள் தாம்நிற்பத்
தன்னீ றெனக்கருளித் தன்கருணை வெள்ளத்து
மன்னூற மன்னுமணி உத்தர கோசமங்கை
மின்னேறு மாட வியன்மா ளிகைபாடிப்
பொன்னேறு பூண்முலையீர் பொன்னூச லாடாமோ (3)

நஞ்சமர் கண்டத்தன் அண்டத் தவர்நாதன்
மஞ்சுதோய் மாடமணி உத்தர கோசமங்கை
அஞ்சொலாள் தன்னோடுங் கூடி அடியவர்கள்
நெஞ்சுளே நின்றமுதம் ஊறிக் கருணைசெய்து
துஞ்சல் பிறப்பறுப்பான் தூய புகழ்பாடிப்
புஞ்சமார் வெள்வளையீர் பொன்னூச லாடாமோ (4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணோ அலியோ அரிவையோ என்றிருவர்
காணாக் கடவுள் கருணையினால் தேவர்குழாம்
நாணாமே உய்யஆட் கொண்டருளி நஞ்சுதனை
ஊணாக உண்டருளும் உத்தர கோசமங்கைக்
கோணார் பிறைச்சென்னிக் கூத்தன் குணம்பரவிப்
பூணார் வனமுலையீர் பொன்னூச லாடாமோ (5)

மாதாடு பாகத்தன் உத்தர கோசமங்கைத்
தாதாடு கொன்றைச் சடையான் அடியாருள்
கோதாட்டி நாயேனை ஆட்கொண்டென் தொல்பிறவித்
தீதோடா வண்ணந் திகழப் பிறப்பறுப்பான்
காதாடு குண்டலங்கள் பாடிக் கசிந்தன்பால்
போதாடு பூண்முலையீர் பொன்னூச லாடாமோ. (6)

உன்னற் கரியதிரு உத்தர கோசமங்கை
மன்னிப் பொலிந்திருந்த மாமறையோன் தன்புகழே
பன்னிப் பணிந்திறைஞ்சப் பாவங்கள் பற்றறுப்பான்
அன்னத்தின் மேலேறி ஆடும்அணி மயில்போல்
என்னத்தன் என்னையும் ஆட்கொண்டான் எழில்பாடிப்
பொன்னொத்த பூண்முலையீர் பொன்னூச லாடாமோ.
(7)

கோல வரைக்குடுமி வந்து குவலயத்துச்
சால அமுதுண்டு தாழ்கடலின் மீதெழுந்த
ஞால மிகப்பரிமேற் கொண்டு நமையாண்டான்
சீலந் திகழுந் திருவுத்தர கோசமங்கை
மாலுக் கரியானை வாயார நாம்பாடிப்
பூலித் தகங்குழைந்து பொன்னூச லாடாமோ. (8)

தெங்குலவு சோலைத் திருஉத்தர கோசமங்கை
தங்குலவு சோதித் தனியுருவம் வந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமும் ஆட்கொள்வான்
பங்குலவு கோதையுந் தானும் பணிகொண்ட
கொங்குலவு கொன்றைச் சடையான் குணம்பரவிப்
பொங்குலவு பூண்முலையீர் பொன்னூச லாடாமோ.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்து

வாழ்க வாழ்க அன்னையே வாழ்க
வாழ்க வாழ்க புவனமுழுதும் வாழ்க
வாழ்க வாழ்க அருளும் பொருளும் வாழ்க
வாழ்க வாழ்க அனைத்தும் அனுதினம் வாழ்க.

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஏழாலை மஹாத்மா அச்சகம், கந்தர்மடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org